சிந்து வெளி தரும் 'ஒளி'

க. த. திருநாவுக்கரசு
எம். ஏ., (தமிழ்) எம். ஏ., (வரலாறு) எம். லிட்.,

வள்ளுவர் பதிப்பகம்

சிந்துவெளி தரும் ஒளி

க. த. திருநாவுக்கரசு,
எம். ஏ., (தமிழ்) எம். ஏ., (வரலாறு) எம். லிட்.

வள்ளுவர் பதிப்பகம்
855, வடக்கு இராச வீதி
புதுக்கோட்டை
திருச்சி மாவட்டம்.

வெளியீடு-2
இரண்டாம் பதிப்பு சனவரி, 1971
உரிமை பதிப்பகத்தாருக்கு

This book has been published with the
permission of the D. P. I. Dis. No. 1385 - 59
Dated 3 - 3 - 59

விலை ரூ. 2-50

இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு அச்சகம்,
காரைக்குடி-5, தொலைபேசி - 211

பதிப்பகக் குறிப்பு

நம்நாட்டு வரலாறு நம் மக்களால் இன்னும் நன்கு அறியப்படவில்லை. உண்மை வரலாறுகள் காலத் திரையை நீக்கி வெளிவரத் தொடங்கியுள்ளன. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர், பெருவாழ்வு வாழ்ந்து மண்ணால் மூடப்பட்டு மறைந்துபோன மாநகரங்கள் ஒன்றன்பின் ஒன்ருக வெளித் தோன்றி வருகின்றன. அவற்றுள் இரண்டே அரப்பாவும் மொகஞ்சொ-தாரோவும். சிந்துவெளிப் பகுதியில் புதையுண்டு மறைந்துபோன இந்நகரங்கள் வெளிப் படுத்தப்பட்ட பின்னர் நம் நாட்டின் தொன்மை நாகரிகம் இன்னதென அறிய முடிந்தது.

'சிந்துவெளி தரும் ஒளி' எனும் இச் சிறு நூல், நம் தொன்மை நாகரிகத்தை நம் தமிழ் மக்களுக்கு அறிவிக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது; ஆங்கில நூல்களுள் கூறப்பட்டுள்ள செய்திகளைத் திரட்டி இனிய எளிய தமிழில் தரப்படும் தொண்டினைக் கொண்டுள்ளது.

"சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் முந்தைய நாகரிகம்; இந்தியத் தொன்மை நாகரிகம் என்பது பழந் தமிழர் நாகரிகம் ஆகும்" என்னும் உண்மைகளை அறியும் வகையில் நம்மனோர் செல்வதற்கு இந் நூல் பெருந் துணை செய்யும்.

லும், பாகித்தானத்தில் காசி மாவட்டத்திலும் சிந்துவெளி நாகரிகத்தின் பழம்பொருள் சின்னங்கள் பல அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதனால், சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பும் பெருகிக்கொண்டே வருவதை அறிகிறோம். மாண்புமிக்க அந் நாகரிகத்தின் சிறப்பியல்புகளை எடுத்தியம்புவதே இந்நூல். இதனை M. A. (வரலாறு) தேர்வுக்குப் படித்துக்கொண்டிருந்தபொழுது எழுதினேன். அப்பொழுது இதே கல்லூரியில் (புதுக்கோட்டை அரசினர் கல்லூரி) தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

இதனைப் பதிப்பிக்க அனுமதி தந்த அரசியலார்க்கு எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இதனுள் காணப்படும் கொள்கைகளும், கருத்துக்களும் என்னுடைய சொந்தக் கருத்துக்களும் கொள்கைகளுமாகும். அவை எவ்விதத்திலும் அரசியலாரைக் கட்டுப்படுத்தா. இந்நூலில் காணப்படும் குற்றங்குறைகளுக்கு யானே பொறுப்பு. இந்நூல் பணித்துறைச் சார்பான வெளியீடன்று.

இந்நூல் என்னுடைய முதன் முயற்சி. இம் முயற்சியில் காணப்படும் கருத்து வேறுபாடுகளுக்கு இடந்தருமாறும், பிழைகளைப் பொறுத்தருளுமாறும் அன்பர்களை வேண்டுகிறேன்.

என் முயற்சிக்கு ஊக்கம் அளித்து இந்நூலினைப் பதிப்பிக்க முன் வந்த அண்ணல் சுப்பிரமணியனார் அவர்களுக்கு மிகப் பெரிதும் கடப்பாடுடையேன்.

புதுக்கோட்டை,
2–4–59.

க. த. திருநாவுக்கரசு

படையல்

புதுக்கோட்டையில் கல்வித் தொண்டும் தமிழ்த் தொண்டும் பல ஆண்டுகளாகச் செய்துவரும் அண்ணல்

பு அ. சுப்பிரமணியனூர்க்கு

அவர்தம் மணிவிழாவின் நினைவாக இச் சிறு நூலைப் படைத்து உரிமையாக்கு கின்றேன்.

- க. த. திருநாவுக்கரசு

உள்ளுறை

எண்	பொருள்		பக்கம்
1.	இருளில் ஒளி	—	10
2.	இருபெரும் நகரங்கள்	—	19
3.	வாழ்வும் வளனும்	—	46
4.	கடவுள் நெறி	—	88
5.	சிந்துவெளி எழுத்துக்கள்	—	98
6.	சிந்துவெளி மக்கள்	—	105
7.	சிந்துவெளி நாகரிகத்தின் காலம்	—	112
8.	சிந்துவெளியின் சிறப்பியல்புகள்	—	120
	மேற்கோள் நூல்கள்	—	127

இந்தியத் தாய்

"இந்தியாவின் கதை தொடங்கும் இந்தக் கட்டத்தில் (சிந்துவெளி நாகரிக காலத்தில்) இந்தியத்தாய் தேம்பி அழும் சிறு குழந்தையாகத் தோன்றவில்லை என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடலாம். அவள், இதற்கு முன்பே பல துறைகளில் நன்கு வளர்ச்சியுற்றவளாகக் காணப் படுகிறாள்; வாழ்க்கையில், அடைய முடியாத 'இயற்கையினைக் கடந்த உலக வாழ்வை'ப்பற்றிக் கனவு காண்பதில் ஈடு பட்டுத் தன்னை மறந்துவிடவில்லை. ஆனால், தற்கால நாகரிகத்தின் மிகச் சிறந்த சின்னங்களான குளிக்கும் அறை, வடிகால் வசதி ஆகியவற்றின் அமைப்பு முறைகளிலும், தொழில் நுட்ப அழகும் பயனும் வாய்ந்த பொருள்களைப் படைப் பதிலும் அவள் சிறப்புற்று விளங்கினாள்."[1]

— சவகர்லால் நேரு.

---

1 Discovery of India. P....60

1. இருளில் ஒளி

இந்தியாவின் தொல் பழங்கால வரலாறு, நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை, கற்காலப் பழம் பொருள் சின்னங்களுக்கு விளக்கம் தருவதில் தொடங் கியது. அடுத்து ஆரியர் இந்தியாவிற்கு வந்த வரலாற்றைக் கூறும். கற்காலத்திற்கும், ஆரியர் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தைப்பற்றி ஒன்றும் சொல்ல இயலாது அமைதியாக இருக்கும். இதனால், 'வேதகால நாகரிகத்திற்கு முன்பு இந்திய மண்ணில் நாகரிகத்தின் நறுமணம் வீசியது இல்லை' என்று வீறுடன் அறிஞர்கள் எழுதியும் பேசியும் வந்தனர். இந்தியாவின் வரலாறு, கி. மு. 1500-க்கு முற்பட்ட தன்று என்று மேனாட்டாசிரியர்கள் அழுத்தம் திருத்த மாகக் கூறினர். ஆனால் கி. பி. 1920-க்குப் பிறகு இந்தியாவில் நடைபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சி, இந்திய வரலாற்றின் தொடக்கமும் தொன்மையும், ஈடும் இணையுமற்றன என்பதை உலகம் அறியச் செய்தது. சிந்துநதி பாயும் பெருவெளியில் செய்யப் பட்ட இவ்வாராய்ச்சி, இந்திய வரலாற்று வானில் கவ்வி இருந்த இருளைப் போக்க நல்லதொரு நாகரிகத்தின் ஒளியைத் தந்துதவியது.

சிந்துவெளி நாகரிகம் மக்களின் வரலாற்றிற்குப் புத்தொளி தந்து புதியதொரு பொலிவினை அளித்

திருக்கிறது. இந்திய வரலாற்றின் 'இருண்ட காலத்தை' எழில்மிக்க பொற்காலமென இயம்புகிறது; இந்திய நாகரிகத்தின் அடிப்படைப் பண்புகளாக விளங்குவன யாவும், சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பியல்புகளே என்னும் வரலாற்றின் குரலைக்கேட்டு உலகம் வியக்கும் வண்ணம் செய்துளது. 'சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் தொன்மைக்கு ஓர் அளவு கோல்; இந்தியப் பண்பாட்டின் சிறப்பிற்கு ஓர் உரைகல்' என்னும் அரிய உண்மையை உலகிற்கு உணர்த்துகிறது.

சிந்துவெளியின் சின்னங்கள் :

1920-ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில், இராவி-சட்லெஜ் ஆறுகளுக்கிடையில் தோண்டியபொழுது 'அரப்பா' என்னும் இடம் அகப்பட்டது. 1922-இல் சிந்து மாநிலத்தில், லர்க்காரு மாவட்டத்தில் இருந்த எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று தொல் பொருள் ஆராய்ச்சியாளர் கருத்தைக் கவர்ந்தது. அம் மேட்டின் மேல் உயர்ந்த புத்த சமயத் தூண் ஒன்று நாட்டப்பெற்று இருந்தது. அதன் சுற்றுப்புறத்தைத் தோண்டும் வேலையில் டாக்டர் பானர்ஜி என்னும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஈடுபட்டார். அவர் அவ்விடத்தை அகழ்ந்தெடுத்தபோது, அதன் கீழிருந்து 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாணயங்களைக் கண்டெடுத்தார். மேன்மேலும் அப்பகுதியினை அகழ்ந் தெடுத்தபோது ஓவிய எழுத்துக்களையுடைய முத்திரை களைக் கண்டு வியப்புற்றார். மொகஞ்சொ - தாரோவின் பழமையை இவை சுட்டிக் காட்டின. இவ்விரு சின்னங்

களும் சிந்து நதியின் கரையோரங்களில் அமைந் துள்ளன; இவற்றிற்கு இடையே சற்றேறக் குறைய மூந்நூறு கல்தொலைவு ஆற்றுவெளி பரந்து இருக் கிறது. இவ்வெளியில் உள்ள மண் மேடுகளை அகழ்ந்து எடுக்கும் பணியினை இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் மேற்கொண்டது.

இவை அல்லாமல், சிந்துவிலும், பலூசித்தானத் திலும் உள்ள பல சிற்றூர்களில் சற்று ஏறக்குறைய இந்நாகரிகத்தைச் சார்ந்த சின்னங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பு வாய்ந்தன வாகக் கருதப்படுவன (1) குவெட்டா (2) அம்ரி (3) நல் (4) குள்ளி-மெகி (5) சோபுவெளி ஆகிய இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பழம்பொருள் சின்னங்களாகும். அவை ஒவ்வொன்றிலும் தனிச் சிறப்பு வாய்ந்த மண்பாண்டங்கள் பல கிடைத் துள்ளன. அவற்றின் சிறப்பைக் காண்போம்.

குவெட்டா :

குவெட்டாவின் தென் பகுதியில் இருபது இடங் களில் காணப்பட்ட மண்மேடுகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அகழ்ந்தெடுத்துள்ளனர். அவ்விடங் களில் மஞ்சள் நிற மண்பாண்டங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றை நன்கு ஆராய்ந்து பார்த்த பிக்கட் (**Piggott**) என்னும் அறிஞர், அவ்விடத்தில் மண் பாண்டத் தொழிற்சாலை ஒன்று இருந்திருக்க வேண்டு மென்று கருதுகிறார். மண்பாண்டங்கள் யாவும் கண் கவர் நேர்த்தியும் உறுதியும் உடையன; சிறந்த முறை

யில் நிறம் பூசப்பெற்றுள்ளன. சிலவற்றில் விலங்குகளின் உருவங்களும், பலவற்றில் கீற்று ஓவியங்களும் தீட்டப்பெற்றுள்ளன. இவை இரானில் கிடைத்துள்ள மண்பாண்டங்களோடு (கி. மு. 3000) ஒப்புமை உடையனவாக உள்ளன.

அம்ரி-நல் :

மொகஞ்சொ-தாரோவின் தெற்கே, சிந்துவெளியில் '**அம்ரி**' என்னும் இடத்திலும், பலூசித்தானத்தில் '**கலாத்**' என்னும் குன்றுகளிடையே அமைந்துள்ள ஊருக்கு அருகில் '**நல்**' என்னும் இடத்திலும் மங்கிய மஞ்சள் நிற மண்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இவ்விரு பழம் பெரு நாகரிகச் சின்னங்களை '**அம்ரி-நல் நாகரிகம்**' என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவர். அம்ரியில் கிடைத்துள்ள மண்பாண்டங்கள் அரப்பா நாகரிகத்தைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டனவாம். 'நல்' என்னும் இடத்தில் பரந்ததொரு இடுகாடு தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. அதனுள், திறந்தவெளிகளில் பறவைகளும் விலங்குகளும் தின்னுமாறு கிடத்தப்பட்ட பிணங்களின் அறைகுறையான எலும்புக் கூடுகள் புதைக்கப்பட்டுள்ளன. அரப்பாவில் பெரும்பாலும் பிணங்களின் முழு எலும்புக் கூடுகள் காணப்படுகின்றன. இவ்விரண்டையும் நோக்கும்பொழுது 'நல்' நாகரிகம் அரப்பாவைவிட முந்தியதாகத் தோன்றுகிறது. இவ்விடத்தில் கிடைத்துள்ள மண்பாண்டங்கள் மங்கிய மஞ்சள் நிறமுடையன. ஆனால், அதனிடையே வெண்மை நிறம் பட்டையாகத் தீட்டப்பெற்று இருக்கிறது. அதன்மேல்

பலவகை நிறங்களில் கீற்று ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன. 'அம்ரி'யில் குமிழ்களையுடைய குவளைகள் பல கிடைத்துள்ளன. 'நல்'லில் காணப்படும் விலங்கின் உருவங்கள் 'அம்ரி'யில் கிடைத்துள்ள மண்பாண்டங் களில் காணப்படவில்லை. இதனால், 'நல்' அவ் விடத்திலேயே தோன்றிய மண்பாண்டக் கலையின் சிறப்பினைச் சுட்டிக் காட்டுகிறது.

அம்ரியில் விளையாட்டு வண்டிகள், மண் பாண்டங்கள், பொம்மைகள், வளையல் துண்டுகள், மண் அப்பங்கள், பச்சை நிற மணிகள் முதலியனவும், விளையாட்டிற்குப் பயன்படும் தேர்கள், காளை மாடுகள் முதலிய மொம்மைகளும் கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்துள்ள பொருள்கள் அனைத்தும் மொகஞ்சொ-தாரோவில், கிடைத்துள்ள நாகரிகச் சின்னங்களோடு பெரிதும் ஒத்திருக்கின்றன.[1]

குள்ளி–மெகி :

பலூசித்தான மலைகளின் தெற்கு அடிவாரத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட சின்னத்தைக் 'குள்ளி' (Kulli) என்பர். அவ்விடத்திலிருந்து வடகிழக்குத் திசையில் சிறிது தொலைவு கடந்து சென்றால், 'மெகி' (Mehi) என்னும் பழம்பொருள் சின்னம் இருக்கிறது. இவ் விரண்டிற்கும் இடையே இருபத்தைந்து சின்னங்கள் கிடைத்துள்ளன. மெகியில் எரித்த பிணங்கள் புதைக்

1 The Cambridge History of India — The Indus Civilization P. 12....Sir Mortimer Wheeler.

கப்பட்ட இடுகாடு காணப்படுகிறது. குள்ளி—மெகியில் வீடுகள் பல அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அவை காரை பூசப்பெற்ற கற்களாலும், உலர்ந்த செங்கற்களாலும் கட்டப்பட்டு இருக்கின்றன. இவ்விடங்களில் சுட்ட செங்கற்கள் காணப்படாமை குறிப்பிடத்தக்கது. மண்பாண்டங்களில், அரப்பா மண்பாண்டக் கலையின் நிழலாடுவதையும், சாயல் படிந்து இருப்பதையும் காணலாம். அரப்பாவைப் போன்றே மண்பாண்டங்கள் சிவப்பும் கருப்பும் கலந்த, வண்ணம் பூசப் பெற்றுள்ளன. மண்ணால் செய்யப்பட்ட தூபகொலுசு ஒன்றும் கிடைத்து இருக்கிறது.

மெகியில் கல்லினல் செய்யப்பட்ட குடங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. அக் குடங்களின் உட்பகுதி நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சில குடங்கள் அறைகுறையாகச் செய்யப்பட்டு உள்ளன. இதனல் இக்குடங்கள் அவ்விடத்திலேயே செய்யப் பட்டு இருக்க வேண்டும் எனத்தோன்றுகிறது. இக் குடங்களைப் போன்றவை மொகஞ்சோ—தாரோவிலும், மெசொப்பொட்டேமியா, தென்பாரசீகம் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. இதனல், குள்ளி—மெகி நாகரிக காலத்தில், அவ்விடத்து வாழ்ந்த மக்கள், கற்குடங்களில் நறுமண எண்ணெயை (தைலத்தை) அடைத்து, அயல் நாடுகளுக்குக் கடல் வழியாக எடுத்துச் சென்று வாணிகம் செய்து இருக்க வேண்டும் என்பர் சர் மார்ட்டிமர் வீலர்.[1]

[1] CHI—IV. P—14.

சோபுவெளி நாகரிகம் :

பலூசித்தானத்தின் வடக்கில் சோபு ஆறு சிந்துவெளி நோக்கிப் பாயும் பகுதியில், கிடைத்துள்ள பல சின்னங்களால் அறியப்படும் நாகரிகத்தைச் **சோபுவெளி நாகரிகம்** என்று தொல்பொருள் ஆராய்ச்சி யாளர் பெயரிட்டுள்ளனர். 'குந்தை' என்னுமிடத்தில் உள்ள சின்னத்தை மட்டும் நன்கு அகழ்ந்தெடுத்து ஆராய்ச்சிகள் நடத்தி உள்ளனர். அவ்விடத்தில் காணப்படும் நாகரிகம் நான்கு நிலைகளைக் கொண்ட ஒன்ருக இருந்திருக்கிறது. முதலாவதாக உள்ளது மிகத்தொன்மை வாய்ந்த நாகரிக நிலையாகும்; மக்கள் நாகரிகம் என்பதையே அறியாதவர்களாக இருந்த நாடோடி வாழ்க்கையைக் குறிக்கிறது. இரண்டாவது நிலை, நாகரிகம் வேறு இடத்திலிருந்து கொண்டு வரப் பட்டதைத் தெரிவிக்கிறது. இதனை மண்பாண்டங் களினுல் அறிகிருேம். மண்பாண்டங்கள் செந்நிற மானவை. அவை வடகிழக்கு இரானில் செய்யப்பட்ட (கி. மு. 3500) மண்பாண்டங்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. பெரும்பாலும் அரப்பா மண்பாண் டங்களுக்கு இவை முன்மாதிரியாக இருந்திருக்கலாம். உருளைகளினுல் வனையப்பட்டு, கருப்பு வண்ணத்தால் விலங்குகளின் உருவங்களும், கீற்று ஓவியங்களும் தீட்டப்பெற்றுள்ள மண்பாண்டங்கள் பல கிடைத் துள்ளன. மூன்ருவதுநிலை, அவ்விடத்தில் தோன்றிய நாகரிகத்தின் தன்மையினை விளக்குவதாகும். இறுதி யாக உள்ள நாகரிகநிலை, நன்கு முதிர்ச்சியுற்ற நாகரிகமாகும். வெளிநாடுகளோடு கொண்டிருந்த தொடர்பினை இந்நான்காம்நிலை நன்கு எடுத்தியம்பு

கிறது. சிந்துவெளி, ஏலம், எகிப்து, மெசொப் பொட்டேமியா, சுமேரியா முதலிய இடங்களில் கிடைத்துள்ள பழம்பொருள் சின்னங்களோடு பெரிதும் ஒப்புமையுடைய பொருள்கள் பல சோபுவெளி நாகரிகத்தின் நான்காவது நிலையில் கிடைத்துள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இவை யாவும், வடமேற்கு இந்தியாவின் பரந்த ஆற்றுவெளியில் தொல் பழங்கால நாகரிகம் ஒன்று நிலவி இருந்ததெனச் சாற்றுகின்றன. அந்நாகரிகம் முதன் முதலில் கிராம நாகரிகமாகவே இருந்தது. வேளாண்மையும், கால்நடைகளைப் பேணி வளர்த்தலுமே அக்காலத்திய மக்களின் முதன்மையான தொழில்களாக இருந்தன. வேட்டையாடுதலும் மீன் பிடித்தலும் பொழுது போக்காக இருந்தன. வீடுகள் கல்லாலோ உலர்ந்த செங்கற்களாலோ கட்டப்பட்டு இருந்ததாகத் தெரிகிறது. அந்நாகரிகத்தின் ஊற்றாக இருந்த மக்கள், ஆறுகளில் அணை போட்டுக் கால்வாய் களின் வழியே நீரைப் பாய்ச்சி, வேளாண்மை செய் தனர். மண்பாண்டங்களை விதவிதமாகச் செய்து பல வண்ண ஓவியங்களைத் தீட்டி மெருகு கொடுத்தனர். உலோகங்களில் செம்பை மட்டும் பயன்படுத்தக் கற்றிருந்தனர்.

நாளடைவில் இந்தக் கிராம நாகரிகம் வளர்ச்சி யுற்று சிறந்த நிலையினை அடைந்தது. அதன் பயனாகப் பெரிய நகரங்கள் தோன்றலாயின. நகரங்களிலிருந்து உலகம் வியக்கக்கூடிய மாபெரும் நாகரிகமான சிந்து வெளி நாகரிகம் அரும்பியது; பல நூற்றாண்டுகள்

தனித்து—தழைத்து ஓங்கிப் போதாக மாறியது; அயல் நாட்டுப் பழம்பெரும் நாகரிகங்களின் தென்றல் வீசியதன் பயனாகச் சிந்துவெளி நாகரிகம் மலர்ச்சி யுற்றது. சிந்துவெளி நகரங்கள் நல்ல பொறியியல் திறனை அடிப்படையாகக் கொண்டு நல்வாழ்விற்குரிய வசதிகளுடன் அமைக்கப் பெற்றுள்ளன. நகர் அமைப்பில் மொசொப்பொட்டேமியாவின் தலைநகரான 'ஊரின்' அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டு இருக் கிறது. அங்குள்ள தெருக்கள் எல்லாம் வளைந்தும் குறுகியும் கிராமங்களில் காணப்படும் தெருக்களைப் போன்று உள்ளமையால், அவை அக்காலத்து வளர்ச்சி அடையும் நிலையில் இருந்தனபோலும்! சிந்துவெளி நகரங்கள், அமைப்புத் திட்டத்தில் நன்கு வளர்ந்து, முதிர்ச்சியுற்ற நிலையை அடைந்துள்ளமை சிந்து வெளியின் சின்னங்களால் புலனாகின்றது.1

1 CHI — The Indus Civilization P — 16
- Sir Mortimer Wheeler.

2. இருபெரு நாகரிகங்கள்

அன்றைய நிலை :

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திய இந்திய நாகரிகத்தை அறிவதற்குப் பெரிதும் உதவியாக இருப்பது சிந்துவெளியில் செய்யப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியேயாகும். லாகூருக்கும் முல்தானுக்கும் இடையே கிடைத்துள்ள சின்னத்தை **'அரப்பா'**, என்பர். சிந்து மாநிலத்தில் 'லர்க்காணு' மாவட்டத்தில் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ள சின்னம் **'மொகஞ்சொ-தாரோ'** எனப்படுவது ஆகும். இந்த இடங்களில் தனிச் சிறப்பும், தனிப் பண்பும் வாய்ந்த நாகரிகம் அரும்பி மலர்ச்சியுற்றதைக் காணுகின்றோம். இதனைச் **'சிந்து வெளி நாகரிகம்'** என்று கூறுவது மரபு. இவ்விடம், அந்தக் காலத்தில் நீர்வளமும் காட்டுச் செல்வமும் உடையதாக இருந்திருக்க வேண்டும். அவ்விடத்தில் சிந்துவும், அதன் கிளையாறுகளும் பாய்ந்ததோடு அல்லாமல், 'பெருமிகிரன்' என்ற ஆறும் கி. பி. பதினைன்காம் நூற்றாண்டுவரை பாய்ந்து சிந்து வெளியை வற்றாத வளம் கொழிக்கும் நாடாக்கியதாம். இதனால், இன்றைய சிந்து மாநிலம், அக்காலத்தில் நல்ல நீர்வளமும் நிலவளமும் உடைய மாநிலமாக விளங்கி இருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. பல ஆறுகள் பாய்ந்தோடும் ஆற்றுவெளியாக உள்ளமை

யால் வெள்ளப் பெருக்கினால் கரை ஓரங்களில் அமைந்த நகரங்கள் பலமுறை அழிந்தன. இதனை, அழிவுற்ற நகரின் அடிப்படைக் கற்களாகப் பெரும் மதிற் சுவர்களும், வீட்டின் மாடிகளும் காணப்படுவதைக்கொண்டு அறியலாம்.

*

மொகஞ்சொ-தாரோ

நகரின் அடுக்குகள்:

மொகஞ்சொ-தாரோ என்னும் சொல்லிற்கு **"மறைந்தோர் மண்மேடு"** என்று அம்மாவட்ட மொழியில் பொருள் கூறப்படுகிறது. இவ்விடம் ஒரு காலத்தில் சிறப்புடன் திகழ்ந்த நகரமாக விளங்கியது. இம் மண் மேட்டினை அகழ்ந்து எடுத்ததன் பயனாக இதுவரை ஏழு அடுக்குகளைக் கொண்ட அழிந்த நகரைக் கண்டுள்ளனர். மேலே உள்ள மூன்று அடுக்குகளும் காலத்தால் பிற்பட்டவை; இடையில் உள்ள மூன்று அடுக்குகளும் இடைக்காலத்தன; இந்த ஆறு அடுக்குகளுக்கும் கீழே உள்ள அடுக்கு, மிகத் தொன்மை வாய்ந்தது என்பர் தொல்பொருள் ஆராய்ச்சியாளர். ஏழாவது அடுக்கின் கீழே இவற்றைவிடக் காலத்தால் முந்திய அடுக்குகள் இருக்கின்றன. அவற்றை அகழ்ந்து எடுக்க முடியாதவாறு நீர் சுரந்துகொண்டே இருக்கிறது 1950-ஆம் ஆண்டில் ஏழாவது அடுக்கிற்குக் கீழ், சிறிதளவு தோண்டிய போது மொகஞ்சொ-தாரோ நாகரிகத்தில் எத்தகைய வேறு

பாடும் காணப்படவில்லை என்பர் சர் மார்ட்டிமர் வீலர். இதனால், சிந்துவெளி நாகரிகத்தில் எத்தகைய இடையீடுமின்றித் தொடர்ந்து விளங்குவதற்குரிய அறிகுறிகள் காணப்படுவதாகத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

நகர் அமைப்பு:

மொகஞ்சொ-தாரோவைக் காணச் செல்லுபவர், அந்நகரின் அமைப்புத் திட்டத்தையும் வாழ்க்கை நல வசதிகளையும் கண்டு, பண்டை இந்திய மக்கள் நகர் அமைப்பில் பெற்றிருந்த சிறந்த தேர்ச்சியினை நினைந்து வியப்படைகின்றனர். அவ்விடத்திற்குச் சென்ற ஆங்கில நாட்டு எழுத்தாளர் ஒருவர், லங்காசையர் வட்டத்தில் உள்ள பாட்டாளி மக்கள் வாழும் நகரப் பகுதி (Working Town) யின் நடுவே இருப்பதைப் போன்று தனக்குத் தோன்றுவதாகக் குறிப்பிட்டுள்ளார். நகருக்குள் வடக்கில் இருந்தும் தெற்கில் இருந்தும் முதல் தெருவின் வழியாகச் செல்லலாம். முதல் தெரு அகன்றும் நீண்டும், வண்டிகளும் கால்நடையாளர்களும் வசதியாகச் செல்லுவதற்கு ஏற்ற வண்ணம் அமைந்துள்ளமை சிறப்புடைத்தாகும். கிழக்குத் தெருதான் அழிந்துபட்ட மொகஞ்சொ-தாரோவின் எல்லாப் பகுதிகளுக்கும் செல்ல வசதியுடையதாக இருக்கிறது. இத்தெருவே, மற்ற தெருக்கள் எல்லாவற்றைக் காட்டிலும் அகலம் உடையதாகக் காணப்படுகிறது. முதல் தெருவும் கிழக்குத் தெருவும் கூடும் பகுதியினைத் தொல்பொருள்

ஆராய்ச்சியாளர் "ஆக்ச்போர்டு சர்க்கசு" (Oxford Circus) என்னும் 'செல்லப்' பெயரிட்டு அழைக்கின்றனர்.

இந்நகரினைப் பல பகுதிகளாகப் பிரித்துள்ளனர். ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் எத்தகைய சிறு வேறுபாடும் கிடையாது. எல்லாப் பகுதிகளும் ஒரே அடிப்படையில் ஒழுங்காகப் பிரிக்கப்பட்டுள்ளன. வரிசையாக அமைக்கப்பட்டு உள்ள தெருக்களும், வீடுகள், பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றின் அமைப்புக்களும் செம்மையான ஒரு முறையை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன. இதனால், மொகஞ்சொ-தாரோவின் நகர அமைப்பு முன் கூட்டியே சிந்தித்துத் திட்டம் போட்டுப் பிறகு அமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

தெருக்கள் :

மொகஞ்சொ-தாரோவின் தெருக்கள் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் அமைந்து உள்ளன. நல்ல காற்றோட்டத்துக்கு உரிய வசதிகளோடு அகன்றும் நீண்டும் இருக்கின்றன. இத் தெருக்களோடு பல குறுந்தெருக்கள் வந்து கலக்கின்றன. தெருக்கள் 9 முதல் 34 அடி வரை அகலம் உடையனவாக உள்ளன. தெருக்கள் கூடும் இடங்கள் நேர்க்கோணங்களில் உள்ளன. இதனால், நகரத்தின் அமைப்பு பல சதுரங்களாக அல்லது நீண்ட சதுரங்களாகப் பிரிக்கப்பட்டதைப் போன்று காணப்படு

கின்றது. இச் சதுரங்களைப் பல குறுந்தெருக்கள் வெட்டிச் செல்லுகின்றன. இக் குறுந்தெருக்களில் வீடுகள் நிறைந்துள்ளன. ஒவ்வொரு குறுந் தெருவிலும் பொதுக்கிணறு ஒன்று இருக்கிறது. பெரும்பாலான வீடுகளில் கிணறுகளும் குளிக்கும் அறைகளும் இருக்கின்றன. எந்த வீடும் தெருக்களின் எல்லையினைக் கவராது, மனையின் எல்லைக்குள்ளேயே கட்டப்பட்டு உள்ளமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. சுமேரியாவில், வீட்டின் எல்லையை மீறித் தெருக்களில் வீடுகள் கட்டியுள்ளதை நினைக்கும்போது, இந்நகர மக்களின் குடிமைப் பண்பு பாராட்டுதற்கு உரியதாகும்.

வடிகால் வசதி:

ஒவ்வொரு தெருவிலும் கால்வாய்கள் உள்ளன. அவை தெருவின் இரு பக்கங்களிலும் அழகுற அமைக் கப்பட்டுள்ளன. இவை யாவும் ஒரே அளவில் வெட்டிச் சுட்டுத் தேய்த்து வழவழுப்பாக்கப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. வீட்டின் வடிகால்கள் தெருக் கால் வாயுடன் சேரும் இடங்களில் சதுர வடிவில் செங் கற்கள் கொண்டு கட்டப்பட்ட சிறு குழிகள் காணப்படு கின்றன. அக்குழிகளின் அடியில் துளைகள் உள்ள தாழிகள் புதைக்கப்பட்டுள்ளன. வீட்டுச் சாக்கடைகள் வழியே கழிவு நீருடன் குப்பை கூளங்கள் வந்து தாழி களில் வீழ்ந்து, தாழிகளில் உள்ள துளைகளின் வழியாக அந்நீர் வெளியில் உள்ள தொட்டியில் வடிந்து சென்று, நிரம்பி வழிந்து தெருக் கால்வாயில் கலக்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. தாழியில் தங்கிய குப்பை கூளங்களை, நகராண்மைக் கழக ஊழியர்கள் அவ்வப்

போது தூய்மை செய்வர். தெருக்களில் ஓடும் கால் வாய்கள் சதுர வடிவமுள்ள செங்கற்களால் மூடப்பட்டுள்ளன. இக் கால்வாய்கள், தெருக்களின் கோடியில் உள்ள பெரும் தொட்டிகளில் வீழ்ந்து, அங்கிருந்து ஒரு பெரிய கால்வாயாக நகருக்கு வெளியே ஓடுகிறது. ஒவ்வொரு தெருவின் மூலையிலும் சிறிய தனி அறைகள் உள்ளன. அவை தெருக்களைக் காக்கும் காவற்காரர்கள் இரவில் தங்கும் அறைகளாக இருக்கலாம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

சிந்துவெளி நாகரிகத்தின் மிகச் சிறந்த பண்புகளில் ஒன்றாக அந்நகரங்களின் விரிவான வடிகால் வசதி விளங்குகிறது. அதே பழமை வாய்ந்த வேறெந்தப் பழம்பெரும் நாகரிகச் சின்னங்களிலும் காண முடியாத உயிர் ஓட்டத்தை இந்நகரில் காண்கிறோம். செங்குத்தானதும், தரை மட்டமானதுமான இருவகை வடிகால் முறையினைச் சிந்துவெளியில் காண்கிறோம். இத்தகைய ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த சிந்துவெளி வடிகால் திட்டத்திற்கும் சுமேரியாவின் வடிகால் திட்டத்திற்கும் பெருத்த வேறுபாடு உள்ளமை குறிப்பிடத் தக்கது. சிந்துவெளி வடிகால் திட்டத்தை நன்கு ஆராய்ந்து பார்த்த சர் மார்ட்டிமர் வீலர், ' இந்நகரின் தெருக்கள் வடிகால் வசதியோடு விளங்குவதற்கு நிகராக, கிரேக்க ரோம நாட்டு நாகரிகப் புகழ் வாய்ந்த நகரங்களிலும் காண முடியாது. மேலும் மேலை நாட்டு நாகரிகத்தைக் காணாத கீழ்த்திசை நாடுகள் இதன் அருகில் கூட வர முடியாது"[1] என்று குறிப்பிட்டுள்ளார்.

---

1 CHI—IVC P—40.

செங்கற்கள் :

எழில் மிக்க இத்தெருக்களில் உள்ள கட்டடங்கள் அனைத்தும் வரிசையாகத் தொடர்ந்து அழகுறக் கட்டப் பட்டுள்ளன. வெள்ளப் பெருக்கினால் உண்டான அழிவிற்குப் பிறகு கட்டப்பட்ட வீடுகளின் இடையே தான் இடைவெளிகள் உள்ளன. எல்லாக் கட்டடங் களும் பெரும்பாலும் பருத்த சுவர்களால் அமைக்கப் பட்டுள்ளன. இச் சுவர்கள் அனைத்தும் சுட்ட செங்கற் களாலும் வெய்யலில் உலர்த்தப்பட்ட கற்களாலும் கட்டப்பட்டுள்ளன; பதினெட்டு அடி முதல் இருபத் தைந்து அடி உயரம் உள்ளதாக, ஆற்றில் உண்டாகும் வெள்ளப் பெருக்கினால் சிதையா வண்ணம் திண்மை யாகக் கட்டப்பட்டுள்ளன.

பொதுவாகச் செங்கற்கள் ஒன்பது அங்குல நீளமும், நாலரை அங்குல அகலமும், இரண்டரை அங்குலப் பருமனும் உடையதாகச் செய்யப்பட்டுள்ளன. சிந்துவெளியில் கிடைத்துள்ள செங்கற்களைக் கூர்ந்து நோக்கினால், பல வகையான செங்கற்கள், பலவிதமான கட்டட வேலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரி கின்றது. செங்கற்கள் கோணலும் மேடு பள்ளங்களும் இல்லாமல், நன்றாக அறுக்கப்பட்டுச் சமன் செய்யப் பட்டுள்ளன. கிணறு கட்டுவதற்கு ஆப்பு வடிவச் செங் கற்கள் பயன்படுத்தப்பட்டன. பாலம், மதகு, வளைவு கள் ஆகியவற்றைச் சிறு வகையான செங்கற்களைக் (கண்டி கற்களை) கொண்டு கட்டியுள்ளனர். கழி நீர் வடிகால்கள் பெரிய செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. பெரும் மதில்களைக் கட்டுவதற்கு 29 அங்குல நீளமும்,

12 அங்குல அகலமும், எட்டு அங்குலப் பருமனும் உடைய செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச் செங்கற்கள் பல வகை உருவ அமைப்புக்கள் உடையனவாகச் செய்யப்பட்டிருக்கின்றன. சதுரங்களாவும், நீண்ட சதுரங்களாகவும் சில செங்கற்கள் செய்யப்பட்டுள்ளன. சில வளைவாகவும், ஆப்பு வடிவமாகவும் உள்ளன. சில நன்ருகத் தேய்க்கப்பட்டு வழுவழுப்பாகக் காணப்படுகின்றன. சில கற்கள் மூலைகளில் வைத்துக் கட்டுவதற்கு ஏற்ற வகையில் முக்கோண வடிவமாக வெட்டப்பட்டு உள்ளன.

மொகஞ்சொ-தாரோவில் உள்ள ஏழடுக்குகளுள் கட்டட வேலைப்பாட்டுத் திறம் நாளுக்கு நாள் நலிந்து வந்துள்ளதைப் பிற்காலத்திய மூன்றடுக்குகளால் அறிகிருேம். சேற்றுக் கலவையே செங்கற்களைப் பொருத்தும் காரையாகப் பயன்படுத்தப்பட்டது. நீர் சுவறி, சுவர் கெடாமல் இருக்க நிலக்கீல் சில இடங்களில் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. மொகஞ்சொ-தாரோவில் செங்கல் சூளை ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதை நோக்கும்போது, செங்கற்கள் சிந்துவெளியிலேயே செய்யப்பட்டன என்பது புலனுகின்றது.

நாகரிகத் தொன்மை வாய்ந்த எகிப்து, சுமேரியா பாபிலோனியா, கிரீசு முதலிய பொன்ருப் புகழ் பெற்ற நாடுகளில் சூளையிடப்பட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடங்களைக் காண்பது அரிதாக இருக்கிறது. உரோமப் பேரரசினை நிறுவிய அகஸ்தசு காலத்தில்தான், சுட்ட செங்கற்களைப் பயன்படுத்தும் முறையை மேலை நாடுகள் அறிந்தன. சிந்துவெளியில்

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பே செங்கற்களால் கட்டப்பட்ட மாபெரும்மண்டபங்களேக்காணுகின்ருேம். இதனுல், சிந்துவெளி மக்கள்தான் உலகில் முதன்முதல் செங்கற்களேச் செய்யக் கற்று இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

கட்டடங்கள்

1. வீடுகள்:

மொகஞ்சொ-தாரோவில் உள்ள கட்டடங்களில் சில இரண்டு மூன்று அடுக்குகளே உடைய மாடி வீடுகள்; பல பரந்த முற்றங்களேயுடைய ஓரடுக்கு வீடுகள். இவையாவும் மேலே தளம் இடப்பெற்றவை. மழை பெய்தால் அந்நீர் உடனடியாகக் கீழே விழுவதற்குரிய குழாய்கள் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு அறைகளேக் கொண்ட சிறிய வீடுகள் முதல் பெரும் அரண்மனேகள் வரை இங்குள்ளனவாம். சில பெரிய கட்டடங்களின் நடுவில் பெரிய அகலமான முற்றங்கள் அமைந்துள்ளன. இதைச் சுற்றிப் பல அறைகள் அமைந்துள்ளன. அவை யாவும் பெரியவாக இல்லே. எனினும், காற்ருேட்டம் உடையனவாக அமைந்துள்ளன. ஞாயிற்றின் ஒளியும், காற்றும் உள்ளே புகுவதற்கு ஏற்பப் பலகணி (சன்னல்)கள் வைக்கப்பட்டுள்ளன. அவை ஆறடி நீளமும் நாலடி அகலமும் உடையனவாக வீட்டின் சுவர்களில் பொருத்தப்பட்டுள்ளன.

வீட்டின் வாயில்கள் பெருப்பாலும் குறுந்தெருக்களில் அமைக்கப்பெற்றுள்ளன;பெரும்பாலானவைநான்கு அடி உயரம் உள்ளன. இதனுல் மொகஞ்சொ-தாரோவில்

வாழ்ந்த மக்கள் சுமேரியரைப்போன்று குள்ளமாக இருந்திருக்கலாம் என்று டாக்டர் மக்கே கருதுகின்றார்.[1] ஒவ்வொரு வீட்டிற்கும் குளிக்கும் அறை இருந்திருக்கிறது. வீட்டின் மாடிக்குச் செல்வதற்குக் கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகள் சிறந்தவை; தற்கால மாடிப் படிக்கட்டுகளோடு அவை பெரிதும் ஒத்திருக்கின்றன. கிணற்றுச் சுவர்களில் கயிற்றின் உராய்வும், உருளைகளின் பதிவுகளும் இன்றும் காணப்படுகின்றன. இந்நகரில் உள்ள பெரும் பாலான வீடுகளில், மலம் கழிப்பதற்குரிய "கழிநீர்" விடுநிகள் இன்றைய மேனாட்டு முறையில் காணப்படுகின்றன.[2] இவையல்லாமல் பெரும்மாளிகையின் தோற்றமுடைய கட்டடங்களும், அரண்மனையினைப் போன்ற அமைப்பினையுடைய கட்டடங்களும் காணப்படுகின்றன.

2. நகராட்சி மன்றம்

மொகஞ்சொ-தாரோவில் காண்பார் உள்ளத்தைக் கவரத் தக்கதாகப் பல பெருந்தூண்களைக் கொண்ட பெருங்கட்டடம் ஒன்று காட்சியளிக்கிறது. அது ஒருகால் நகராட்சி மன்றமாகவோ, கோயிலாகவோ இருந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அக் கட்டடத்தின் உள்ளே அகழ்ந்தெடுத்தபோது

---

1 Dr. Mackay: The Indus Valley Civilization, Part I, P—202.

2 Sir John Marshall—Mohenjo-Daro and Indus Civilization Vol. I P—207.

கிடைத்த பொருள்கள், அது கோயிலாக இருந்திருக்க முடியாது என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளன. எனவே, இம் மாபெரும் மண்டபம் பெரும்பாலும் நகராட்சி மன்றமாகவே இருந்திருக்க வேண்டும். அம் மண்டபம் 242 அடி நீளமும், 112 அடி அகலமும் உடையது. அதனை அடுத்து இன்னொரு பெருங் கட்டடமும், அதற்கடுத்துச் சிறியதொரு கட்டடமும் உள்ளன.

மொகஞ்சொ-தாரோவின் கட்டடக் கலையின் மாட்சிக்கு இவை சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன. மொகஞ்சொ—தாரோவின் கட்டடக் கலைப் பண்பு, பொதுவாக எளிய முறையினையும், பயன்படும் தன்மையினையும் அடிப்படையாகக் கொண்டது என்று கூறின் தவறாகாது. அவை திண்மையும் உறுதியும் வாய்ந்தனவே ஒழிய அழகில் சிறந்தவை அல்ல. சுமேரியாவில் காணப்படுவதைப் போல் அங்குக் கோயில்கள் இல்லை; நைல் ஆற்றங்கரையோரத்தில் காணப்படும் 'பிரமிட்டுக்கள்' போன்ற மாபெரும் நினைவுச் சின்னங்களாக விளங்கும் கல்லறைகள் காணப்படவில்லை. சுமேரியாவோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், வட்ட வடிவமான தூண்களும், ஒதுக்கிட வாயில்களும், அரை வட்ட வடிவப் போதுகைக் கட்டைகளும் சிந்துவெளியில் காண்பது அரிது. உண்மையான பெரும் வளைவுகளைச் (Arch) சிந்துவெளியில் காண முடியவில்லை. இவற்றால் சிந்துவெளியின் மக்கள் வாழ்க்கையில் கொண்டிருந்த நோக்கம் என்ன என்பது தெரிகிறது. அவர்களுக்கு வாழ்க்கை, வசதியாகவும் சொகுசாகவும் இருந்தால் போதும்; வாழ்க்கை

யில் பண்பு நயத்தையோ, அழகிய கலைத்திறனையோ கண்டு களிக்க வேண்டும் என்ற ஆவல் (சிந்துவெளி மக்களுக்கு) இருந்ததாகத் தெரியவில்லை.

தெப்பக்குளம் :

இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்ட பழம்பொருள் சின்னங்களுள் மிகச் சிறப்பாக விளங்குவது அழகிய தெப்பக் குளமே யாகும். இக்குளம் தமிழகத்தில் காணப்படும் பெரிய தெப்பக் குளத்தைப் போன்றது. இதனுடைய பொறியியல் அமைப்புத் திறனைக் கண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வியப்புறுகின்றனர். இக் குளத்தில் தண்ணீர் நிற்கும் இடம் மட்டும் 39 அடி நீளமும் 23 அடி அகலமும் 8 அடி ஆழமும் உடையது. தற்காலத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள உணவு விடுதிகளில் காணப்படும் 'நீச்சல் குளங்களைப்' போன்ற வசதியும், சொகுசும், அழகும் உடையதாக மொகஞ்சொ—தாரோவின் தெப்பக்குளம் அமைக்கப் பட்டிருக்கிறது. குளத்தின் சுற்றுப்புறத்தில் கட்டப் பட்டுள்ள கட்டடங்கள் எல்லாம் சேர்ந்து 180 அடி நீளமும், 108 அடி அகலமும் கொண்ட பரப்புடைய தாகக் காணப்படுகிறது. தண்ணீர் நிற்கும் குளத்தின் மட்டத்தைச் சுற்றி நாற்புறமும் நடைபாதை ஒன்று இருக்கின்றது. ஒவ்வொரு முனையிலும் உயரமாகக் கட்டப்பட்ட மேடை ஒன்று காணப்படுகிறது. அம் மேடைக்குச் செல்லுவதற்குப் பல படிக்கட்டுக்கள் உள்ளன. இப்பாதையை அடுத்து ஒரு பெருஞ் சுவர் காணப்படுகின்றது. அதன் மீதும் நடை பாதை அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்பெருங் குளத்தின் அடிமட்டம் நன்றாக இழைக்கப்பெற்று, வழவழப்பாக்கப்பட்ட செங்கற்களும் களிமண் கலவைச் சுதையும் கொண்டு கட்டப்பட்டு இருக்கிறது. தண்ணீர் ஊறிப் பழுதாகாமல் இருப்ப தற்காக, இதன் சுற்றுப்புறச் சுவர்கள் மிகவும் வலிமையுடையவாகக் கருத்துடன் கட்டப்பட்டுள்ளன. குளத்திற்குள் செல்லுவதற்கு வடக்கிலும் தெற்கிலும் படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தென்மேற்கு மூலையில் 6½ அடி உயரத்தில் ஒரு மதகு இருக்கிறது. அது, குளத்தினுள் நீரை நிறைக்கவும், குளத்தில் உள்ள நீரை வடித்து வெளியே செலுத்தவும் பயன்படு கிறது. இக்குளத்தின் மூன்று பக்கங்களில் தாழ் வாரங்கள் உள்ளன. தாழ்வாரங்களின் பின்புறத்தில் பல அறைகளும் சுரங்க வழிகளும் இருக்கின்றன. இந்தக் குளத்தினை உடைய கட்டடத்திற்குள் செல்லு வதற்கு ஆறு வாயில்கள் உள்ளன. குளத்திற்கு வடக்கே எட்டு அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று இருக்கிறது. அவை உறுதியான சுவர்களையும் வலிமை யான கதவுகளையும் கொண்டவை. அவ்வறைகளின் கீழே நிலவரையில் குளிக்கும் அறைகள் இருக்கின்றன. மேல் அறைகளில் வாழும் மக்கள் குளிக்கும் அறை களுக்கு உட்புறமாகவே சென்று வருவதற்குரிய வழி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தெப்பக்குளத்திற்கு வேண்டியபொழுது நீரை நிரப்புவதற்காகச் சிறிது தொலைவில் மூன்று கிணறுகள் கட்டப்பட்டுள்ளன. இப் பெருங் குளத்தைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் "இத் தெப்பக்குளம் பொதுமக்கள் கடவுள் வழிபாட் டிற்கு முன்பு நீராடுவதற்குப் பயன் படுத்தியதாக இருக் கலாம்" என்று கருதுகின்றனர்; குளத்திற்கு வடக்கே

உள்ள எட்டு அறைகளும் "சமயத் தலைவர்கள் வாழ்ந்த விடுதிகளாக இருந்திருக்குமோ" என்றும் ஐயுறு கின்றனர்.

களஞ்சியம் :

குளத்தினை அடுத்து, சிறப்புடன் விளங்குவது கூலங்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியமாகும். இது 150 அடி நீளமும் 75 அடி அகலமும் உடைய தாகக் காணப்படுகின்றது. இது பெரிய கட்டடமாக இருந்தபோதிலும், காற்றோட்டமானதாகவும், சரக்கு களை இறக்குவதற்கும் ஏற்றிச் செல்லுவதற்கும் ஏற்ற வகையில், நகரின் கோட்டைச் சுவருக்கு வெளியே வழியுடையதாகக் காணப்படுகிறது. மொகஞ்சொ—தாரோவின் பொருளாதார நிலை, அன்று எவ்வாறு இருந்தது என்பதற்குச் சிறந்த சான்றாக இக் களஞ்சியம் காட்சி தருகிறது.

மொகஞ்சொ—தாரோவின் ஒரு பகுதியில் அரை குறையாகச் சூளையிடப்பட்ட மண்பாண்டங்களும், சூளைகளும் காணப்படுகின்றன. அவ்விடத்தில் மண் பாண்டத் தொழில் புரிந்த குயவர் வாழ்ந்தனர் போலும். இந் நகரில் பல இடங்களில் பூங்காக்கள் போன்ற பொதுச் சோலைகள் இருந்தன என்பதற்கு அறிகுறி யாகப் பல சின்னங்கள் உள்ளன.

இந் நகர் அமைப்பின் திட்டத்திலும், கட்டட முறை யிலும் இறுதிக் காலத்தில் பெரிதும் தரம் குறைந்து கொண்டே வந்து இருக்கிறது. இதனால் இந்நகரம்

கொடிய முடிவினை—அழிவினை அடைவதற்கு நெடுங் காலத்திற்கு முன்பே நாகரிகத்தில் நலிவுறத் தொடங் கியதை அறிகிறோம்.

✳

அரப்பா

சிந்துவெளியில் அகழ்ந்து எடுக்கப்பெற்ற இன்னொரு சிறந்த நகரம் **'அரப்பா'**. மொகஞ்சொ-தாரோவைவிட அரப்பா பெரும் பரப்புடையதும் நீண்ட காலம் நிலைத்து நின்றதுமாகும். எனினும், ஏறக் குறைய ஒரே வகையான நாகரிகப் பண்பாட்டினைக் கொண்டது.

அரி-யூபூயாவா?

'அரப்பா' என்னும் பெயர் அரி-யூபூயா (**Hari-yupuya**) என்று இருக்கு வேதம் குறிக்கும் பெயராக இருக்கலாம் என்று நினைப்பதற்குப் பெரிதும் இட முண்டு. ஏனெனில், 'விரிசிவர்' என்ற பழங்குடி மக்கள் இவ்விடத்தில் 'அபயவர்த்தன சாயமன' என்ற ஆரியனால் தோற்கடிக்கப்பட்டனர் என்று அவ்வேதம் கூறுகிறது. இவ்விடத்தைத் தவிர வேறு பகுதிகளில் 'விரிசிவர்' என்ற பழங்குடி மக்கள் வாழ்ந்ததாக இருக்கு வேதம் கூறவில்லை. மேலும் 'விரிசிவர்' என் பார் இந்திரனுடைய பகைவனை 'விர்சின்' என்ப

வனோடு தொடர்பு உடையவராக இருந்திருக்க வேண்டும். எனவே, இம்மக்கள் ஆரியர் அல்லாதார் என்பது தெளிவாகின்றது. இருக்கு வேதம் குறிப்பிடும் இந் நிகழ்ச்சியை அரப்பா அழிவோடு ஒப்பிடுவோமானால், ஆரியர், ஆரியரல்லாதார் மீது கொண்ட வெற்றி, 'அரப்பா' அல்லது 'அரி–யூபூயா' என்னும் இடத்தில் நிகழ்ந்த போரின் முடிவாக இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.1

அகமதாபாத்தில் அரப்பா நாகரிகம் :

அண்மைக் காலத்தில் அகமதாபாத் மாவட்டத்தில், **'லோதல்'** என்னும் இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பல மண் மேடுகளுக்கு அடியில், அரைக் கல் நீளமும், ஒரு கல் அகலமும் 28 அடி உயரமும் உடைய நகரம் ஒன்று காணப்படுகிறது. இந் நகரில் கிடைத்துள்ள பழம்

---

1 "There is a possibility or perhaps, rather not an impossibility, that in the modern place-name may be recognised the *Hari-Yupuya* which is mentioned once in the Rig Veda (VI., 27, 5) as the scene of defeat of the *Vrcivants* by Abhyavartin cayamana. The tribe of Vricivants is likewise now-here else referred to in the Rig Veda, but may be connected with *Varcin*, who was a foe of Indra may be thought to indicate Harappa as the traditionel scene of an Aryan victory over a non-Aryan tribe."

— *CHI. The indus Civilization P-18.*

Sir Mortimer Wheeler.

பொருள் சின்னங்களை ஆராய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அரப்பா நகரம் அழிவுற்ற பின், அவ்விடத்தில் இருந்து தப்பிய மக்கள் தெற்குப் பக்கம் சென்று வாழ்ந்து இருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். 'லோதல்' பழம் பொருள் சின்னங்கள் அரப்பா நாகரிகத்தைப் பெரிதும் ஒத்துள்ளன; சிற்சில வேறுபாடுகள் மட்டும் காணப்படுகின்றன. அச்சிறு வேறுபாடுகளும் அரப்பா நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையில் உண்டாகிய முன்னேற்றத்தைக் குறிப்பனவாக அமைந்துள்ளன. 'லோதல்' நாகரிகம் கி. மு. 2500-க்குப் பிற்பட்டதும், கி. மு. 1500-க்கு முற்பட்டதும் ஆகலாம் என்பது அறிஞர்களின் கருத்து.[1] இதனால், அரப்பாவில் வாழ்ந்த மக்களுக்கும், புதிதாக இந்தியாவிற்குள் நுழைந்த மக்களுக்கும் இடையே போர் நிகழ்ந்தமை தெரிய வருகிறது. இப் போரில் சிந்துவெளி மக்கள் தோல்வி அடைந்தனர். எனவே, அவர்கள் சிந்துவெளியை விட்டுப் புறப்பட்டுத் தென் மேற்குத் திசை வழியாக இன்றைய அகமதாபாத் மாவட்டப் பகுதியில் தங்கி மீண்டும் கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர் போலும்.

நகர் அமைப்பு :

கட்டடங்கள் :

அரப்பாவில் காணப்படுகின்ற கட்டடங்கள் யாவும் நன்ருகச் சூளையிடப்பட்ட செங்கற்களைக் கொண்ட

---

1 Illustrated Weekly. Dated 14—9—1958. Article. Harappa Culture: Mound at Lothal—By Main Kurve.

அடித்தளங்களை உடையனவாக உறுதியாகக் கட்டப் பட்டுள்ளன. மொகஞ்சொ-தாரோவைப் போன்று நல் வாழ்விற்குரிய வசதிகளோடு கட்டப்பட்டுள்ள வீடுகளே இங்குள்ளன. பெரிய கட்டடங்களின் சுவர் களும், தரைகளும், சாக்கடைகளும் நன்ருக வழவழப் பாகத் தேய்த்து, இக் காலச் 'சிமென்ட்' பூசப்பெற்றது போல அமைக்கப்பட்டுள்ளன. மாடிப்படிகளும், குப்பைத் தொட்டிகளும், கழிநீர்த் தேக்கங்களும், கால் வாய்களும், வடிகால்களும் மொகஞ்சொ-தாரோவை விட மிகச் சிறந்த நிலையில் காணப்படுகின்றன.

வீடுகள் :

இந் நகரின் வெளியே உள்ள பருத்த பெருஞ் சுவர்கள், வெள்ளப் பெருக்கினைத் தடுத்து நிறுத்து வதற்குரிய கோட்டை மதில் போன்று விளங்குகின்றன. இவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் தற்காப்பிற்காக இப் பெரும் சுவர்களை எழுப்பி இருக்கலாம். அரப்பாவில், உள்ள கட்டடங்கள் பல குடியிருப்பு இல்லங்களாகவும், சில பொதுக் கட்டடங்களாகவும் தோன்றுகின்றன. வீடுகள் யாவும் மாடிகள் உடையன. இந்நகரின் தென் புறத்தில், கோட்டைச் சுவருக்கு அருகில் இரண்டு வரிசை சிறு வீடுகள் உள்ளன. இவற்றிற்கு வடக்கே வட்ட வடிவமுள்ள தொழில் மேடைகள் ஐந்து வரிசை யாக உள்ளன. இவற்றிற்கும் அப்பால், தடுப்புச் சுவர் களைக் கொண்ட மேடை மீது இரு வரிசையாகக் களஞ்சியங்கள் உள்ளன.

தொழிலாளர் குடியேற்றம் :

கோட்டைச் சுவருக்கு அருகில், நகரின் தென் புறத்தில் இருக்கும் இரு வரிசைகளுடைய சிறு வீடு

கள், தொழிலாளர் வீடுகளாக இருந்திருக்க வேண்டும். இவற்றிற்கு அருகில் தொழில் மேடைகள் இருப்பதனால், இப்பகுதி தொழிலாளர் குடியேற்றமாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு வரிசையில் ஏழு வீடுகளும், மற்றொரு வரிசையில் எட்டு வீடுகளும் இருக்கின்றன. இவ்விரண்டிற்கும் இடையில் நீண்ட குறுகிய பாதை ஒன்று செல்லுகின்றது. அப் பாதையின் இரு முனைகளும் பொதுத் தெருக்களில் கலக்கின்றன. இங்குள்ள வீடுகளின் தலைவாயில் வளைந்த சுவர்களுடன் அமைந்துள்ளமையால் வெளியிலிருந்து பார்ப்பவர்க்கு உட் பக்கம் தோன்றாதவாறு அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு அறைகள் உள்ளன. தரை சிறிய செங்கற்களால் தளவரிசை இடப்பெற்றுள்ளது. இத் தொழிலாளர் குடியேற்ற அமைப்பினை நோக்கும்போது, இதனை அரப்பாவின் நகராட்சி மன்றம் திட்டமிட்டுக் கட்டியதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. எகிப்தில், 'தெல்–எல்–அபர்ணு' என்னும் இடத்தில் இதைப் போன்ற தொழிலாளர் குடியேற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தொழில் மேடை:

தொழிலாளர் குடியேற்றங்களை அடுத்து 14 உலைகளும் தொழில் மேடைகளும் உள்ளன. இங்குள்ள உலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கரியும், சாணியும் கலந்த கலவை இன்றும் காணப்படுகின்றது. உலைக் கூடங்களில் இக்காலத்தில் பயன்படுத்தப்படும் துருத்திகளும் அவ்விடத்தில் இருந்தவாகத் தெரிகிறது.

இவை பெரும்பாலும் வெண்கலத்தைத் தயாரிப்பன வாக இருந்திருக்கலாம். இவ்வுலைக் கூடங்களுக்குச் சிறிது தொலைவில் தானியங்களைக் குத்துவதற்குரிய மர உரல்கள் பதிக்கப் பெற்ற பள்ளங்கள் பல உள்ளன.

களஞ்சியம்:

அரப்பாவில் காணப்படும் சின்னங்களுள் சிறந்தது பெரியதொரு களஞ்சியமாகும். அது 169 அடி நீளமும் 135 அடி அகலமும் உடையது. இதனுடைய சுவர்கள் பத்தடிப் பருமனும் 52 அடி உயரமும் உடையன. இக் களஞ்சியத்தின் இடையில் 23 அடி இடைவெளி இருக்கின்றது. இடைவெளி விட்டப்பட்டுக் கட்டப்பட்டுள்ளமையால், இப் பெருங் களஞ்சியம் இரண்டு வரிசையாகக் காட்சி அளிக்கிறது. இந்த இடைவெளிக்கு மேல்கூரை இருந்தமைக்குரிய சில அறிகுறிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வரிசையிலும் ஆறு மண்டபங்கள் உள்ளன. ஒவ்வொரு மண்டபமும் மூன்று குறுக்குச் சுவர்களால் நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் தரைப் பகுதியில் மரப் பலகைகள் பதிக்கப் பெற்றுள்ளன. இத்தகைய சிறந்த வேலைப்பாட்டுடன் இருக்கும் களஞ்சியங்கள் அனைத்தும் நகராட்சி மன்றத்தார் அல்லது அரசாங்கத்தார் மக்களிடம் திரட்டிய வரிப் பொருளாகிய தானியத்தைச் சேமித்து வைக்கும் களஞ்சியங்களாக இருந்திருக்கலாம். இவற்றிற்கு ஈடாகப் பண்டை உலகில் எந் நாட்டிலும் களஞ்சியங்கள் இல்லை எனலாம்.

---

1 CHI—IV. P—24.

இடுகாடு:

அரப்பா நகரின் ஒருபகுதியில் மனித மண்டை ஓடுகளும், எலும்புத் துண்டுகளும், பானைகளும் கலந்து காணப்படுகின்றன. இவ்விடம் அரப்பாவின் இடு காடாக இருந்திருக்கலாம் என்று அறிஞர் கருது கின்றனர். பிணங்கள் எத்தகைய சடங்குகளுமின்றிக் கழுகுகளும் நரிகளும் தின்னுமாறு விடப்பட்டுள்ளன. இங்குள்ள உடல்கள் 'நின்ற, இருந்த, கிடந்த' கோலங் களில் காணப்படுகின்றமையால், ஒருகால், இந் நகர் திடீரென அழிவுற்ற காலத்தில் இறந்தோர் கூடுகளாக இருக்கலாம். இந்நகரின் கோட்டைக்குத் தென் புறத்தின் எல்லைப் பகுதியில் இடுகாடு ஒன்று இருக் கின்றது. அங்கு 57 கல்லறைகள் கண்டெடுக்கப் பட்டன. பிணங்களின் தலைகள் வடக்குத் திசையில் வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளன. பிணங் களைச் சுற்றிப் பல மண்பாண்டங்கள் காணப்படு கின்றன. இவற்றுள் இறந்தவர்களுடைய அணிகலன் கள், நறுமணப்பொருள்கள், பயன்படுத்திய செப்புக் கண்ணாடித் தகடுகள், சங்குகள், சிப்பிகள், கரிய நிறத் தடிகள், சிப்பியாலான நீண்ட பிடியுடைய கரண்டிகள் (அகப்பைகள்) முதலியன இருக்கின்றன. சிலவற்றுள் அகல் விளக்குகளும் காணப்படுகின்றன. இங்குள்ள கல்லறைகளில் இரண்டு குறிப்பிடத் தக்கன. அவற்றுள் ஒன்று களிமண் கற்களால் சவப்பெட்டியைப் போன்று கட்டப்பட்டுள்ளது. அதனுள் பிணத்தினை வைத்து அடக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்றொரு கல்லறையில் மரத்தாலான சவப்பெட்டி வைக்கப்பட் டிருக்கிறது. அதனுள் பெண்ணொருத்தியின் உடல்

ஒன்று காணப்படுகிறது. இப் பெட்டி ஏழடி நீளமும், இரண்டிலிருந்து இரண்டரையடி அகலமும் உடைய தாகும். தலைப்பக்கத்தில் இரண்டரை அடி அகன்றும், கால் பக்கம் செல்லச் செல்ல இரண்டடி அகலமாகக் குறுகியுமுளது. பிணத்தின் மீது மூடப்பெற்றுள்ள மரப் பலகை இமயமலைச் சாரலில் வளரும் தேவதாரு வகையைச் சேர்ந்ததாம். இதனுள் உள்ள எலும்புக் கூட்டின் வலக்கை நடுவிரலில் ஒரு செப்பு மோதிரம் அணியப் பெற்றிருக்கிறது. காதணி போன்ற சிப்பி வளையங்கள் மூன்று மண்டை ஓட்டிற்கு அருகில் சிதறிக் கிடக்கின்றன. இந்தக் கல்லறைகளில் காணப்படும் முப்பத்தேழு பானைகளில், ஒன்றுதான் சவப் பெட்டியின் உள்ளிருக்கிறது. இக் கல்லறைக்கு நிகராக இந்தியாவின் எப் பகுதியிலும் வேறொரு கல்லறை இன்று வரை கிடைக்கவில்லை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. மொகஞ்சொ—தாரோவில் இத்தகைய கல்லறைகள் காணப்படவில்லை. இக் காரணத் தால், அங்குப் பிணங்கள் சுடப்பட்டன என்று டாக்டர் மக்கே கருதுகிறார்.

கப்பல் துறை:

கடந்த சில திங்கள்களாக 'லோதல்' என்னும் இடத்தில் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் தொல் பொருள் ஆராய்ச்சியின் பயனாகக் கி. மு. 3000–க்கு முற்பட்ட காலத்திய துறைமுகம் ஒன்று அண்மையில் அகழ்ந்து எடுக்கப்பட்டது. இக் கப்பல் துறை அரப்பா குடியிருப்பில் காணப்படுகிறது. சூளையிடப்பட்ட செங் கற்களால் கட்டப்பட்ட இந்தப் பெரிய கப்பல் துறை

தண்ணீர் அடைப்பு ஏற்பாட்டுடன் கால்வாய் ஒன்றோடு சேர்த்துக் கட்டப்பட்டு இருக்கிறது.

கிறித்து பிறப்பதற்கு மூவாயிர ஆண்டுகளுக்கு முன்னர், "உலகிலேயே மிக உன்னத நிலையில் வளர்ந்திருந்த சிறந்த நகர நாகரிகம் இருந்த இடம் இதுவே" என்று இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இதழ் குறிப்பிடுகிறது. மேலும் 'லோதல் பகுதியில் நிலத்தினைத் தோண்டும் பொழுது கிடைத்த சான்றுகளில் இருந்து இந்த நாகரிகம் காம்பே வளைகுடா வரைக்கும் பரவியிருந்தது என்பதும் ஐயத்திற்கு இடமின்றிப் புலனாகின்றது' என்று கூறுகிறது.

கடந்த சில திங்கள்களாக (1958 நவம்பர், திசம்பர், 1959 சனவரி) நிலத்தைத் தோண்டி நடத்திய ஆராய்ச்சியின் பயனாக 600 அடி நீளமும் 110 அடி அகலமும் கொண்ட செங்கல் சுவர் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. லோதல் துறைமுகத்திற்குக் கப்பல் துறையாக (கப்பல்களில் பொருள்களை ஏற்றி இறக்க உதவும் உயர்ந்த மேடையாக) இது பயன்பட்டிருக்க வேண்டும். ஒரு சூளைக்கு அருகே இந்தப் பெரிய செங்கல் மேடை அமைந்து இருக்கிறது. இந்த இடத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அரப்பா முத்திரைச் சின்னங்களுடன் கூடிய களிமண் கிடைத்தது.

இந்த இடத்தில் கிடைத்த வண்ணம் தீட்டப்பட்ட மண்பாண்டங்கள் மெசொப்பொட்டேமியா, எகிப்து போன்ற வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு இருந்தது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இங்கு நிலத்தைத் தோண்டி நடத்திய ஆராய்ச்சிகளின்போது, பல சவக்குழிகள் கண்டு பிடிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றுள் இரண்டு சவக்குழிகள் குறிப்பிடத் தக்கன. அவை ஒவ்வொன்றிலும் இரண்டு பேர் ஒன்ருகப் புதைக்கப்பட்டிருப்பது புதுமையாகத் தோன்றுகிறது. புதைகுழியில் காணப்பட்ட பொருள்களில் நிறம் பூசப் பட்ட மண்பாண்டங்கள், செம்புப் பொருள்கள், செப மணி, சங்கு வளையல்கள் சிறப்புடையனவாகும்.

1955–ஆம் ஆண்டில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர், ஆராய்ச்சியைத் தொடங்கினர். கி. மு. 1500 ஆண்களுக்கு முன்னர், பெரிய வெள்ளத்தின் காரணமாக 'லோதல்' அழிந்தது. அதன் பிறகே அரப்பா நாகரிகம் நலிவுற்றிருக்க வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றனர்.

*

சான்ஹு-தாரோ

இவ்விரு பெரும் நகரங்களே அல்லாமல், சான்ஹு–தாரோ என்னும் இடத்திலும் சிந்துவெளி நாகரிகத்தின் சின்னங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. மொகஞ்சொ–தாரோவிலிருந்து எண்பது கற்களுக்குத் தெற்கில் உள்ள மூன்று பெரும் மண் மேடுகள் சான்ஹு–தாரோவின் சின்னங்களாகும். அந்த இடத்தை 1931–ஆம் ஆண்டு டாக்டர் என். ஜி. மசும்தார் அகழ்ந்து எடுக்கும் பணியில் ஈடுபட்டார். சான்ஹு–

தாரோவின் சின்னங்கள் 1000 அடி நீளமும் 700 அடி அகலமும் கொண்ட நிலப்பரப்பில் உள்ளன. அம் மண் மேடுகள் முறையே 10, 17, 19 அடி உயரமாக இருந்தன. அவ்விடம் ஒரு காலத்தில் சிறந்த நாகரிகமடைந்த நகரமாக இருந்தது என்பதை அங்குக் கிடைத்துள்ள பழம்பொருள் சின்னங்கள் உணர்த்துகின்றன.

சான்ஹூ-தாரோவில் பல வீடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் பல வெய்யிலில் உலர்த்தப்பட்ட கற்களால் கட்டப்பட்டுள்ளன; சில சுட்ட செங்கல்லினாலும் கட்டப்பட்டுள்ளன. அங்குக் கிடைத்துள்ள பொருள்கள் 500-க்கு மேற்பட்டனவாகும். முத்திரைகள் பல கிடைத்துள்ளன. ஒரு முத்திரையில் மனிதர் இருவர் வில்லும் அம்பும் கையில் வந்தி வேட்டைக்குச் செல்வதைப் போன்று செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. அவர்கள் எதிரில் ஒரு மலையாடு நிற்பது போன்று காணப்படுகிறது. இம் முத்திரை சான்ஹூ-தாரோ மக்கள் வேட்டையாடுவதில் விருப்புடையவர் என்பதைக் குறிப்பதாகலாம். அங்குச் சிற்பியினால் செய்யப்பட்டு, துளையிடப்பட்ட வளையல்கள் பல உள்ளன. குழந்தைகள் விளையாட்டிற்குரிய விளையாட்டுக் கருவிகள் பல கிடைத்துள்ளன. துளையிடப்பட்ட தேர்கள் இரண்டு உடைந்து காணப்படுகின்றன. கவர்ச்சி மிக்க பந்து ஒன்று வளைந்த கோடுகளுடன் காணப்படுகிறது. இது இந்தக் காலத்தில் கால் பந்தாட்டத்திற்குப் (Foot-Ball) பயன்படுத்தும் பந்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது. ஊது குழல், பறவை, விலங்குகளின் பொம்மைகள் செவ்வண்ணம் பூசப்பெற்று அழகுடன் விளங்குகின்றன.

இவை அல்லாமல், மண் பாண்டங்களும், மணிகளும் கிடைத்துள்ளன. இரத்தினக் கற்கள் பொலிவுடன் உள்ளன. இங்குக் கிடைத்துள்ள மணிகளின் மீது 8 போன்ற ஓவிய எழுத்து காணப்படுகிறது. மண்பாண்டங்கள் பல நிறங்கள் பூசப்பட்டுள்ளன. ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. சில மண்பாண்டங்களில் கைப்பிடியும் இருக்கின்றன. இவ்விடத்தில் கிடைத்துள்ள பொருள்கள் பெரும்பான்மை அரப்பாவில் கிடைத்துள்ளவற்றோடு ஒப்புமை உடையவாக இருப்பதால், சான்ஹூ-தாரோவின் நாகரிகம் அரப்பா நாகரிகத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை புலனாகின்றது.

அரப்பா நாகரிகத்திற்கு முற்பட்ட காலத்திய நாகரிகச் சின்னங்கள் மேற்குப் பாகிச்தானில் காக்ரிபூர் எனப்படும் நகரத்திற்குத் தெற்கில் பதினைந்து கற்கள் தொலைவில், **'கோட்-டிஜி'** (Kot-Diji) என்னும் இடத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. பாகிச்தான் தொல்பொருள் ஆராய்ச்சித்துறை கண்காணிப்பாளரான டாக்டர் F. A. கான் கராச்சி மாநகர் செய்தித்தாள் நிருபர்களிடத்து 26-2-58இல் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்: "இப் பழம்பெரும் சின்னங்கள், நன்கு வளர்ச்சியுற்றுச் சிறப்புற்றிருந்த அரப்பா நாகரிகக் காலத்தைவிட (கி. மு. 2500) இரண்டு நூற்றாண்டுகள் ஆகிலும் முற்பட்டதாக இருக்கலாம். 'கோட்-டிஜியில்' கண்டெடுக்கப்பட்டுள்ள மண்பாண்டங்களின் அமைப்பும் முறையும், பிற்காலத்தியதான அரப்பாவின் மண்பாண்டங்களின் அமைப்பு முறைக்கு முன்னோடியாக—

எடுத்துக்காட்டாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. அரப்பாவின் கருமையும் வலிமையும் உடைய மண்பாண்டங்களினின்று உருவத்திலும் வேலைப்பாட்டிலும் இவை சிறிது வேறுபட்டு உள்ளன. ஆயினும் அவை கலையழகிலும், கைவண்ணத்திலும் தரம் குறைந்தவை அல்ல". 1

சிந்துவெளியில் 'லொகூஞ்சொ-தாரோ,' 'சக்பூர்பாணிசயால்,' 'அலி முராத்,' 'பாண்டிவாகி,' 'ஜுகார்' முதலிய இடங்களில் அகழ்ந்து எடுத்த பொழுது எல்லாம் அவ்விடங்களில் மொகஞ்சொ-தாரோ, அரப்பா நாகரிகத்தின் சின்னங்களைக் கண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் வியப்படைந்தனர். இவ்வாறு நூற்றுக்கு மேற்பட்ட சின்னங்கள் சிந்து வெளியில் இருக்கின்றன. எனவே, சிந்து வெளி நாகரிகம், மொகஞ்சொ-தாரோ, அரப்பா ஆகிய இரு இடங்களில் மட்டும் சிறப்புற்றிருந்தது என்று சொல்லுதற்கில்லை; மிகப் பரந்த நிலப்பரப்பில் நின்று நிலவிய நாகரிகத்தின் ஒரு பகுதியே சிந்து வெளி நாகரிகம் எனத் தோன்றுகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளரின் ஓயாத உழைப்பால் இப் பழம் பெரும் நாகரிகத்தின் சின்னங்கள் பல வருங்காலத்தில் வெளிப்படுமானால், உலக வரலாற்றில் ஈடும் இணையும் இல்லாத மாபெரும் நாகரிகமாகச் சிந்து வெளி நாகரிகம் பொன்றுப் புகழுடன் மாண்புற்று விளங்கும்.

* *

---

1 Tamil Culture: Vol. VII. No. 2. P. 202

3. வாழ்வும் வளனும்

மக்கள் :

மொகஞ்சொ-தாரோவில் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் யாவும் செம்புக் கற்கால நாகரிகத்தைச் சார்ந்தனவாகும். அக் கூடுகள் மொகஞ்சொ-தாரோ நகரில் வாழ்ந்த மக்களின் எலும்புக் கூடுகளாக இருக்கலாம். மண்டை ஓடுகளை ஆராய்ந்ததன் பயனாக, அந்நகரில் நான்கு இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தனர் எனத்தெரிகிறது. அவர்கள் :-

1. ஆத்திரேலிய பழங்குடி மக்கள்,
2. திராவிடர் அல்லது நடுநிலக் கடலின மக்கள்,
3. மங்கோலிய இனமக்கள்,
4. அல்பைனர்.

என்ற நால்வகை இனத்தினைச் சார்ந்தவராவார்.

பிற நாடுகளோடு, நிலம் நீர் ஆகிய இரண்டு வழி களிலும் தொடர்பு கொண்டிருந்த மொகஞ்சொ-தாரோ போன்ற பெரும் வளமிக்க வாணிக நகர்களில், மக்கள் இனத்தின் நால்வகைப் பிரிவைச் சார்ந்த மக்களும் ஒன்றாக வாழ்வது இயற்கை. ஆகையால், இந்த நகரம் ஆசியாவின் பல பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பலரும் ஒன்றாகச் சந்திக்கும் பெரு நகராக விளங்கியது எனலாம்.

உணவு :

சிந்துவெளி மக்கள் தங்கள் அன்றாட வாழ்விற்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் பெற்றிருந்தனர் என்பது அங்குக் கிடைத்துள்ள பொருள்களால் அறியப்படுகிறது. அவர்கள் வேளாண்மை, வாணிகம் ஆகிய தொழில்களின் மூலம் தங்கள் வாழ்வை வளமாக்கினர். சிந்துவெளி, பருவ மழையையும் ஆற்றுப் பாய்ச்சலையும் பெரும் அளவில் பெற்றிருந்தது. அதனால், அவ்வெளியில் கோதுமை, நெல், பார்லி, பருத்தி, பட்டாணி, பேரீந்து முதலியன ஏராளமாகப் பயிரிடப்பட்டன. இவ் விளைபொருள்களைச் சேமித்து வைக்க அக்கால மக்கள் நிலத்தில் பாதி அளவு புதைக்கப்பட்டிருந்த தாழிகளைப் பயன்படுத்தினர். இவற்றை உணவுப் பொருள்களாகப் பக்குவப்படுத்துவதற்கு உரல், எந்திரம், அம்மி, குழவி முதலியவற்றைப் பயன்படுத்தினர். ஆடு, மாடு, பன்றி, ஆமை, முதலை, புறா ஆகியவற்றின் இறைச்சியைச் சிந்துவெளி மக்கள் உண்டனர். பல்வகைப்பட்ட மீன்கள் அவர்கள் உணவின் முக்கிய பகுதியாக விளங்கின என்பர் கார்டன் சைல்டு. 1 அழிவுற்ற சிந்து வெளி நகரங்களின் சின்னங்களில் அவற்றின் எலும்புகளும் ஓடுகளும் காணப்படுகின்றன. பெரும்பாலும் பாயின் மீது அமர்ந்தே சிந்துவெளி மக்கள் உணவுப் பொருள்களைக் கையினால் எடுத்துப் பிசைந்து உண்டனர்.

சிந்துவெளி மக்கள் காய்கறிகளையும், பால், தயிர், வெண்ணெய், மோர், நெய் முதலியவற்றையும்

---

1 What happened in History—P—125.

உணவுடன் சேர்த்து உண்டனர். அவற்றோடு பல வகைப் பழங்களையும் கிழங்குகளையும் உண்டனர். சமையல் செய்வதற்குச் சாமான்கள் பலவற்றையும் பயன்படுத்தினர் என்பதற்குச் சான்றாக எண்ணற்ற சாமான்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தக்கன இட்டலிச் சட்டி, வாணல் சட்டி முதலியன வாகும்.

உடை :

மொகஞ்சொ-தாரோவில் உள்ள வீடுகள் பல வற்றுள் நெசவுத்தொழில் நடந்து வந்தது என்பதற்குச் சான்றாக நூற்கும் கதிர்கள் பல கிடைத்துள்ளன. அவை பளிங்காலும், சங்கினாலும், களிமண்ணாலும் செய்யப்பட்டுள்ளன. பஞ்சுப், கம்பளி மயிரும் கொண்டு நெசவுத் தொழில் நடத்தினர். பஞ்சின் துணுக்குகள் பல வெள்ளியால் செய்யப்பட்ட மலர்க் குவளைக்கு அருகில் கிடைத்துள்ளன. அவற்றை நுட்பமாக ஆராய்ந்து பார்த்த ஆராய்ச்சியாளர்கள் இன்றைய இந்தியப் பஞ்சைப் போன்றே அப் பஞ்சும் இருப்பதாகக் கருதுகின்றனர். பஞ்சு தக்கணத்தி லிருந்து சிந்து வெளிக்குச் சென்றிருக்க வேண்டும். அப் பஞ்சைத்தான், பாபிலோனியர் 'சிந்து' என்றும், கிரேக்கர் 'சின்டன்' என்றும் பெயரிட்டு வழங்கினர். சிந்து வெளியில் கிடைத்துள்ள ஓவியங்கள், சிலைகள் ஆகியவற்றிலிருந்து, நல்ல சித்திர வேலைப்பாடு அமைந்த ஆடைகளை நெய்தனர் எனத் தெரிகிறது.

அக்காலத்திய ஆடைகளில் நீண்ட போர்வை அல்லது சால்வை ஓர் உடையாக இருந்தது. இதனை அந் நகரங்களில் கண்டு எடுக்கப்பட்ட இரண்டு சிலை

களின் உடைகளிலிருந்து அறியலாம். எளியவர் பருத்தி ஆடைகளையும், செல்வர் உயர்ந்த பூவேலைப்பாடுகள் செய்யப்பெற்ற போர்வைகளையும் சால்வைகளையும் அணிந்திருந்தனர். மொகஞ்சொ—தாரோவில் பல வகைப் பொத்தான்கள் கிடைத்துள்ளன. இதனால் அந்நகர மக்கள் சட்டைகளையும் அணிந்திருந்தனர் என்பது புலனாகின்றது.

பெண்கள் பாவாடைகள் அணிந்திருந்தனர்; செல்வர் வீட்டு மங்கையர் மெல்லிய மேலாடையும் அணிந்திருந்தனர் என்பதனை முத்திரைகளினால் அறிகின்றோம்.

ஒப்பனை:

சிந்துவெளி மக்கள் தங்களை ஒப்பனை செய்து கொள்ளுவதில் பெரு விருப்பம் கொண்டவர்கள் என்பது அறிஞர்கள் கருத்தாகும். ஒப்பனை செய்து கொள்ளுவதற்குப் பயன்படும் நறுமணப் பொருள்கள் பலவும், ஒப்பனைக்குதவும் கருவிகள் சிலவும் கிடைத் துள்ளன. அரப்பாவில் 'ஒப்பனைப் பேழை' **(Vanity case)** ஒன்று கிடைத்திருக்கிறது. தந்தம், உலோகம், மண், கல் ஆகியவற்றால் செய்யப்பட்ட 'ஒப்பனைத் தாழிகள்' சில கண்டெடுக்கப்பட்டுள்ளன. நான்கு அறைகளைக்கொண்ட சுண்ணாம்புக் கற்களால் செய்யப்பட்ட கலங்கள், விலையுயர்ந்த நறுமணப் பொருள்களை வைத்துக் காப்பதற்குப் பயன்படுத்தப் பட்டன.

மகளிர், தங்கள் கருங்குழலினை ஒன்றாகச் சேர்த்துத் தலையின் பின்புறத்தில் கொண்டையாகப் போட்டுக்

கொள்ளுவதும், சுருட்டிக் கட்டிக் கொள்ளுவதும் வழக்கமாக இருந்தது. இதற்குக் கொண்டை ஊசிகள் பயன்படுத்தப் பெற்றன. ஆடல் மகளிர் போன்ற மூன்று வெண்கலச் சிலைகளில் கூந்தல் சடையாகப் பின்னித் தலையின் பின்புறம் ஒதுக்கி, வலப்புறத் தோள்மீது படியும் வண்ணம் கட்டப்பட்டு உள்ளமை ஈண்டுக் கருதத் தக்கது.

மங்கையர் கண்ணுக்கு மையும், முகத்திற்குப் பூந்துகட் பொடியும் கொண்டு ஒப்பனை செய்து கொண்டனர். சிந்துவெளி மகளிர், 'நவீன நாரிமணிகளுக்கு' ஒப்பனைக் கலையைப் பொருத்தவரை, வழி காட்டியாக — முன்னோடிகளாக இருந்தனர் என்று கூறின் மிகையாகாது. மங்கைர்தம் கயல் விழி களின் அழகை மிகுதிப்படுத்தக் கருப்பு மை தீட்டிக் கொண்டனர். ஆடவரும் மை கண்ணிற்குக் குளிர்ச்சி தரும் என்று கருதியதால் பெண்களைப்போல் தாங் களும் கண்களுக்கு மை தீட்டிக் கொண்டனர். மையினைத் தீட்டிக் கொள்வதற்குச் செப்புக் குச்சி களையும், மென்மையும் நயப்புமுடைய பிற குச்சிகளை யும் பயன்படுத்தினர். மகளிர், நத்தை ஓடுகளில் செங் காவிப் பொடியினை வைத்துக்கொண்டு, தங்கள் நெற்றியில் திலகமிட்டுக் கொண்டனர். ஒருகால் அப் பொடி குங்குமமாக இருந்திருக்குமோ என்று ஆராய்ச்சியாளர் ஐயுறுகின்றனர்.

பெண்கள் முகத்தில் அரும்பும் வியர்வையை உறிஞ்சி, முகப்பொலிவு குன்றாமல் காக்கும் வெண் ணிறப் பொடியைத் தங்கள் முகத்திற்குப் பூசிக்

கொண்டனர். இப் பொடி மொகஞ்சொ—தாரோ, அரப்பா ஆகிய இடங்களில் பெரும் அளவில் கிடைத்துள்ளன. பச்சை நிறமுடைய ஒரு வகை மண்ணையும் நன்றாகப் பொடி செய்து முகத்திற்குப் பூசிக்கொண்டனர். இப் பச்சை மண், கட்டி கட்டியாக மொகஞ்சொ-தாரோவின் பல பகுதிகளில் கிடைத்திருக்கிறது. இது முகத்திற்குப் பூசும் நறுமணப் பொடியாகவும், மண் பாண்டங்களின் மீது பூசப்படும் பச்சை வண்ணமாகவும் பயன்பட்டிருக்கலாம் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சான்ஹூ-தாரோவில் கிடைத்துள்ள சின்னங்களினால், சிந்துவெளி மகளிர் 'இதழ்ச் சாயம்' பூசிக் கொண்டனர் என்பது புலனாகின்றது.[1]

இரண்டு முனைகளும் வழவழப்பாக்கப்பட்ட வட்ட வடிவமான செம்பு, வெண்கலத்தால் செய்யப்பட்ட உலோகத் துண்டுகள், நறுமணப் பொருள்களைப் பூசிக் கொள்ளுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. பெண்கள் ஒப்பனை செய்துகொள்ளும் பொருள்களை வைப்பதற்குரிய முறையில் செய்யப்பட்ட மேசைகள் கிடைத்துள்ளன. அவற்றில், முட்டை வடிவில் செய்யப்பட்டு வழவழப்பாகக் கண்ணாடி போல் செய்யப்பட்ட தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. தந்தத்தினால் செய்யப்பட்ட சீப்புகள் மேசையின் உள் வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் சிந்துவெளி மகளிர் ஒப்பனைக் கலைத் துறையில் அடைந்திருந்த முன்னேற்றத்தையும், திறனையும் எடுத்தியம்புகின்றன.

1 CHI—IC P—42.

அணிகலன்கள் :

கிழக்கு நாடுகளில் வாழும் மக்களிடையே இயற்கையாக இருந்துவரும் 'அணிகலக் காதல்', சிந்துவெளி மக்களிடத்துப் பெரிதும் இருந்தன என்றே கூறலாம். அவர்கள் பெரு விருப்புடன் அணிந்த அணிகலன்கள் ஏராளமாகக் கிடைத்து உள்ளன. அவர்கள் தத்தம் தகுதிக்கும் வசதிக்கும் ஏற்பப் பொன், வெள்ளி, வெண்பொன் (Electrum), செம்பு, வெண்கலம், தந்தம், எலும்பு, மாக்கல், சங்கு, சிப்பி, களிமண், மணிகள் முதலியவற்ருல் விதவித மாகச் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்து தங்கள் அழகுக்கு அழகு செய்தனர். ஏழை மக்கள், களி மண்ணுல் நகைகள் செய்து சூளையிட்டு, அதற்குக் கருப்பு, சிவப்பு நிறம் பூசி அணிந்து கொண்டனர். செம்பு, பளிங்குக்கல், பொலிவுடைய கருங்கல், சங்கு, எலும்பு, களிமண் முதலியவற்ருல் செய்யப்பட்ட வளையல்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. ஒளி மிக்க மணிகள் பல கோக்கப்பட்ட மாலைகள் பல அழகாக உள்ளன. அம் மணிகள் மண், எலும்பு, சங்கு, செந் நிறக்கல் முதலியவற்ருல் உருண்டையாகவும், தட்டை யாகவும், வட்ட வடிவமாகவும் செய்யப்பட்டுள்ளன. மொகஞ்சொ-தாரோவின் சுவர்களினுள் சில கலன்கள் அகப்பட்டன. அதனுள், சிந்துவெளி மக்கள் அணிந் திருந்த நகைகள் பல காணப்படுகின்றன.

வீடுகள் பலவற்றை இங்குத் தோண்டிப் பார்த்த பொழுது வெள்ளிப் பாத்திரங்கள் சில கிடைத்தன. அதனுள் பொன்ஞல் செய்யப்பட்ட தலைக்கட்டுக்களும்,

கழுத்து மாலைகளும், ஒளி மிக்க மணிகளும் இருந்தன. பொன்னுலான கொண்டை ஊசிகள், வெள்ளித் தோடு கள், சிவப்புக்கல் இழைத்த மணி மாலைகள் போன்ற பல அணிகலன்கள் சிந்துவெளியின் பல பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. இந் நகைகள் யாவும் சிறந்த வேலைப்பாடும், கண்கவர் வனப்பும் உடையன. கழுத் தணிகளுள் சிறந்தவை நீளமான மாலைகளாகும். அவை, பொன்னுல் செய்யப்பட்டு இடையிடையே பச்சைக் கற்கள் கோக்கப்பட்டுள்ளன. சில மாலை களில் பொன்னுல் செய்யப்பட்ட மணிகள் காணப்படு கின்றன. அவை தட்டையாக உள்ளன. அவற்றின் மீது குமிழ்கள் பற்ற வைக்கப்பட்டுள்ளன. அந்த மாலைகள் இக் காலத்திய காசு மாலைகளைப் போன்று காணப்படுவது குறிப்பிடத் தக்கது. இவை யாவும் நேர்த்தியான வேலைப்பாடு உடையனவாகும். இவை அல்லாமல், மகளிர்தம் இடையில் அணியும் அழகிய 'ஒட்டியாணங்கள்' பல கிடைத்துள்ளன. அவை பொன் தகட்டினுல் செய்யப்படாமல், பொன் சரடுகள் நான்கு அல்லது ஐந்து இணைக்கப்பட்டுப் பட்டையாகத் தோன்றும் வண்ணம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு சரட்டிலும் சிவப்புக்கல் மணிகள் கோக்கப்பட்டுள்ளன. இச் சிவப்புக் கற்கள் நன்ருக மெருகிடப்பட்டுள்ளன. இம் மணிகளின் நடுவே துளைகள் போடப்பட்டுள்ளன. அத் துளைகளின் வழியே பொன்னுலான சரடுகள் நுழைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மணிகளைத் துளை யிடுவது மிகவும் அரிய செயலாகும். சிந்துவெளி மக்களின் நுட்பமான அறிவாற்றல் மணிகளைப் பழுதுருமல் துளையிட உதவியது போலும். மேலும், மோதிரங்கள் மிகப் பல கிடைத்துள்ளன. அவை பல

வகையான உலோகங்களால் செய்யப்பட்டனவாகத் தெரிகின்றன.

பல தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருத்தை அங்குக் கிடைத்த வளையல்களும், காப்புகளும் கவர்ந்துள்ளன. அவை, பெரும்பாலும் செம்பாலும், வெண்கலத்தாலும் செய்யப்பட்டனவாகும். சிப்பியால் செய்யப்பட்ட வளையல்களும் கிடைத்துள்ளன. களிமண்ணாலும் வளையல்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் பலவகை வண்ணங்கள் பூசப்பெற்று ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

பெண்களின் முகப் பொலிவிற்கு உதவும் காதணிகளும், மூக்கணிகளும், நெற்றிப் பதக்கங்களும் (சுட்டிகளும்) மிகப் பலவாகக் கிடைத்துள்ளன. "இந்தியப் பெண்களிடை மூக்கணி அணியும் வழக்கம் பழங்காலத்தில் இருந்ததில்லை; பாரசிகப் (முசுலீம்) பெண்களைப் பார்த்தே மூக்கணிகளை இந்தியப் பெண்கள் அணியக் கற்றனர்" என்ற கருத்துச் சிந்துவெளியில் கிடைத்துள்ள மூக்கணிகளால் பொய்த்துவிடுகிறது. டாக்டர் மக்கே என்ற அறிஞர், சிந்துவெளி மகளிர் மூக்கணிகள் அணிந்திருந்தனர் என்பதை, "அக்கால மங்கையர் மூக்கணிகளைப் பயன்படுத்தினர்; அரக்கு, கல், உலோகம், நீலநிறச் சுண்ணாம்புக்கல் முதலியவற்றால் செய்யப்பட்ட மூக்கணிகளைப் பயன்படுத்தினராதல் வேண்டும்"[1] என்று திட்டவட்டமாகக் கூறுகிறார். எனினும், பெரும்

---

[1] Dr E. Mackay: The Indus Civilization—P—115.

பாலான ஆராய்ச்சியாளர்கள் சிந்துவெளி மகளிர் மூக்கணி அணிந்தமை குறித்து ஐயுறுகின்றனர்.

சட்டைக்கு அணியப்படும் பொத்தான்கள் பல கிடைத்துள்ளன. ஆண்களும் பெண்களும் தங்கள் கொண்டை அவிழ்ந்து விடாமல் இருக்கக் கொண்டை ஊசிகளைப் பயன்படுத்தினராதல் வேண்டும். மஞ்சள் கலந்த வெண்மை நிற மாக்கல்லினால் செய்யப்பட்ட பதக்கம் ஒன்று மொகஞ்சோ-தாரோவில் கிடைத் திருக்கிறது. இதன் மீது பிறை போலச் செதுக்கப்பட்டி ருக்கிறது. இது ஒருகால் சமயத் தலைவர் அணியும் பதக்கமாக இருந்திருக்கலாம் என்பது அறிஞர் கருத்து.

மணிகள் :

அரப்பாவில் உருவாலும் பொருளாலும் வேறு பட்ட மணிகள் பெரும் அளவில் கிடைத்துள்ளன. அவை பொன், வெள்ளி, செம்பு, வெள்ளைச் சுண்ணாம்புக்கல், மாக்கல், பலவகைப்பட்ட கற்கள், சிப்பி, மண் ஆகியவற்றால் செய்யப் பெற்றுள்ளன. மொகஞ்சொ—தாரோவில் கிடைத்துள்ள பொன்மணி கள் குறிப்பிடத் தக்கன. கற்களினால் மணிகளைச் செய் வதற்குரிய அறுத்தல், செதுக்கல், துளை போடுதல், மெருகிடல் ஆகிய முறைகளைக் கையாண்டனர் என்பதைச் சான்ஹு-தாரோவில் கிடைத்துள்ள மணி கள் செய்யும் கடையினால் அறிகிறோம்.

கற்கள்:

சிந்துவெளி நகரங்களில் பல வகையான கற்கள் கட்டடங்களுக்காகவும் பிற பொருள்களுக்காகவும்

பயன்படுத்தப்பட்டன. அவை அண்மையிலும் சேய்மையிலும் உள்ள ஊர்களிலும் நாடுகளிலும் இருந்து வந்தவெனத் தெரிகிறது. வடிகால்களை மூடு வதற்குச் சுக்கூர் சுண்ணப்புக் கற்கள் பயன்படுத்தப் பட்டன. அம்மி, எந்திரம், உரல் முதலியன சுற்றுப் புறங்களில் உள்ள படிவுப் பாறைகளில் இருந்து செய்யப்பெற்றுள்ளன. மாக்கல், முத்திரைகள், சிறு சிலையுருவங்கள் செய்வதற்கு உதவியாக இருந்தன. சிலைகளும் சமய வழிபாட்டிற்குரிய லிங்கம், ஆவுடையார் முதலிய படிமங்களும் மஞ்சள் நிறக் கற்களால் செய்யப்பட்டன. பல வகையான சிறு கற்களும், மணிகளும் எளிய மக்கள் அணிவதற்குரிய நகைகள் செய்யப் பயன்படுத்தப்பட்டன. பச்சை அமேசான் கற்கள் பல சிந்து வெளியில் கிடைத் துள்ளன. சிறப்பு வாய்ந்த பச்சை அமேசான் கற்கள் இந்தியாவில் நீலகிரிப் பகுதியிலுள்ள 'தொட்டபெட்டா' விலிருந்து சிந்து வெளிக்குச் சென்றி ருக்க வேண்டும் என்பது அறிஞர்களுடைய கருத்தாகும்.

இதைப் போன்றே சிந்துவெளிக்கு அண்மையில் கிடைக்காத செவ்வந்திக் கற்கள், இரவைக் கற்கள், சிவப்பு, மஞ்சள், நீல நிறக் கற்கள், சூரியகாந்தக் கற்கள், வைடூரியம், மாணிக்கம், கோமேதகம், வயிரம், பளிங்குக்கல், பாம்புக்கல், படிகக்கல் முதலியன வற்றைக் கொண்டு செய்யப்பட்ட அணிகலன்களைச் சிந்துவெளியில் காணுகின்றோம். இதனால், சிந்து வெளி மக்கள் நெடுந்தொலைவில் இருந்த நாடுகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருந்தமை நன்கு புலனா கின்றது.

விளையாட்டுப் பொருள்கள் :

சிந்துவெளியில் வாழ்ந்த குழந்தைகள் பலவகையான விளையாட்டுக் கருவிகளைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. சுட்ட மண்ணால் செய்யப்பட்ட விலங்குகள் பறவைகள், ஆண் பெண் பொம்மைகள், சிறு செப்புகள் முதலியன மொகஞ்செசா - தாரோ, அரப்பா ஆகிய இடங்களில் நிரப்பக் கிடைத்துள்ளன. களிமண்ணால் பொம்மைகள் செய்தல் சிந்துவெளியில் வாழ்ந்த குழந்தைகளின் பொழுதுபோக்காக இருந்தது எனலாம். கம்பில் கட்டப்பட்ட ஒரு கயிற்றின் மீது, ஒரு பறவை ஏறி இறங்கும்படியாகப் பொறியமைப்பு செய்யப்பட்டுள்ளது பாராட்டுதற்குரியதாகும். கிலுகிலுப்பைகள் பறவை வடிவில் செய்யப்பட்டுள்ள (இன்றும் ஊதும்) ஊதுகுழல்கள், தலை அசைக்கும் எருதுகள், இழுத்துச் செல்லுவதற்கேற்பச் செய்யப்பட்டுள்ள விளையாட்டு வண்டிகள் யாவும் சிறப்புடையன. அரப்பாவிலும், சான்ஹு-தாரோவிலும் கிடைத்துள்ள குழந்தைகளின் விளையாட்டு வண்டிகள் ஒப்பற்றன. அவை செம்பினால் செய்யப்பட்டுள்ளன; திண்மையான சக்கரங்களை உடையனவாகக் காணப்படுகின்றன. இவை 'ஊர்' என்ற நகரத்தில் கிடைத்த கல் ஒன்றில் கி. மு. 3200க்கு முன்பு செதுக்கப்பட்ட தேரை ஒத்துள்ளன. இவ் வண்டிகளுக்கு நிகராக, வேறெங்கும் (இன்றுவரை) கலைத்திறன் வாய்ந்த சிறு வண்டிகள் கிடைக்கவில்லையாம்.[1]

சிந்துவெளியில் கிடைத்துள்ள விளையாட்டுப் பொருள்களில் கோலிகள் மிகுதியாக உள்ளன.

---

1 CHI. IC—P. 69.

களிமண் பந்துகள் பலவித உருவங்களில் கிடைத்துள்ளன. இதனால், சிந்துவெளி இளைஞர்கள் கோலி விளையாட்டிலும், பந்தாட்டத்திலும் பெரிதும் ஈடுபாடு உடையவராக இருந்தனர் எனத் தெரிகிறது. பெரியவர்கள் சதுரங்கம், சொக்கட்டான் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். வேட்டையாடுதல், கோழிச் சண்டை, கவுதாரிச் சண்டை, ஏறு தழுவல் (மஞ்சுவிரட்டு) முதலியன அக்காலத்திய மக்களின் பொழுதுபோக்காக இருந்தன என்பர் டாக்டர் மக்கே.

விலங்குகள் :

சிந்துவெளியின் சின்னங்களில் பல விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. விளையாட்டுக் கருவிகளாகச் சில விலங்குகளின் பொம்மைகள் செய்யப்பட்டுள்ளன. முத்திரைகள் சிலவற்றுள் விலங்குகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சிந்துவெளி மக்களுக்குத் தெரிந்திருந்த விலங்குகளையும் பறவைகளையும் நாம் அறிய முடிகிறது. அவை பழக்கப்படுத்தப்பட்ட வீட்டு விலங்குகள் என்றும், காட்டு விலங்குகள் என்றும் இரு வகைப்படும்.

அக்காலத்தில், சிந்துவெளி நீர் வளமும் நில வளமும் மிகுதியாகப் பெற்றிருந்தமையால், அங்குப் பெரும் காடுகள் இருந்தன. காட்டு விலங்குகளான புலி, கரடி, காண்டாமிருகம், யானை, காட்டெருமை முதலியவற்றைச் சிந்துவெளி மக்கள் அறிந்திருந்தனர். தந்தத்தால் செய்யப்பட்ட சில பொருள்கள் இவ்விடங்களில் கிடைத்துள்ளமையால்

யானையின் பயனை நன்கு அறிந்து இருந்தனர் எனத் தோன்றுகிறது. எருது உழவுத் தொழிலுக்குப் பயன் பட்டது; சிவபெருமானுக்குரிய விலங்காகவும் கருதப் பட்டது. இதனை முத்திரைகளினால் அறிகிறோம். சிவபெருமான் 'பசுபதியாக'க் காட்சி அளிக்கும் முத்திரையில் எருது முதலிடம் பெற்றிருப்பது குறிப் பிடத் தக்கது. அக்காலத்தில், வீட்டு நாய்களும் வேட்டை நாய்களும் பல இருந்தன என்பதற்குரிய அறிகுறிகள் பல கிடைத்துள்ளன. பாக்கல் ஒன்றில், வேட்டை நாயின் உருவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளமை இங்குக் கருதுதற்குரியது. அரப்பாவில் வாழ்ந்த மக்கள் பூனைகளை நன்கு அறிந்திருந்ததோடு வீடுகளில் வளர்த்தும் வந்தனர்.

கருவிகள் :

சிந்துவெளி மக்கள் பொன், வெள்ளி, செப்பு, வெண்கலம், வெள்ளீயம், காரீயம் முதலிய கனிப் பொருள்களைக் கொண்டு, பல அணிகலன்களும், கருவி களும் செய்து கொண்டனர். அவர்கள் இரும்பை அறிந்திருந்தனர் என்பதற்கு உரிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. வெள்ளீயத்தையும் செம்மையும் கலந்து வெண்கலம் என்னும் கலப்பு உலோகத்தை ஆக்கக் கற்றிருந்தனர். இவ்விடங்களில் காணப்படும் பொன்னில், வெள்ளி கலக்கப் பெற்று இருக்கிறது. அத்தகைய பொன், இந்தியாவில் கோலார் பகுதியில்தான் தொன்றுதொட்டுக் கிடைத்து வருகிறது. எனவே, சிந்துவெளி மக்கள் தென்னாட்டில் இருந்துதான் பொன்னைப் பெற்றிருக்க வேண்டும் என்று மார்ட்டிமர் வீலர் முதலான அறிஞர்கள் கருது

கின்றனர். பொன்னைப் பொலிவு மிக்க அழகிய நகைகள் செய்வதற்கே பயன்படுத்தினர். அவர்கள் பயன் படுத்திய செம்பில் ஈயக் கலவை உள்ளமையால், இராசபுதனம், பாரசீகம் முதலிய இடங்களில் இருந்து செம்பைத் தருவித்து இருக்க வேண்டும்.

செம்புக் கற்காலம் :

பிற நாடுகளில் கற்களினால் செய்யப்பெற்று வந்த கத்தி, ஈட்டி, அம்பு முதலிய கருவிகளையும், நீர்ச் சாடிகள், தட்டுகள், தாழிகள், அவற்றின் மூடிகள், கோடரிகள், உளிகள் முதலிய வீட்டுச் சாமான்களையும் செம்பினாலேயே சிந்துவெளி மக்கள் செய்துள்ளனர். கி. மு. மூவாயிரத்திற்கு முற்பட்ட பழைய மொகஞ்சொ-தாரோ நகர் அடுக்குகளில் செம்பு காணப்படுகிறது. இந்தியாவில், தொல்பழங் காலத்தில் செம்பு மிகப் பெரிதும் பயன்படுத்தப் பெற்றது என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சம்மட்டியால் வடிக்கப் பெற்ற 424 செம்புக் கருவிகள் சிந்துவெளியில் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. வெள்ளீயத்தைத் தனியாகப் பயன் படுத்தியதாகத் தெரியவில்லை; செம்போடு கலந்து வெண்கலமாகவே பயன்படுத்தினர். கூர்மையுள்ள முனைகளையும் மென்மையான விளிம்புகளையுமுடைய கருவிகளைச் செய்வதற்கும் பேரளவில் வெண்கலத்தைப் பயன்படுத்தினர். இவ் வெண்கலமும் சிந்துவெளியில் ஆழமான அடுக்குகளில் காணப்படுகின்றன. இதனால், கி. மு. மூவாயிரத்திற்கு முன்பே இங்கு வாழ்ந்த பண்டை மக்களால் வெண்கலம் பயன்படுத்தப் பெற்றமை புலனாகின்றது. இந்தியாவில் ‘வெண்கலக் காலம்’ இருந்ததில்லை என்ற சில வரலாற்றாசிரியர்

களின் கருத்து, சிந்துவெளி நாகரிகப் பழம்பொருள் சின்னங்களால் பொய்த்துவிட்டது. இத்தகைய கனிப் பொருள்களால் உளிகள், வாய்ச்சிகள், மழித்தற் கத்திகள், உழவுக் கருவிகள், தூண்டில் முட்கள், துணி தைக்கும் ஊசிகள், சுத்திகள் முதலியன செய்யப் பெற்றன.

சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய தட்டுமுட்டுச் சாமான்கள், வேட்டையாடுவதற்குரிய கருவிகள் முதலியன பெரும் அளவில் கிடைத்துள்ளன. அவற்றுள் சில கற்களாலும், பல செம்பினாலும், வெண்கலத்தாலும் செய்யப்பட்டவை. இவ்வாறு கற்களாலும் செம்பினாலும் செய்யப்பெற்ற கருவிகளை ஒரே காலத்தில் பயன்படுத்தி யுள்ளமையால், அவர்களுடைய நாகரிகத்தைச் **செம்புக் கற்கால** (Chalco-lithic) நாகரிகம் என்பர். போர்க் கருவிகள் என்று கருதத் தக்கனவாகக் கிடைத்துள்ள அம்பு, ஈட்டி, கோடரி, உடைவாள், குறுந்தடி முதலியவற்றைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர், 'அவற்றைப் போர்க் கருவிகள் என்று துணிந்து கூற இயலாது; பெரும்பாலும் வேட்டையாடுவதற்குப் பயன்பட்ட கருவிகளாகவே இருக்க வேண்டும்' என்று கருதுகின்றனர்.

சிந்துவெளியில் கிடைத்துள்ள அம்பு முனைகள் மெல்லிய வெண்கலத் தகடுகளால் செய்யப்பட்டவை. இவற்றிற்கு மரக் கைப்பிடிகள் இடப்பட்டுள்ளன. வேட்டை ஆடுவதற்கு இவற்றைப் பெரிதும் பயன் படுத்தி இருக்கலாம். பல அம்பு முனைகள் இரு புறமும் கறுக்கும் கூர்மையும் உள்ளனவாகச் செய்யப்

பட்டுள்ளன. ஈட்டிகள் மிகவும் மென்மையான தகடு களால் இலை வடிவில் செய்யப்பட்ட முனையும் மிகக் கூரிய நுனியும் உடையனவாகக் காணப்படுகின்றன. வெண்கலத்தால் செய்யப்பட்ட வேல்கள் பல கிடைத் துள்ளன. தூண்டில் முட்கள், உழவுக் கருவிகள், ஊசிகள் முதலிய பல கருவிகள் செம்பாலும் வெண் கலத்தாலும் செய்யப்பட்டுள்ளன.

இங்கு வாள்களும் போர்க் கவசங்களும் காணப் பெறாதது குறிப்பிடத் தக்கதாகும். வெண்கலத்தாலும், செம்பாலும் செய்யப் பெற்ற கைக்கோடரி, அரிவாள், அரம், உளி, மழித்தற் கத்திகள் ஏராளமாகக் கிடைத் துள்ளன. இவற்ேறாடு கற்களாலான தட்டுகள், வட்டில்கள், மெருகிடும் கருவிகள், எடைக் கற்கள் முதலிய கலைத்திறன் வாய்ந்த பொருள்கள் எல்லாம் செம்புக் கற்காலத்தைச் சேர்ந்தனவாகக் காணப் படுகின்றன.

பிறரைத் தாக்குவதற்குரிய போர்க் கருவிகளும் தற்காப்புக் கருவிகளும் சிந்துவெளியில் கிடைக்கப்பெற வில்லை. ஆகவே, இங்கு வாழ்ந்த மக்கள் படை பலத்தை நம்பி வாழவில்லை என்பது புலனாகின்றது; மேலும் அயலார் படையெடுப்புக்களைப் பற்றிய அச்சந்தால் துன்புறுதவர்களாக வாழ்ந்திருக்கலாம் என்பது சர் ஜான் மார்ஷலின் கருத்தாகும்.

மண்பாண்டங்கள் :

பழம்பொருள் சின்னங்களில் கிடைக்கும் மண் பாண்டங்களைக்கொண்டு, ஒரு நாட்டின் நாகரிகத்தின்

விழுப்பத்தினை அறுதியிடுவது தொல்பொருள் ஆராய்ச்சியாளரின் வழக்கமாகும். அம் முறையில், சிந்துவெளியில் கிடைத்துள்ள பலவகையான மண் பாண்டங்களைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் நன்கு ஆராய்ந்து பார்த்துச் சில அரிய உண்மைகளைத் தெரிவித்துள்ளனர்.

சிந்துவெளியில் கிடைத்துள்ள மண் பாண்டங்கள் குயவர் உருளைகளைக் கொண்டு அழகாக வனையப்பட்டுள்ளன. அவை பலநிறப்பட்டன; சில இயல்பான நிறம் உடையன; பல நிறம் பூசப்பெற்றுள்ளன; பெரும்பாலானவற்றுள் ஓவியம் தீட்டப்பெற்றுள்ளன. இவை இரானிலும், மெசொப்பொட்டேமியாவிலும் கிடைத்துள்ள மிகவும் இலேசான நேர்த்தி வாய்ந்த மண்பாண்டங்களைப் போன்றவை அல்ல. சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டங்கள் கனமானவை; வலிமையுடையவை. அன்றாட வாழ்விற்குப் பெரிதும் பயன்படத் தக்கவையாக உள்ளமை குறிப்பிடத் தக்கது.

சிந்துநதியின் வண்டல் மண்ணே, மண்பாண்டங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. இக் களிமண்ணில் அப்பிரகம், சுண்ணம்பு ஆகியவற்றின் நுண்ணிய அணுக்களை இன்றும் காணலாம். இம் மண்ணுடன் சிறிது தெள்ளிய மணலைக் கலந்து நன்றாக அரைத்து மண்பாண்டங்களையும், விளையாட்டுப் பொருள்களையும் செய்தனர். சிலவகையான மண் பாண்டங்கள் கையினலும் செய்யப்பட்டனவாகத் தெரிகிறது. மண்பாண்டங்கள், செங்கற்கள், சிவப்பு மண் படிவங்கள் யாவும் நன்கு சூளையிடப்பட்டுள்ளன.

சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்ட மண் பாண்டங்கள் பேரளவில் கிடைத்துள்ளன. அவை அழகிய வேலைப்பாடின்றி எளிய முறையில் செய்யப் பட்டுள்ளன. ஒருசில மண்பாண்டங்களைத் தவிரப் பெரும் பாலான மண்பாண்டங்களில் ஏதேனும் ஒரு வகை நிறம் தீட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பல செந்நிறம் பூசப் பெற்றும், கருப்புப் பட்டைகள் அடிக்கப்பட்டும் உள்ளன. சிறுபான்மை, பசுமை, வெண்மை கலந்த மஞ்சள், சாம்பல் நிறங்களும் பூசப்பட்டுள்ளமை கண் கவர் நேர்த்தியுடையனவாகும்.

ஓவியம் தீட்டப்பட்ட மண்பாண்டங்கள் பல மொகஞ்சொ-தாரோவில் கிடைத்துள்ளன. சிவப்பும் கருப்பும் மாற்று நிறங்களாகக்கொண்டு விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்கள் கவர்ச்சிமிக்க பின்னணிகளுடன் தீட்டப்பட்டுள்ளன. சிந்துவெளியில் கிடைத்துள்ள மண்பாண்டங்கள் யாவும் பழமையின் உறுதியும், எளிமையின் எழிலும் உடையவை என்று அறிஞர் போற்றுகின்றனர்.

சான்ஹூ-தாரோ, குழந்தைகளுக்குரிய விளையாட்டுப் பொருள்கள் செய்வதில் சிறந்து விளங்கியதாகத் தெரிகிறது. கிலுகிலுப்பைகள், ஊது குழல்கள், எருதுகள், மான்கள், வண்டிகள், பொம்மைகள், செப்புகள் முதலியன களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையிடப் பட்டன. அழகிய நிறங்கள் பூசப்பெற்று ஓவியங்கள் தீட்டப்பட்டன. குழந்தைகள் இழுத்துச் செல்லும் வண்டிகள் ஈடு இணையற்றவை. இவை யாவும் சிந்து வெளி மக்கள் மண் பாண்டங்களை வனைவதில் முதிர்ச்சி

யுற்ற அறிவும் திறனும் பெற்று இருந்தனர் என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

பலவகைப்பட்ட மண்பாண்டங்கள் சிந்துவெளியில் கிடைத்துள்ளன. தட்டுகள், தாம்பாளங்கள், கிண்ணங்கள், பானைகள், சட்டிகள், குடங்கள், மைக் கூடுகள், பூசைக்குரிய மண்பாண்டங்கள், புரிமணைகள், எலிப் பொறிகள், கனல் சட்டிகள், விளக்குகள் முதலியன குறிப்பிடத் தக்கன. அவை யாவும் கண்கவர் வனப்புடன் விளங்குகின்றன; பளபளப்புடன் விளங்கும் வண்ணம் மெருகிடப் பெற்றுள்ளன. தொல் பழங்கால நாகரிக நாடுகளில் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டங் களுள், மெருகிடப்பட்ட சிந்துவெளி மண்பாண்டங்கள் முதன்மையானவை; ஒப்பற்றவை; பொலிவுடையவை; சிறப்பு வாய்ந்தவை. இத்தகைய மண்பாண்டங்கள். கி. மு. 1000- அளவில் மெசொப்பொட்டேமியாவிலும், கி. மு. 800-க்குப் பிறகு எகிப்திலும் செய்யப்பெற்றன. 1950 - ஆம் ஆண்டு மொகஞ்சொ-தாரோவில் அகழ்ந் தெடுக்கப்பட்டபோது கிடைத்த மண்பாண்டங்கள், சிந்துவெளியில் காலந்தோறும் மாற்றமும் வளர்ச்சியும் உடையதாய், மண்பாண்டத் தொழில் சிறப்புற்று விளங்கியதைத் தெளிவாக விளக்குகின்றன. சிந்து வெளி நாகரிகத்தின் இறுதிக் காலத்தில் மண் பாண்டத் தொழிலின் கலைத்திறன் நலிவுற்றதை இவை ஒருவாறு உணர்த்துகின்றன.

நிறைக்கற்கள் :

இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பழம்பொருள் சின்னங்கள் பலவற்றுள் கிடைத்த நிறைக்கற்கள் ஆராய்ச்சியாளரின் கருத்தைக் கவர்ந்துள்ளன.

கல்லால் செய்யப்பெற்ற, வழவழப்பான நிறைக் கற்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. சிறிய நிறைக் கற்கள் முப்பட்டை வடிவம் உடையன; பெரியவை கூர் உருளை வடிவானவை. இந் நிறைக் கற்கள் ஏலம் (Elam) மெசொப்பெட்டேமியா முதலிய இடங்களில் கிடைத் துள்ளவற்றைக் காட்டிலும் மிகவும் திருத்தமானவை ஆகும். அரப்பாவில் கிடைத்த பல எடைக் கற்கள் ஆராய்ச்சியாளர்களால் நன்கு சோதிக்கப்பட்டன. அவை யாவும் பிழையின்றித் திருத்தமாக, இடையறாது ஒழுங்காக, ஒரே அளவுடையனவாகச் செய்யப்பட்டு உள்ளன. இதனால், அந் நகராட்சியின் ஒழுங்கு முறையை உய்த்துணரலாம். அவற்றுள் நிறையின் அளவு எண் பொறிக்கப்படவில்லை. எனினும், பண்டைய உலகில் வேறு எந்த நாடுகளிலும் காணமுடியாத ஒழுங்கான ஒரு முறையைப் பின்பற்றியதாகத் தெரிகிறது. இந் நிறைக் கற்கள் முதலில் இரட்டை எண்மானம் உடையனவாக இருந்திருக்க வேண்டும் என்பது அறிஞர் கருத்து. 1, 2, 4, 8, 16, 32, 64, 160, 200, 800 என்னும் எடை முறையில் நிறைக் கற்கள் காணப்படுகின்றன. பெரு வழக்கில் இருந்த கற்கள் '16' நிறை உடையதாகும். அந்தக் கல்லின் எடை 13·625 கிராம். இவற்றைவிட அதிக எடை உள்ள நிறைக் கற்கள் பதின்மான முறையில் மூன்றை எண்மானக் கீழ்வாய் ($\frac{1}{3}$) இலக்கமாகக் கொண்டுள்ளன. இந் நிறைக் கற்களின் ஒழுங்குமுறையால், சிந்துவெளி நகரங்களின் நகராட்சி மன்றங்கள் நிறைக்கற்களின் நேர்மையையும் செம்மையையும் கருத்துடன் ஒழுங்கு படுத்தி வந்தமை புலனாகிறது.[1]

1 CHI. IC—P—61.

தொழில்கள் :

சிந்துவெளியில் வாழ்ந்த மக்கள் பலவகைத் தொழில்களைச் செய்து வந்தனர். பெரும் களஞ்சியங்கள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதை 'நகர அமைப்பில்' கண்டோம். பெரும் அளவில் தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டமையே, அம் மக்கள் உழவுத் தொழிலினை நன்கு அறிந்திருந்தனர் என்பதற்குப் போதிய சான்றாகும். மேலும் பல உழவுக் கருவிகள் சிந்துவெளியில் கிடைத்துள்ளமை இங்குக் கருதுதற்குரியது.

உழவு :

நல்ல நீர்வளமுடைய ஆற்று வண்டல் படிந்த செழிப்பு மிக்க நிலப் பகுதியினைச் சிந்துவெளி மக்கள் உழுது பயிரிட்டனர். உழவுத் தொழில் சிறப்புடைய தொழிலாகப் பெரும்பான்மையோரால் செய்யப் பட்டிருக்க வேண்டும். நெல், கோதுமை, வால் கோதுமை, எள், பருத்தி முதலியன பயிரிடப்பட்டன. நிலத்தை உழுவதற்குக் கலப்பைகளைப் பயன்படுத் தினர்.

நெசவு :

உண்பதற்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிரிட்டுக் கொண்ட சிந்துவெளி மக்கள், தங்களுக்கு வேண்டிய ஆடைகளையும் நெய்யக் கற்றிருந்தனர். மொகெஞ்சொ-தாரோவில் உள்ள வீடுகள் பலவற்றுள் நெசவிற்குரிய 'கதிர்கள்' பல கிடைத்துள்ளன. இதனால் பல வீடுகளில் நெசவுத் தொழில் நடந்து வந்தமை தெரிய வருகிறது. அவர்கள் பெரிதும் பருத்தியைக்

கொண்டே நூல் நூற்று ஆடை நெய்தனர். கம்பளி ஆடைகள் ஒரோவழி அருகிக் கிடைத்துள்ளமையால், சிந்துவெளியில் கம்பளங்கள் நெய்யப்படவில்லை என்பதை உய்த்துணரலாம். நாரினல் நெய்யப்பட்ட ஆடைகள் சில கிடைத்துள்ளன. அவை ஒருகால் அயல் நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டனவாக இருந்திருக்கலாம். மொகஞ்சொ-தாரோவில் கிடைத்த 'பஞ்சு' இன்றைய இந்தியப் பஞ்சைப் போலவே இருக்கிறதாம். இந்தப் பஞ்சைத்தான் பண்டைய மேலைநாட்டு மக்கள் 'சிந்து' என்று போற்றினராம். சிந்துவெளி மக்கள் இடுப்பில் ஓராடையும், மேலாடை ஒன்றும் உடுத்தினர். வளமான வாழ்க்கையுடையோர் பூ வேலைப்பாடமைந்த ஆடைகளை உடுத்தியும், மேலாடையாகப் போர்த்தும் கொண்டனர் எனத் தெரிகிறது.

கொத்துவேலை :

சிறு வீடுகள் முதல் மாபெரும் கட்டடங்கள் வரை எண்ணற்ற மாட மாளிகைகளைச் சிந்துவெளியில் காண்கிறோம். இதனல், சிந்துவெளி மக்கள் கட்டடங்களைக் கட்டுவதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர் என்பது புலனாகிறது. நல்ல திறமையும், சிறந்த அனுபவமும் பெற்ற கொத்தர்கள் சிந்துவெளியில் வாழ்ந்திருக்க வேண்டும். சுட்ட செங்கற்களையும் உலர்ந்த செங்கற்களையும் கொண்டு வழவழப்பாக நேர்த்தியும் கவர்ச்சியும் உடைய சிறந்த கட்டடங்கள் பலவற்றைக் கட்டும் கலையைத் தொல்பழங்கால மக்கள் நன்கு அறிந்திருந்தமை நம்மை வியப்பில் ஆழ்த்துவதாகும். வசதி மிக்க வடிகால்களையும்,

தெப்பக்குளத்தினையும் கட்டிய கொத்தர்களின் 'கை வண்ணத்தை' இக்காலக் கொத்தர்களிடத்துக் காண்பது அரிதேயாகும்.

மண்பாண்டத் தொழில் :

ஒரு நாட்டு நாகரிகத்தின் சிறப்பினை எடுத்தியம்புவன பலவகைக் கலைப்பொருள்களும் மண்பாண்டங்களுமே யாகும். சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பை மிகுதிப்படுத்துவது அங்குக் கண்டெடுக்கப்பட்ட மண்பாண்டங்களே என்று கூறின் மிகையாகாது. அவற்றைச் செய்த குயவர் தம் கைத்திறனும், புதுமை நாடும் கற்பனை உள்ளமும் பாராட்டுவதற்குரியன. குழந்தைகளின் விளையாட்டுக் கருவிகள் முதல், இறந்தோரைப் புதைக்கப் பயன்பட்ட தாழிகள் வரையுள்ள பல திறப்பட்ட மண் பாண்டங்களைச் செய்து தந்தனர். மண்பாண்டங்களைச் சுடுவதற்குக் காளவாய்கள் பல பயன்படுத்தப்பட்டன. சுடப்பட்ட மண்பாண்டங்களைப் பொறுமையாகப் பல வண்ணங்களைப் பூசி, அவற்றின் மீது காண்போர் உள்ளத்தைக் கவரும் பலவகை ஓவியங்களைத் தீட்டுவதிலும் மண்பாண்டத் தொழில் வல்லார் ஈடுபட்டனர் எனத் தெரிகின்றது.

தச்சுவேலை :

மக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் உணவு சமைக்கப் பயன்படும் ஏனங்கள், கல் சட்டிகள், அம்மிகள், உரல்கள், குழவிகள், எந்திரங்கள், ஆட்டுக் கற்கள் முதலியவற்றைக் கல் தச்சர்கள் கலைப்பண்பு குன்றாத வண்ணம் செய்து தந்துள்ளனர். சிந்து

வெளியில் கிடைத்துள்ள லிங்கங்கள், முத்திரைகள், சிலைகள் ஆகியவற்றையும் கல் தச்சர்கள் அழகுறச் செய்து கொடுத்துள்ளனர். மர வேலைப்பாடுடைய பொருள்கள் இன்று சிந்து வெளியில் கிடைக்கவில்லை. எனினும், முத்திரைகளில் காணப்படும் கட்டில் நாற்காலி, பெட்டி, மனை முதலியவற்றால் மரத்தச்சர் களும் அக்காலத்தில் இருந்தனர் என்பதை அறிகிறோம்.

பொன் வேலை:

பொன்னினால் செய்யப்பட்ட அணிகள் பல இங்குக் கிடைத்துள்ளன. காப்புகள், வளையல்கள், கழுத்து அணிகள், மாலைகள், காதணிகள், மோதிரங்கள் முதலியவற்றின் வேலைப்பாடு சிறந்து விளங்குகின்றன. இவற்றின் இழைப்பு வேலைப்பாடு இணையற்றதாகும். பொன் அணிகளில் பலவகையான விலை மதிப்புடைய இரத்தினக் கற்களைப் பொருத்தவும், இழைக்கவும் சிந்துவெளிப் பொற்கொல்லர் நன்கு கற்றிருந்தனர்.

உலோகங்களைக் காய்ச்சி உருக்கிக் கலவை உலோகங்கள் செய்யக் கற்றிருந்த வேலையாள்கள் (கன்னார்) பலர் சிந்து வெளியில் இருந்திருக்க வேண்டும். செம்பினைக் கொண்டு செய்யப்பட்ட வெண்கலம், பித்தளை முதலிய கலவை உலோகங்களைச் சிந்துவெளியில் காணுகிறோம். வெண்கலத்தால் வார்க்கப்பட்ட வெண்கலச் சிலைகள் சில அழகும் உயிர்க்களையும் உடையனவாகக் காணப்படுகின்றன. இதனால், உலோக வேலைப்பாட்டிலும் சிந்துவெளி மக்கள் சிறப்புற்றிருந்தனர் என்பது அறியப்படுகிறது.

இவை அல்லாமல், சங்குகளை அறுத்து வளையல் செய்யவும், கற்களிலும் உலோகங்களிலும் செதுக்கு

வேலை செய்யவும் கற்றிருந்தனர். தோட்டி வேலை, மழித்தல் வேலை, தந்த வேலை, மணிகளைச் செய்யும் வேலை, பாய் முடைதல், தையல்வேலை, முதலிய பலவகை வேலைகளையும் செய்து வந்தனர் என்பதனைச் சிந்து வெளியில் கிடைத்துள்ள பலவகையான பழம்பொருள் சின்னங்களால் அறிகிறோம்.

வாணிகம் :

மொகஞ்சொ-தாரோ மக்கள் வெளிநாடுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். பலவகையான உலோகப் பொருள்கள், விலையுயர்ந்த மணிகள் முதலிய பல அரிய பொருள்களை நடு ஆசியா. மேற்காசியா முதலிய இடங்களிலிருந்தும், இந்தியாவின் கிழக்குத் தெற்குப் பகுதிகளில் இருந்தும், மைசூர், நீலகிரி, காசுமீர் முதலிய ஊர்களிலிருந்தும் தங்கள் நகரங் களுக்குத் தருவித்தனர். சுமேரியாவோடு மிக நெருங்கிய வாணிகத் தொடர்பு கொண்டிருப்பதைப் பல பழம்பொருள் சின்னங்கள் சுட்டிக் காட்டுகின்றன. எகிப்து, கிரீத் முதலிய நாடுகளோடு வாணிகத் தொடர்பு இருந்து வந்ததாகத் தெரிகிறது.

சிந்துவெளியில் கிடைத்த முத்திரை ஒன்றில் பாய்மரம் இல்லாத கப்பல் ஒன்று செதுக்கப்பட்டு இருக்கிறது. அதனுள் கப்பலோட்டி சுக்கான் அருகில் அமர்ந்து கப்பல் ஓட்டுவது போலக் காணப்படுகிறது. மண்பாண்டம் ஒன்றில் படகின் உருவம் தீட்டப்பெற் றுள்ளது. இவை இரண்டும் சிந்துவெளி மக்கள் கடலைக் கடந்து செல்லுவதற்கு மரக்கலங்களைப் பயன் படுத்தினர் என்பதனைக் குறிப்பாக உணர்த்துகின்றன.

மேலும், அவர்கள் உள்நாட்டு வாணிகம் மட்டும் செய்ய வில்லை; வெளிநாட்டு வாணிகமும் செய்தனர்; அதனை நிலத்தின் வழியாகவும் நீரின் வழியாகவும் செய்தனர் என்பதைத் தெளிவாக அறிவுறுத்துகின்றன.

சிந்து நதியும் அதன் கிளை ஆறுகளும், நெடுந் தொலைவில் இருந்து பாரமான பொருள்களைக் கொண்டு வர 'அசைந்தோடும் தெருக்களாகப் பயன்பட்டன! இந் நகர மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை நெடுந்தொலைவில் உள்ள இடங்களில் இருந்து சேர்த்துக் கொண்டுவந்து, தந்து உதவுவதற்குப் பெரிதும் பயன் பட்டன.'[1] சிந்துவெளியில் செய்யப்பெற்ற பொருள் கள் டைகிரிசு, யூப்ரேட்சு ஆற்றோரங்களில் சிறப்புடன் திகழ்ந்த நகரங்களின் கடைத் தெருக்களில் சென்று குவிந்தன.

உலகின் பழம்பெரும் நாகரிகங்கள் என்று போற்றப்படும் பாபிலோனியா, எகிப்து, மெசொப்-பொட்டேமியா, சுமேரியா, ஏலம் முதலிய நாடுகளின் அழிவுச் சின்னங்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பல பழம் பொருள்களைக் கண்டெடுத்துள்ளனர். அவற்றை முத்திரைகள், ஓவியங்கள், கருவிகள், மண் பாண்டங்கள் என்று வகைப்படுத்தலாம். சிந்து வெளியின் சின்னங்களில் கண்டெடுக்கப்பட்ட பல

1 "The Indus and its tributaries provided moving roads for the transport even of heavy goods over long distances; food-stuffs could be collected from a wide area to support large urban populations."

—*Prof. G. Childe:*

What Happened in History–P–125.

பொருள்கள், மேற்கண்ட நாடுகளில் கிடைத்துள்ள பொருள்களோடு பெரிதும் ஒப்புமை உடையனவாக உள்ளன. இவற்றை நுட்பமாக ஆராய்ந்த தொல் பொருள் ஆராய்ச்சியாளர் சிந்துவெளி அந் நாடு களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.

சிந்துவெளியில் கிடைத்துள்ள முத்திரைகளைப் போன்று சில முத்திரைகள் ஊர், தெல் அல்மர், கிஷ் என்னும் மெசொப்பொட்டேமிய நகரங்களில் கிடைத் துள்ளன. சலவைக்கல் முத்திரை ஒன்று 'எலம்' என்னும் நாட்டில் கிடைத்து இருக்கிறது. இச் சின்னங் களின் காலம் கி. மு. 3000–க்கும் கி. மு. 2000–க்கும் இடைப்பட்டதென அறிஞர் கருதுகின்றனர். அந்தக் காலத்திலேயே சிந்துவெளி மக்களுக்கும் மேற்கு ஆசிய நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

சுமேரியாவில் தெல் அக்ரப் என்னும் இடத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட கோவில் ஒன்றில் 'நந்தி' வழிபாட்டினைக் குறிக்கும் உருவம் தீட்டப்பெற்ற பாத்திரம் ஒன்று கிடைத்திருக்கிறதாம். அப் பாத்திரத் தின் பழமை கி. மு. 2800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்று கணக்கிட்டுள்ளனர். இந் நந்தி வழிபாட்டு நெறி, சிந்துவெளியில் இருந்தே சுமேரியா விற்குச் சென்று இருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சி யாளர் கருத்தாகும்.

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட பச்சை அமேசான் கற்கள், தமிழகத்திலுள்ள நீலகிரிப் பகுதியிலிருந்து சென்றிருக்க வேண்டும் என்றும், செவ்வந்திக் கற்கள் தக்கண மேடுகளில் இருந்து சென்றிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். யானை மருப்பு தென்னாட்டில் இருந்தும், சங்குகளும் சிற்பிகளும் கடற்கரை வெளிகளில் இருந்தும், பாரசீகக் குடாவில் இருந்தும் சிந்துவெளிக்கு எடுத்துச் சென்றிருக்க வேண்டும் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது. இந்தியாவின் பல பகுதிகளோடும் சிந்துவெளி மக்கள் வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர் என்பது இவற்ருல் புலனுகிறது.

"சிந்துவெளி நகரங்களில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களில் 'தண்ணீர்ப்பந்தல்', சில்லரை வியாபாரிகளின் கடைகள் முதலியன காணப்படுவதால், இன்றைய இந்திய அங்காடிகளைப் (Bazaar) போன்றே, அக்காலத்தில் சிந்துவெளி நகரங்களில் அங்காடிகள் பல இருந்திருக்க வேண்டும்; இங்கு வாழ்ந்த தொழிலாளிகள் 'சந்தை'க்கென்றே பொருள்களைப் பெரும்பாலும் உற்பத்தி செய்தனர்; இவ்விடங்களில் உள்ள வீடுகளை அடுத்துப் பெரும் கிடங்குகள் காணப்படுகின்றமையால், அந்நகர மக்கள் மாபெரும் வாணிகர்களாக இருந்திருக்க வேண்டும்; சிந்துவெளி மக்கள் சமுதாயம் வளமான வாணிகர் சமுதாயமாகவே இருந்திருக்க வேண்டும்'

என்று கார்டன் சைல்டு என்னும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கருதுகின்றார்.[1]

வாணிக வளமிக்க சிந்துவெளி நகரங்களில் வாணிகத்திற்குப் பயன்படும் நிறைக்கற்கள், தராசுகள், அளவு கோல்கள் புழக்கத்தில் இருந்தன. பொருள்களுக்கு முத்திரை இடும் வழக்கமும் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

போக்கு வரத்து :

வாணிகத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்த சிந்துவெளி நகரங்களில் அகலமான நெடுஞ்சாலைகள் பல இருந்ததை முன்பு (நகர அமைப்பில்) கண்டோம். அச் சாலைகள் யாவும் ஓரிடத்தில் கிடைக்கக்கூடிய பொருள்

---

1 "The stalls of water-sellers and other retailers have been recognized among the cities ruins; giving quite the impression of a Madern Indian Bazaar and implying an interchange of goods by small-scale transactions such as takes place there........ ...It would seem to follow that the crafts men of the Indus cities were, to a large extend producing 'for the market'........... ....

Magazines attached to many spacious and commodious private houses mark their owners as merchants. Their number and size indicate a strong and prosperous merchant community".

–Prof. V. Gordon Childe :-

New Light on the Most Ancient East – P-127

களை எளிதில் பிறிதொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப் பெரிதும் பயன்பட்டன.

சிந்துவெளி மக்கள் பெரும்பாலும் மாட்டு வண்டிகளையே போக்கு வரத்திற்குரிய ஊர்திகளாகப் பயன்படுத்தினர். மொகஞ்சொ-தாரோவில் மாட்டு வண்டிகளின் பொம்மைகள் பல கிடைத்துள்ளன. அரப்பாவில் குழந்தைகள் விளையாடும் மண் வண்டிகளும், செம்பால் செய்யப்பட்ட வண்டிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை, சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய வண்டிகள் எப்படி இருந்திருக்கும் என்பதை உய்த்துணரத் தூண்டுகின்றன. வண்டிகளில் மாடுகளைக் கட்டி ஓட்டும் வழக்கம் இருந்தது. வண்டி ஓட்டும்பொழுது வண்டிக் காரர்கள் 'சவுக்கினை'ப் பயன்படுத்தினர். வண்டிகளில் பலவகை இருந்ததாகத் தெரிகிறது. மக்கள் ஏறிச் செல்லுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வண்டிகளுக்குக் கூண்டுகள் இருந்தன. சுமைகளையும், பாரங்களையும் ஏற்றிச் செல்லும் வண்டிகளில் கூண்டுகள் இல்லை. சான்ஹூ-தாரோவில் கிடைத்துள்ள வண்டிகளுக்கு நான்கு சக்கரங்கள் உள்ளன. அவை தேரினைப் போன்று காணப்படுகின்றன. இந்த வண்டிகள் யாவும் வட இந்தியாவில் சிந்து, பஞ்சாப் மாநிலங் களில் இக்காலத்தில் பயன்படுத்தப்படும் வண்டிகளைப் போன்று இருப்பதைக் கண்டு ஆராய்ச்சியாளர் வியப் படைந்தனர்.

ஆறுகளைக் கடப்பதற்கும், கடல் கடந்த நாடு களுக்குச் செல்லுவதற்கும் படகு, கப்பல் போன்ற மரக்கலங்களைப் பயன்படுத்தினர் என்பதை முத்திரை கள், மண்பாண்டங்கள் ஆகியவற்றில் காணப்படும்

ஓவியங்களால் அறிகிறோம். மரக்கலங்களில் சிறியனவும், பெரியனவும் இருந்தமையும் புலனாகின்றது. சிந்து நதியினையும், அதன் கிளையாறுகளையும் கடந்து செல்வதற்குச் சிறிய படகுகளையும், கடல் வழியாகப் பிற நாடுகளோடு வாணிகம் செய்வதற்குக் கப்பல் போன்ற பெரிய மரக்கலங்களையும் சிந்துவெளி மக்கள் பயன்படுத்தி இருக்கலாம்.

*

கலை

சிந்துவெளி மக்கள் தங்கள் வாழ்க்கையில் உயர்ந்த கலை நோக்குடையவர்களாக இருந்தனர் என்று கூற இயலாது. 'கலை கலைக்காக' என்னும் அரிய உண்மையைச் சிந்துவெளி மக்கள் உணர்ந்தவர்களும் அல்லர். அவர்களுடைய வீடுகள், சாமான்கள், கருவிகள், பிற பொருள்கள் யாவும் எளிமையும் பயனும் உடையன. ஆயினும் நுட்பமான அழகும் கலைப்பண்பும் குறைந்தனவாகவே காணப்படுகின்றன. நிறம் பூசப்பெற்ற மண் பாண்டங்களில்கூடச் சிறந்த கலையழகைக் காண முடியாது என்று சில அறிஞர் கருதுகின்றனர்.

படிமக்கலை:

சிந்துவெளி மக்களின் கலையுள்ளத்தை அறிவதற்குச் சிலைகள், முத்திரைகள், தாயத்துக்கள் முதலியன உதவியாக உள்ளன. சிலைகள் யாவும் நன்கு சூளையிடப்பட்டவை. அவற்றுள் சில சிவப்பு நிறம் பூசப்பெற்றுள்ளன. மனித உருவில் சிலைகள் பல கிடைத்

துள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை பெண்களின் உருவங்களாகக் காணப்படுகின்றன. அவ்வுருவங்கள் யாவும் அம்மணமாகவே உள்ளன. இடுப்பைச் சுற்றி மட்டும் ஒருவகைக் கச்சை கட்டப்பட்டுள்ளன. மண்பாண்டங்களில் விலங்குகளின் உருவங்கள் பெரும் அளவில் காணப்படுகின்றன. அணில்களும் குரங்குகளும் ஒருவகைச் சுண்ணும்புக் கல்லினுல் செய்யப்பட்டுள்ளன. முத்திரைகளில் குறுங்கொம்புடைய எருதுகள் உயிருள்ளவை போன்று தீட்டப்பெற்றுள்ளன. மாக்கல்லினுல் வெட்டிச் செதுக்கப்பட்டுள்ள வேட்டை நாய் உயிர்த் துடிப்புடன் இருப்பதோடு, இக்காலத்தில் மேலை நாட்டார் வைத்து இருக்கும் வேட்டை நாய்களைப் போன்று காணப்படுகின்றன. தாயத்துக்களில் செய்யப்பட்டுள்ள சிறு செதுக்கு வேலைப்பாடு கவர்ச்சியுடையதாகும். அவற்றுள் காணப்படும் அணில்கள் இரண்டு மூன்று அங்குலங்கூட உயரமில்லை. வாலினை நிமிர்த்திய வண்ணம் முன் கால்களில் எதையோ வைத்துக் கொண்டு, அதைக் கடித்து மென்று கொண்டிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். சிறு குரங்குகள் கவலை தோய்ந்த முகத்துடன் (இன்று காணப்படும் குரங்குகளைப் போன்று) சிந்தனையில் ஆழ்ந்து இருக்கும் நிலை காண்பவருடைய உள்ளத்தைக் கவரத்தக்கதாகும். இவை எல்லாவற்றையும் விடக் கண்டு வியத்தற்குரியது என்னவென்ருல், ஒரு சிறு செபமணியில் மூன்று குரங்குகள் வட்டமாக உட்கார்ந்து ஒன்றன் இடுப்பை இன்னென்று தன் கைகளால் தழுவிக்கொண்டுள்ளதைப் போன்று செதுக்கப்பட்டுள்ளமையாகும்.

வெண்கலத்தால் செய்யப்பட்ட சிலைகள் சில கிடைத்து உள்ளன. அவற்றுள் பழங்குடி மக்கள் இனத்தைச் சார்ந்த நடன மகளின் வெண்கலச் சிலை குறிப்பிடத் தக்கது. அப் பெண் தன் இடுப்பின் மேல் ஒரு கையை வைத்த வண்ணம் செருக்குடன் நிற்கிறாள். அவளுடைய கைகளும் கால்களும் அளவுக்கு மிஞ்சி நீண்டுள்ளன. தோள்வரையில் வளையல்கள் அணியப் பட்டுள்ளன. அந்த ஆடல் மகள், தன் கால்களைச் சிறிது முன்னும் பின்னுமாக வைத்து, இசைக்கு ஏற்ப, தனது அடிகளினால் தாளம் போடுகிறாள். வெண்கலத்தினால் வார்க்கப்பட்டுள்ள இச் சிலையின் தோற்றம், கற்களில் செதுக்கப்பட்டுள்ள சிலைகளையும், சிற்பங்களையும் விடக் காண்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் கவர்ச்சி உடையதாக இருக்கிறது. அந் நடன மகள் நிற்கும் தோற்றத்தில் எளிமையின் எழில் நிழலாடுகிறது; இயற்கையின் துடிப்பு காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது.

சுண்ணாம்புக் கல்லினால் செய்யப்பட்ட ஆண் மகனுடைய சிலை ஒன்று சிறந்த கலைப் பண்புடையதாகக் காட்சி அளிக்கிறது. அதனை 'யோகியின்' உருவம் என்று அறிஞர் கருதுகின்றனர். அச் சிலை சித்திரத் தையலைக் கொண்ட போர்வை ஒன்றைப் போர்த்துள்ளது; மீசையின்றித் தாடியுடன் காணப்படுகின்றது. வேறு சில சிலைகள் ஆடவரைப் போன்று எடுப்பான கன்னங்களும், பருத்த சிறிய உதடுகளும், அழகற்ற சிறு தட்டுகளைப் போன்ற காதுகளையும் உடையனவாக உள்ளன. அரப்பாவில் கிடைத்துள்ள கற்சிலைகள் சிந்துவெளி மக்களின், சிற்பக்கலை அறிவின் சிறந்த

தேர்ச்சியைக் காட்டுவனவாகும். இச் சிலைகள் மணற் கற்களாலும், பழுப்பு நிறக் கற்களாலும், செய்யப்பட்டுள்ளன. இக் கற்கள் மிகத் தொலைவான நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டன. இந்தச் சிலைகள் செய்யப்பட்டுள்ள முறையில் ஒரு தனிச் சிறப்புக் காணப்படுகின்றது. தலை, கை, கால், உடல் ஆகிய உறுப்புக்கள் தனித்தனியே செய்யப்பட்டுள்ளன. அவற்றை இணைப்பதற்கு ஏற்றவாறு அவ்வுறுப்புக்களில் துளைகள் இடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உறுப்பினையும் உரிய இடத்தில் பொருத்தி இணைத்து விட்டால், சிலையாகத் தோற்றமளிக்கிறது. இவ்வாறு கற்களில் இணைப்பு வேலையைச் செய்து, சிலைகள் செய்யும் வழக்கம் தொல் பழங்காலத்தில் வேறு எந்த நாடுகளிலும் இருந்ததாகத் தெரியவில்லை.

வேறு சில உருவச்சிலைகள் சிவபெருமானின் திருநடனக் கோலத்தைச் சித்திரிப்பது போன்று காணப்படுகின்றன. அவை நடனம் செய்வதற்கு ஏற்றவாறு ஒரு காலினை ஊன்றி, இன்னொரு காலினைத் தூக்கிய நிலையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இடக் காலினைத் தூக்கி வலக் கால் மீது நின்று நடனம் செய்வதைப் போன்று செய்யப்பட்டுள்ளன. பிற்காலச் சோழப் பேரரசர் காலத்தில் செய்யப்பட்ட நடராசரது வெண்கலச் சிலைகள், சிந்துவெளி நாகரிக கால முதல் படிப்படியாகக் கலைத்துறையில் வளர்ச்சியுற்றுச் சிறப்புற்றதை எடுத்தியம்புகின்றன. இதனால் நடராசரின் கலைத் தத்துவம் சிந்துவெளி மக்கள் உள்ளத்தில் அரும்பியதன் வளர்ச்சியே ஆகும் என்பது தெளிவாகிறது.

சிற்பக் கலை :

முத்திரைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களுள் குறுங்கொம்புடைய எருதுகள், எருமைகள், காட்டெருமைகள் முதலியன சிறந்தனவாகும். அவற்றைச் செதுக்கிய கலைஞன் அன்றாட வாழ்க்கையில் அவற்றை நன்கு கண்டறிந்து பழகியவன் என்பது புலனாகின்றது. குறுங்கொம்புடைய எருது உயிர்த்துடிப்பும் மெய்த் தோற்றமும் உடையதாக விளங்குகிறது.

நீல நிறச் சுண்ணாம்புக் கல்லினால் செய்யப்பட்ட தாயத்து ஒன்றில் தெய்வம் ஒன்று செதுக்கப்பட்டு இருக்கிறது. அது இருக்கை ஒன்றில் அமர்ந்து இருக்கிறது. அதன் முன்பு இரண்டு மெய்யன்பர்கள் மண்டியிட்டு வணங்குகின்றனர். தெய்வத்திற்குப் பின்னால் பாம்பு ஒன்று படம் விரித்த வண்ணம் நிற்கிறது. இவ் அழகிய சிற்பம் "வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இந்தியக்கலை சிறப்புற்றிருந்ததை எடுத்து இயம்புகிறது. மேலும், இந்தியக் கலைத் தத்துவம் எத்தகைய அடிப்படையில் தோன்றி வளர்ச்சியுற்றது என்பதைத் தெளிவாக அறிவுறுத்துகிறது. இக் கலைப் பண்பே பிற்கால இந்தியக் கலையின் ஊற்றாக—கருமுதலாக இருந்து வருவதை இன்றும் கண்டு மகிழலாம்".

சிறந்த செதுக்கு வேலைப்பாடுகள் பொருந்திய முத்திரைகள் யாவும் செதுக்கு வேலைக் கலையின் தலைசிறந்த படைப்புக்களாகும். அவற்றுள் வரையப்பட்டுள்ளன யாவும் உயிர் ஓவியங்களாகும்; தேர்ச்சி பெற்ற கலைஞர்களின் கைத்திறனால் அவை நேர்த்தியும் உயிர்த்துடிப்பும் உள்ளனவாக விளங்குகின்றன.

இந்திய மக்கள், அலக்சாண்டர் காலத்தை அடுத்துக் கிரேக்கர்களோடு கொண்ட தொடர்பினால் தான், சிலைகள் செய்யக் கற்றனர் என்று மேனாட்டார் கருதி வந்தனர். உலகில் கிரேக்கர்கள்தாம் உலோகங்களைக் கொண்டும், கற்களைக் கொண்டும் சிலைகள் செய்வதில் வல்லவர்கள் என்ற கருத்து இருந்து வந்தது. சிந்துவெளியில் கிடைத்துள்ள சிலைகளும் சிற்பங்களும், கிரேக்கர்கள் சிலைகள் செய்வதைப் பற்றிக் கனவு காணாத தொல் பழங்காலத்தில் செய்யப்பட்டனவாகும். இதனை நன்குணர்ந்த டாக்டர் சர் ஜான் மார்ஷல் என்னும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் "இந்தியச் சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது; சிந்துவெளிச் சிற்பக் கலையில் அயல் நாட்டுச் சிற்பக்கலையின் சிறு சாயலைக் கூடக் காண்பதரிது; இந்திய மக்களின் உள்ளத்தில் கருக்கொண்டு எழுந்த கற்பனையின் முழு நிறைவை இந்தியக் கலையின் அகத்திலும், புறத்திலும் காணலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஓவியக் கலை :

ஓவியங்கள் வரைவதிலே சிந்துவெளி மக்களுக்குப் பெரும் ஆர்வம் இருந்ததை, சிந்துவெளியில் கிடைத்துள்ள பல பழம்பொருள் சின்னங்களால் அறிகிறோம். அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய மண் பாண்டங்கள் பெரும்பாலும் நிறங்கள் பூசப்பெற்று இருந்ததோடு, அவற்றிடையே பல ஓவியங்களும் வரையப்பட்டு இருந்தன. ஓவியங்களைத் தீட்டுவதற்கு முன்பு அதற்கேற்ற நல்லதொரு பின்னணியைத் தீட்டி, அதன்பிறகு பறவைகள், மயில்கள், மான்கள், ஆடுகள், எருமைகள், மீன்கள், பாம்புகள், இலைக் கொத்துகள்,

மலர்கள் முதலிய அழகிய ஓவியங்களைத் தீட்டி யுள்ளனர். இவை அல்லாமல் கீற்று ஓவியங்களாகப் பலவகையான மரங்கள், வட்டங்கள், முக்கோணங்கள், சதுரமான கட்டங்கள் முதலியவற்றையும் செம்மையாக வரைந்துள்ளனர். இவை யாவும் 'புனையா ஓவியங்களாக'க் காட்சி அளிக்கின்றன. சிந்துவெளி மண்பாண்டங்களில் காணப்படும் ஓவியங்கள் அக்கால மக்களின் மனநிலையையும் நாகரிகச் சிறப்பையும் தெளிவாக உணர்த்துகின்றன. இவ் ஓவியங்களால் பண்டைக்கால மக்கள் ஓவியக் கலையில் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் ஆர்வத்தினை யும அறிகின்றோம். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் போற்றிய ஓவியக் கலையின் தரத்தினையும சிறப்பினையும் ஒருவாறு நாம் அறிய முடிகிறது.

கணக்கியல் :

சிந்துவெளி மக்கள் வாணிகத்தில் சிறப்புற்று இருந்தமையால், நிறுத்தல் அளவைக்குரிய நிறைக் கற்கள் பலவற்றைப் பயன்படுத்தினர். தானியங் களைப் பெரும் அளவில் சேகரித்து வைத்து இருந்தனர் என்பதைக் கண்டோம். அத்தானியங்களை அளப்ப தற்கு முகத்தல் அளவைக் கருவிகளைப் பயன்படுத்தி இருக்கலாம். இவை அவர்களுடைய கணக்கியல் அறிவைப் புலப்படுத்துகின்றன. மண்பாண்டங்களில், சிந்துவெளி மக்கள் பல வகையான முக்கோணங் களையும், சதுரங்களையும், தீட்டியதோடு, ஒரு பெரும் வட்டத்திற்குள் பல சிறிய வட்டங்களையும் வரைந் துள்ளனர். இவ்வாறு அவர்கள் கோணங்களையும்,

சதுரங்களையும், வட்டங்களையும் வரைவதற்கு யாதா கிலும் காரணம் இருந்திருக்குமோ என்று ஆராய்ந்த சில அறிஞர்கள், அவை சிந்துவெளி மக்களுடைய அறிவு, கணக்கியல் துறையில் அடைந்துள்ள முதிர்ச்சி யினைச் சுட்டிக் காட்டுவதாகக் கருதுகின்றனர்.

மருத்துவக் கலை :

சிந்துவெளி மக்களின் மருத்துவக் கலையைப்பற்றி ஓரளவிற்குத்தான் அறிய முடிகிறது. இன்றைய சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் பயன்படுத்தும் 'சிலாசித்து' என்னும் மருந்து மொகஞ்சொ—தாரோவில் கிடைத்து இருக்கிறது. இது வயிற்று உளைச்சல், வயிற்றுப் போக்கு முதலிய நோய்களைப் போக்கப் பயன்படுத்தப்பட்டது போலும். ஒரு வகை மீனின் (Cuttle fish) எலும்பினைக் கண், காது, தொண்டை, தோல் முதலியவற்றில் உண்டாகும் நோயினைக் குணப் படுத்தும் மருந்தாகப் பயன்படுத்தினர். மான் கொம்பினைப் பொடியாக்கி அதனை மருந்தாக உட் கொண்டனர் எனத் தெரிகிறது. பவழமும், வேப்பிலையும் சிறந்த மருந்தாகப் பயன்பட்டனவாம். நன்றாகப் பசி எடுப்பதற்கும், உண்ட உணவு செரிப்ப தற்கும் சிந்துவெளி மக்கள் ஒரு வேரினைப் பொடி செய்து உண்டனராம். 'இவை யாவும் இந்திய மருத்துவக் கலையின் கருமுதல்களாக இருந்தன' என்று அறிஞர் தீட்சித் கூறுகிறார்.[1]

---

1 Quoted in Indus Civilization, - P - 31

– Sir Mortimer Wheeler.

பிற கலைகள்:

இவை போன்ற இன்னும் பல கலைகளைச் சிந்து வெளி மக்கள் நன்கு அறிந்து போற்றி வாழ்ந்தனர் என்பது சிந்துவெளியின் சின்னங்களால் தெரிகிறது. நாட்டியக் கலையில் நாட்டம் கொண்டு இருந்தனர் என்பது நடன மகள், நடராசர் சிலைகளினால் அறிகின்றோம். குழந்தைகள் விளையாட்டிற்குரிய ஊது குழல்கள் கிடைத்துள்ளமையால், அதைப் போன்று பெரியவர்கள் ஊதுவதற்குப் பயன்படுத்திய இசைக் கருவிகள் இருந்திருக்க வேண்டும் என்பதை உய்த் துணரலாம். ஒரு முத்திரையில் 'மத்தளத்தின்' வடிவம் காணப்படுவதாகச் சில ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வாறாயின் சிந்துவெளி மக்கள் தோல் கருவிகளையும், துளைக் கருவிகளையும் இசைக் கருவிகளாகப் பயன்படுத்தக் கற்றிருந்தனர் என்று கூறலாம். இன்று நாம் பேசும் மொழி, ஆதி காலத்தில் பழங்குடி மக்கள் இன்ப எக்களிப்பில் பாடிய பாட்டுக்களிலிருந்து தோன்றியதென மொழி நூல் வல்லார் சாற்றுகின்றனர் எனவே, இந்தியாவின் முதற் பெரும் நாகரிகத்தைத் தோற்றுவித்த சிந்துவெளி மக்கள் இசையிலும் பாட்டிலும் ஈடுபட் டிருந்ததில் வியப்பில்லை.

இந்தியக் கலையின் எல்லாத் துறைகளிலும் சிந்து வெளி மக்கள் வளர்த்துப் போற்றிய கலையின் வேரினைக் காணலாம். சிந்துவெளி நாகரிக காலத்தில்

கன்னிப்பருவ நிலையில் இருந்த இந்தியக் கலை மடந்தை, இருக்கு வேத காலத்தில் மனைவியாக மாறி, அசோகன் கால முதல் தாயாகத் திகழ்கிறாள்! சிந்து வெளியில் அரும்பிய கலைப்பண்பே, வேத காலத்தில் போதாகி, அசோகன் காலத்தில் மலர்ச்சியுற்று இன்று வரை வாடா மலராக நாட்டின் பல பகுதிகளிலும் நறு மணத்தைப் பரப்பி வருவதாகச் சரித்திரம் பேசுகிறது! இதனால், இந்தியக் கலையின் உயிர் நாடியாக—கரு முதலாக—அடிப்படையாக இருந்து வருவது சிந்து வெளியின் கலைப்பண்பேயாகும் என்பது புலனாகின்றது. அக் கலைப்பண்பின் இழை அறாது இன்றுவரை 'ஊடும் பாவும்' போன்று இந்திய மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்தும், இணைந்தும் நின்று நிலவுவது போற்றுதற்குரியதாகும்.

இடுதலும் சுடுதலும் :

சிந்துவெளி மக்கள் இறந்தோரை எரித்தனர் என்று டாக்டர் மக்கே கருதுகிறார். சிந்துவெளி நாகரிக காலத்தில் முறைப்படி அமைந்த சுடுகாடு ஒன்றுதான் கிடைத்து இருக்கிறது. அரப்பா நகரின் கோட்டைச் சுவர்களுக்குத் தென்புறத்தில் உள்ள மேட்டில் (முதிர்ச்சியுற்ற அரப்பா நாகரிக காலத்திய) கல்லறைகள் ஐம்பத்தேழு தோண்டியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றால் ஒன்றும் தெளிவாக அறிய முடியவில்லை. "இன்றுவரை கிடைத்துள்ள இரண் டொரு சான்றுகளைக் கொண்டு எதையும் அறுதியிட்டுக் கூறல் இயலாது. இறந்தோரைப் பெரும்பான்மை

புதைக்கும் பழக்கமும், சிறுபான்மை எரிக்கும் பழக்கமும் இருந்ததெனக் கொள்ளுவதே பொருத்தம் உடையதாகும்" என்பது மார்ட்டிமர் வீலர் தரும் விளக்கமாகும். புதைக்கும் பழக்கத்திலிருந்தும், புதைக்கும் பொழுது இறந்தோருடைய உடல்களோடு வைக்கப் பட்ட பொருள்களிலிருந்தும், சிந்துவெளி மக்கள் மறு பிறவியில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றது.

* *

4. சிந்துவெளி மக்களின் கடவுள் நெறி

கோயில்கள் :

சிந்துவெளியில் வாழ்ந்த மக்களின் கடவுள் நெறியை முறையாக எழுதுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப் பட்ட கட்டடங்களுள் 'கோயில்' என்று குறிப்பிடத்தக்க கட்டடம் இன்று வரை ஒன்றும் கிடைக்கவில்லை. பெருந் தூண்களைக் கொண்ட மாபெரும் மண்டபம் ஒன்றைக் கண்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சிலர், அதனைச் சமய வழிபாட்டிற்கு மக்கள் ஒன்றுகக் கூடும் மண்டப மாக இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். அம் மண்டபத்தினுள் பல இடங்களில் அகழ்ந்தெடுத்த போது சமயச் சார்புடைய பொருள்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. இக் காரணத்தால் அம் மண்டபம் சமய வழிபாட்டிற்குரியதெனக் கூற இயலவில்லை. எனினும், அங்குப் "பல கோவில்கள் அழியும் பொருள் களைக் கொண்டு கட்டப்பெற்றமையால் அவை அழிந்து விட்டிருக்கலாம். அவை இன்று காணப்பெருத காரணத் தினல், கோயில்கள் சிந்துவெளியில் இருந்தில என்று கூறுதல் தவருகும்" என்று டாக்டர் மக்கே கருதுகின்றுர்.

சிந்துவெளியின் எப்பகுதியிலும் கோயில்களோ, பலி மேடைகளோ, சமயச் சின்னங்களோ கிடைக்க

வில்லை. ஆயினும், தொல்பழங்கால நாகரிக மக்கள் வாழ்க்கையில் சமயம், சிறந்த பங்கினைப் பெற்று இருந்ததைக் காண்கிறோம். இதற்கு விதி விலக்காகச் சிந்துவெளி மக்கள் இருந்திருக்க மாட்டார்கள். அவர்கள் வாழ்க்கை நெறியை அமைத்துத் தந்த கடவுள் நெறி ஒன்றைக் கடைப்பிடித்து ஒழுகினர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிந்துவெளியில் வாழ்ந்த மக்களின் கடவுள் நெறியை முறையாக எழுதுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை என்பது உண்மையேயாயினும் இன்றுவரை கிடைத்துள்ள பல்வகைப் படிமங்கள், முத்திரைகளில் காணப்படும் சித்திரங்கள், மண் பாண்டங்களில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் முதலிய வற்றைக்கொண்டு ஒருவாறு சிந்துவெளி மக்களின் கடவுள் நெறியை உய்த்துணரலாம்.

அன்னை வழிபாடு :

பெண் வடிவங்கள் மொகஞ்சொ-தாரோ, அரப்பா ஆகிய இடங்களில் மிகப் பலவாகக் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் சிறப்பு மிக்க 'சக்தி' அல்லது இயற்கை அன்னையின் (நிலமகளின்) உருவங்களாக இருக்க வேண்டும் என்று தொல்பொருள் ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். அச் சிலைகளைக் கூர்ந்து கவனித்த அறிஞர்கள் அவற்றை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். குழந்தையை அணைத்த வண்ணம் முகத்தில் அன்பு ஒளி வீசும் சிலைகள் அன்னையின் அன்பு நிலையையும், அமைதியும் அருளும் பொங்கி வழியும் அருள் நோக்குடைய சிலைகள் அன்னையின் அருள் நிலையையும், காண்போர் அஞ்சத் தக்க சினங்

கொண்ட முகத் தோற்றமுடைய சிலைகள் அன்னையின் சீற்றத்தையும் புலப்படுத்துகின்றன. அவை முறையே அன்னையின் (ஆக்கல், அளித்தல், அழித்தல்) தொழில்களைக் குறிப்பிடுகின்றன. தொல்பழங் காலத்திலேயே இந்தியாவில், அன்னை வழிபாடு இருந்ததைச் சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட அன்னையின் சிலைகள் அறிவுறுத்துகின்றன. பிற்காலத்திய இந்து சமயத்தில், திராவிடப் பண்பாக விளங்கும் 'சக்தி' வழிபாட்டின் மூலக் கருமுதலாகச் சிந்துவெளி அன்னை வழிபாடு விளங்குகின்றது என்பர் மோனியர் வில்லியம்.[1] இச் சக்தி வழிபாடு இன்றும் தமிழகத்தின் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் சிறுதெய்வ (அன்னை, அம்பாள், மாரி அம்மை, மாதா, காளி, துர்க்கை, கிராம தேவதை) வழிபாடாக விளங்குவது குறிப்பிடத் தக்கது.

சிந்துவெளியில் கிடைத்துள்ள முத்திரை ஒன்றில் நிலமகளைத் தாயாக உருவகப்படுத்தி அவள் உலக மக்களுக்குத் தேவைப்படும் இயற்கைப் பொருள்களை ஈன்றெடுப்பதைக் காட்டும் சித்திரம் ஒன்று செதுக்கப் பட்டிருக்கிறது. பெண் ஒருத்தி தலைகீழாக நிற்கிறாள்; அவள் கருவிலிருந்து செடி ஒன்று வெளிப்படுவதைப் போன்ற சித்திரம் காணப்படுகிறது. இதனால் சிந்து வெளி மக்கள் தங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை, நிலமகள் தந்துதவுகிறாள் என்பதனை அறிந்து, நிலமகளைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டனர் எனத் தெரிகிறது. இத்தகைய நிலமகளின் வழிபாடு இன்றும் பழங்குடி மக்களிடத்தில் இருந்து வருகிறது.

---

1 The Original Inhabitants of India.

P. 5. 74 – Monier William.

சிவ வழிபாடு :

ஒரு முத்திரையில் மூன்று முகங்களைக் கொண்ட ஆண் மகன் யோகத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் ஓர் உருவம் காணப்படுகிறது. இதனை அடுத்து வலப் புறத்தில் யானையும், புலியும், இடப்புறத்தில் எருதும் கல் யானையும் நிற்கின்றன. அந்த யோகியின் திருவடி களுக்கு அருகில் இரண்டு மான்கள் உள்ளன. யோகியின் தலையில் இணைந்த இரு எருமைக் கொம்பு கள் காணப்படுகின்றன. நடுவில் இலைகளும் மலர் களுமுள்ள மலர்க்கொத்து ஒன்று செங்குத்தாக வைக்கப்பட்டு இருக்கின்றது. இவ்வாறு விளங்கும் இந்த யோகியின் உருவம், சிவனைக் குறிப்பதாக சர் ஜான் மார்ஷல் முதலிய ஆராய்ச்சியாளர் கருது கின்றனர்.[1] யோகியைச் சுற்றிலும் விலங்குகள் காணப்படுவதால் சிவனது சிறப்புப் பெயரான 'பசுபதி' என்பதனை அது விளக்குவதாகவும், தலையில் உள்ள கொம்புகள் வரலாற்றுக் காலத்திய சிவ வழி பாட்டின் அறிகுறியான மூவிலைச் சூலத்தைக் குறிப்ப தாகவும் இருக்க வேண்டும் என நம்புகின்றனர். மொகஞ்சொ-தாரோவில் கிடைத்துள்ள சுண்ணம்புக் கல் முத்திரை ஒன்றில் யோகியின் உருவிற்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு நாகர் மண்டியிட்டு வணங்குவது போன்றும் காணப்படுகிறது.

அரப்பாவில் கிடைத்த ஆண் சிலை ஒன்று, இடக் காலைத் தூக்கி வலக் கால் மீது நின்று நடனம் ஆடுவது போல் அமைக்கப்பட்டிருக்கிறது. சிவ பெருமானது நடனக் கோலமான நடராச வடிவின்

1 CHI. IC—P—79.

முதல் உருவமாக இதனைக் கருதுகின்றனர். இந் நடராச உருவின் கலைப் பண்பினைப் பிற்கால மக்கள் போற்றியதோடு நின்றுவிடாமல், உலகின் இயக்கத்தை, கலையின் முழு நிறைவை நடராசத் தத்துவத்தின் மூலம் உலகிற்கு எடுத்துரைத்தனர்.

சிந்துவெளி மக்களால் வழிபாட்டிற்குப் பெரும் அளவில் பயன்படுத்தப்பெற்றவை லிங்கங்களே எனில் மிகையாகாது. அரப்பாவில் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் லிங்கங்கள் கிடைத்துள்ளன. அவை உருவில் பெரியனவாகவும் சிறியனவாகவும் உள்ளன. இவற்றை வழிபாட்டிற்கு மட்டும் பயன்படுத்தவில்லை; சிறிய லிங்கங்களை மக்கள் தங்கள் கையிலும் கழுத்திலும் தாயித்துப் போலக் கட்டிக்கொள்ளவும் பயன் படுத்தினராதல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இதனால், சிவசக்தி வழிபாட்டுடன் லிங்க வழிபாடும் சிந்துவெளியில் சிறப்புற்றிருந்ததை அறிகிறோம்.

மேலும், இங்கு நான்கு கைகளையுடைய மனித உருவ ஓவியங்கள் சில சிதைந்து காணப்படுகின்றன. இவை, பிற்கால இந்து சமயத்தின் முப்பெரும் கடவுள்களான சிவன், திருமால், பிரமன் ஆகியோரைக் குறிக்கப் பயன்பட்டனவாக இருந்திருக்கலாம் என்று ஆர். பி. சந்தா [1] குறிப்பிட்டுள்ளார்.

சமணத் துறவிகள் :

சிந்துவெளியில் கிடைத்த சில முத்திரைகளை நன்கு ஆராய்ந்து பார்த்த அறிஞர் சந்தா அவர்கள்

1 Hindu Civilization—P—24—Dr. R. K. Mukerji.

"இம் முத்திரைகளில் தீட்டப்பட்டுள்ள யோகிகள் சமண சமயத் துறவிகள் நின்ற நிலையில் யோகம் செய்வதைப் போன்று காணப்படுகிறது. இவை வட மதுரைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ள கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சமணத் துறவி களின் சிலைகளை ஒத்துக் காணப்படுகின்றன. சமணர் தாம் நின்று கொண்டு யோகம் புரிதலைச் சிறந்த பழக்கமாகக் கொண்டிருந்தனர். எருது சமண சமயத்துக்குரிய அடையாளச் சின்னமாகும். சில முத்திரைகளில் யோகியின் முன்பாக எருது இருத்தல் குறிப்பிடத் தக்கது. எனவே அவ்வுருவம் 'ரிஷப தேவரை'க் குறிப்பதாகக் கொள்ளலாம். அவ்வாறாயின், சமண சமயமும் சைவ சமயத்தைப் போலவே மிகத் தொன்மை வாய்ந்த சமயமாகலாம்" என்று கருதுகின்றார். 2

மர வழிபாடு :

பண்டைக் காலத்திய மக்கள் இயற்கைப் பொருள் களை எல்லாம் தெய்வங்களாக வழிபட்டனர். ஆறு, மலை, மரம் முதலிய ஒவ்வொன்றிற்கும் தெய்வங்கள் தங்கி இருந்ததாக நம்பினர். அத் தெய்வங்களை உரிய காலத்தில் வழிபடவில்லையானால், தங்கள் மீது அவை சீற்றம் கொள்ளுமென அஞ்சினர். சிந்துவெளி மக்களும் மர வழிபாட்டை மேற்கொண்டிருந்தனர். அங்கு இருவகையான மர வழிபாடு இருந்தன என்பத தற்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. அரப்பாவில் கிடைத்துள்ள முத்திரைகளினால், மரங்களை இயற்கை

---

2 Ibid—P—25.

நிலையிலேயே வழிபட்ட முறை தெரிகின்றது. மொகஞ்செசா-தாரோவில் கிடைத்த முத்திரை ஒன்றில் இரண்டு கிளைகளுக்கிடையில் ஆடையின்றிப் பெண் உருவம் ஒன்று அவிழ்ந்த கூந்தலுடன் நிற்கின்றது. அம்மரத்தின் முன்பு சிறிய பாவாடை கட்டிய பெண்ணுருவங்கள் ஏழு வரிசையாக நிற்கின்றன. மண்டியிட்டு வணங்கும் பெண்ணுருவிற்குப் பின்புறம் மனிதத் தலையுடன், உடலின் மேற்பகுதி ஆடாகவும், கீழ்ப்பகுதி எருதாகவும் உள்ள விலங்கு உருவம் ஒன்று காணப்படுகின்றது. இதனை 'மினோட்டர்' (Minotaur) என்பர் மார்ட்டிமர் வீலர். மரக்கிளைகளில் காணப் படும் பெண் மரத்தில் வாழும் தெய்வமாகவும், அந்த விலங்கு அவளுடைய ஊர்தியாகவும் இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும்.

விலங்கு வழிபாடு:

சிந்துவெளி மக்கள் விலங்கு வழிபாட்டினையும் மேற்கொண்டிருந்தனர். மொகஞ்செசா-தாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகள், மண்பாண்டங்கள் முதலியவற்றில் வரையப் பெற்றுள்ள சித்திரங்கள் இதற்குச் சான்றாக உள்ளன. இரண்டு வகையான விலங்குகளைச் சித்திரங்களில் காணலாம். உலகில் உள்ள விலங்குகள் பல முதலிடம் பெறுகின்றன. இரண்டாவது வகையில், உலகில் இல்லாத விலங்குகள் சிறப்பிடம் பெறுகின்றன. கற்பனை விலங்குகள், கலப்பு விலங்குகள் இரண்டாவது வகையைச் சேர்ந்தனவாகும். பொதுவாகச் சில விலங்குகள் வழி பாட்டிற்குரியனவாகக் கருதப்பட்டதாகத் தெரிகிறது. அவை நீண்ட கொம்புகளும், பருத்த திமிலுமுடைய

எருது, எருமை, யானை, புலி, கரடி, மான், கல் யானை, முயல், வெள்ளாடு முதலியனவாகலாம். சில விலங்கு களுக்கு உணவு படைப்பது (ஊட்டுவது) போன்ற காட்சிகளும் முத்திரைகளில் காணப்படுகின்றன. அரப்பாவில் கிடைத்துள்ள முத்திரை ஒன்றில் ஒரு விலங்கு அமர்ந்து இருக்கின்றது; அதன் முன்பு கூப்பிய கைகளுடன் ஓர் ஆடவன் நின்று வழிபடு கின்றான். இதனால், விலங்கு வணக்கம் இருந்ததெனத் தெரிகின்றது. மேலும் சிந்து வெளியில் நாக வழிபாடு, ஆற்று வழிபாடு முதலியன இருந்ததாகவும் ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர்.

சுவஸ்திகா:

சில முத்திரைகளில் சக்கரங்களும், சுவஸ்திகா போன்ற ஓவியங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் ஞாயிற்றின் அடையாளங்களாகும். இதனால், சிந்துவெளி மக்கள் ஞாயிற்றை வழிபட்டனர் என்பது அறியப்படுகின்றது. இவை இரண்டும் பாபிலோனியா, ஏலம் முதலிய நாடுகளில் கிடைத்துள்ள சமயச் சின்னங்களைப் போன்றுள்ளன.

சமயப் பழக்க வழக்கங்கள் :

சிந்துவெளி மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் பல பழக்க வழக்கங்கள் சிறந்து விளங்கின. அவற்றுள் சமயத் தொடர்புடைய பழக்க வழக்கங்கள் இங்குக் குறிப்பிடத் தக்கன. தாயித்து அணிதல், பெரிதும் வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. மண்ணால் செய்யப்பட்ட தாயித்துக்கள் ஏராளமாகக் கிடைத்

துள்ளன. அவற்றுள் பல வகையான விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கயிற்றில் கோத்துக் கைகளிலும், கழுத்திலும் கட்டிக் கொண்டனராம். இத்தகைய தாயித்துக்கள் சுமேரியாவிலும் கிடைத்திருப்பதாகக் கூறுகின்றனர்.

இறை வழிபாட்டின் பொழுது, தெய்வங்களுக்கு உணவுப்பொருள்களைப் படைக்கும் பழக்கம் அக்கால மக்களிடையே இருந்தது என்பது, முத்திரைகளில் காணப் படும் சில 'படைக்கும் காட்சிகளால்' தெரிய வருகிறது. விழாக் காலங்களில், தெய்வங்களை மக்கள் ஆடல் பாடலுடன் வணங்கினர். மேலும் விழாக் காலங்களில் தெய்வங்களை ஊர்வலம் செய்விக்கும் பழக்கமும் சிந்து வெளி மக்களிடை இருந்ததற்குரிய சான்றுகள் கிடைத் துள்ளன. இன்றைய இந்து சமயத்தில் காணப்பெறும் பெரும்பாலான பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் சிந்துவெளி மக்களுடைய கடவுள் நெறியைப் பின் பற்றி வளர்ச்சியுற்றன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

பழம்பெரும் சமயம் :

சிந்துவெளியில் பல வகையான வழிபாட்டு நெறிகள் இருந்த போதிலும், அவற்றுள் சிறப்புற்று விளங்குவது சிவ வழிபாடேயாகும். "மொகஞ்சொ-தாரோ, அரப்பா ஆகிய இடங்களில் புதைந்து கிடக்கும் புதைபொருள்களால் நமக்குத் தெரியவரும் செய்தி

கள் பலவற்றுள், முதன்மையானதும் முக்கியமானதும் இணையற்றதுமாக விளங்குவது சைவ சமயத்தின் வரலாறு எனில் மிகையாகாது. செம்பு, கற்காலத்திற்கும் முற்பட்ட — தொல்பழங்காலத்தில் சைவ சமயத்தின் வரலாறு தொடங்குவதும், உலகப் பழம்பெரும் சமயங்களுள் மிகப் பழைய சமயமாகச் சைவ சமயம் வீறுடன் நின்று நிலவுவதும் குறிப்பிடத்தக்கனவாகும்"[1] என்ற மூதறிஞர் சர் ஜான் மார்ஷலின் கருத்து நம்மை வியப்பில் ஆழ்த்துவனவாகும்.

* *

1 "Among the many revelations that Mohenjo-Daro and Harappa had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the Chalcolithic Age or perhaps even further still, and that it takes place as the most ancient living faith in the world."

—Mohenjo-Daro and the Indus Civilization, Preface, Vol. I—P—VII

—*Sir John Marshall.*

5. சிந்துவெளி எழுத்துக்கள்

சிந்துவெளி எழுத்துக்கள் இந்திய வரலாற்றின் பெரும் புதிராக—மறை பொருளாக இருந்து வருகின்றன. இங்குக் கிடைத்துள்ள முத்திரைகளில் பொறிக்கப்பெற்றுள்ள ஓவியக் குறிகளே (Pictograph) சிந்துவெளி நாகரிகத்தினைப் பேணி வளர்த்த மக்கள் பேசிய மொழிக்குரிய எழுத்துக்களாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். பல நூற்றாண்டுகள் சிந்துவெளி நாகரிகம் நின்று நிலவிய போதிலும், எழுத்துக்களில் எத்தகைய வளர்ச்சியுமுற்றதாகத் தெரியவில்லை. சிந்துவெளி எழுத்துக்கள் ஓவிய எழுத்துக்களாகக் காணப்படினும், அவற்றுள் சில வேறுபாடுகள் உள்ளன. பறவை, மீன், விலங்கு, மனிதரின் பலவகை உருவங்கள் போன்ற ஓவிய எழுத்துக்கள் மிகச் சிலவாகவே உள்ளன. மற்ற எழுத்துக் குறிகள் எல்லாம் பெரும்பாலும் தொன்று தொட்டு உலக வழக்கில் இருந்து வரும் எழுத்து வடிவத்தை ஒத்தே இருக்கின்றன. எனினும், எழுத்துக்கள் அனைத்தும் ஓவிய அமைப்பில் தெளிவான நேர் கோடுகளால் எழுதப்பட்டுள்ளன. இவ் வெழுத் துக்களை ஆராய்ந்த அறிஞர் பலர், பல வகையான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்கள் சிந்துவெளி எழுத்துக்களைப் பற்றிய கீழ்க்கண்ட கருத்துக்களில் உடன்பாடு கண்டுள்ளனர்.

சிந்துவெளி எழுத்துக்களால் அறியப்படுவன : [1]

1) சிந்துவெளி எழுத்துக்கள் இந் நாகரிகத்தின் கால முழுவதும் மாற்றமின்றி ஒரே தன்மையாக இருந்துள்ளன.

2) இவ்வெழுத்து நிலைக்கு முன்பு நெடுங்காலம் சிந்துவெளி எழுத்துக்கள் படிப்படியாக வளர்ச்சி யுற்றிருக்க வேண்டும்; அந்த வளர்ச்சியின் பயனைத் தான் தேவையான குறிகளை, நிலையான எழுத்துக் களாக அங்கு வாழ்ந்த மக்கள் வரையறுத்துக் கொண்டனர் என்பது அவ்வெழுத்துக்களால் தெரிகிறது.

3) சிந்துவெளி எழுத்துக்கள் அசைக்குறி களாலான அடையாள எழுத்து (Hieroglyphic) நிலையில் உள்ளன.

4) சிந்துவெளி எழுத்துக்கள் வலப்புறத்தில் தொடங்குகின்றன. ஆனல், அடுத்த வரியில் இடப் பக்கத்தில் இருந்து தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன.

5) சிந்துவெளியில் 396 வகையான எழுத்துக்கள் கிடைத்துள்ளன. அவை எண்ணங்களையும் உணர்வு களையும் விளக்க எழுதப்பெற்ற ஓவிய எழுத்துக்களாக இருக்கலாம்; அல்லது ஆப்புவடிவ (Cuneiform) எழுத்து முறையில் அமைந்தனவாகவும் இருக்கலாம்.

6) பெருவாரியான எழுத்துக்களோடு அசைக் குறிகள் சேர்க்கப்பட்டுள்ளன; அஃதொன்றே சிந்து

1 CHI. IC—P—72.

வெளி எழுத்துக்கள் ஒலியியல் அமைப்பில் முதிர்ச்சி யுற்றிருந்ததை வலியுறுத்துகின்றது.

7) சுமேரிய, எகிப்திய, போனீசிய, சிந்துவெளி எழுத்துக்கள் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பு இருந்த, கருமூலமாகிய ஒரு பொது எழுத்து முறையில் இருந்து பிரிந்தனவாதல் வேண்டும்.

பிராமி எழுத்துக்களுக்கு அடிப்படை :

பேராசிரியர் லாங்டன் என்பார் அசோகன் காலத்திய பிராமி எழுத்துக்கள், சிந்துவெளி எழுத்துக்களில் இருந்தே தோன்றியிருக்க வேண்டும் என்பதனைப் பல சான்றுகள் தந்து நிறுவியுள்ளார். இவ்விருவகை எழுத்திற்கும் இடைப்பட்ட வளர்ச்சியுடைய எழுத்துக்கள் மத்தியப் பிரதேசத்தில் 'விக்கிரமகோல்' என்னுமிடத்தில் கிடைத்துள்ளன. ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபொழுது அவர்கள் பேசக் கற்று இருந்தார்களே ஒழிய, எழுதக் கற்று இருந்தார்கள் என்பதற்கு யாதொரு சான்றும் இல்லை. இந்தியாவிற்கு வந்து பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னர்த்தான் செயற்கை மொழியான 'சமஸ்கிருதத்தைச்' செப்பம் செய்து கொண்டனர்.[1] அவர்கள் எழுத்துக்களை இந்தியப் பழங்குடி மக்களாகிய திராவிடர்களிடமிருந்து கற்றனர் என்று ரையசு டேவிட்சு கருதுகின்றார்.[2] ஆரியர் வருகையால் சிந்துவெளி நாகரிகம் அழிக்கப்பட்டதே ஒழிய, அந்நாகரிகத்தின் உயிர் நாடியாக விளங்கிய

---

1 H. G. Wells : A Short History of the World, ch. 19.
2 Buddhist India....P...116. Rhys Davids.

மக்கள் எல்லாரும் அழிந்தனர் என்று கூற முடியாது. அம் மக்களிடமிருந்து அரண்கள் சூழ்ந்த நகரங்களை அமைக்கவும், மெய்யறிவுக் கோட்பாடுகளையும், பிற கலைகளையும் கற்றுத் தமதாக்கிக் கொண்ட ஆரியர்கள் சிந்துவெளி எழுத்துக் குறிகளைப் பின்பற்றி 'எழுதாக் கிளவி' ஆகிய தங்கள் மொழிக்கு, எழுத்துக்கள் அமைத்துக் கொண்டிருக்க வேண்டும். அசோகன் காலத்திய பிராமி எழுத்துக்கள் ஆரியர் கையாண்ட எழுத்துக்களின் பிற்கால வளர்ச்சியைக் குறிப்பன வாகலாம்.

சிந்துவெளி எழுத்துக் குறிகளைக் கூர்ந்து நோக்குவோமானல், பல பொருள்களைக் குறிக்க ஒரே ஓவியம் பயன்படுத்தப்பட்டதைக் காணலாம். சான்ருக 'வெளிச்சம், விளக்கு, ஞாயிறு, ஒளி, சுடர்' என்னும் பலவற்றைக் குறிக்க ஏறக்குறைய ஒரே அடையாள எழுத்துக் காணப்படுவதைக் கூறலாம்............ ஆரியர் கி. மு. 1500–க்கு முன் இந்தியாவில் புகவில்லை. அவர் கட்கு முன் சிந்துவெளியில் இருந்தவர் திராவிடராவர்.

பலூசித்தானத்தில் உள்ள பிராகுவி மொழியில் பேரளவு திராவிடக் கலப்பு இருத்தலும், பிராகுவி மக்களின் மண்டை ஓட்டைப்போன்றவை மொகஞ்சொ-தாரோவில் கிடைத்து இருத்தலும், சிந்துவெளி மொழி பிராகுவி மொழியைப் போல ஓரசைச் சொற்கள் உடையதாக இருத்தலும், திராவிடம் ஆரியர் வருகைக்கு முன்பு வட இந்தியா முழுவதிலும் பரவி இருந்ததைப் புலப்படுத்துகின்றன. திராவிடரே தங்கள் கலைகளையும் பிறவற்றையும் ஆரியரிடம்

ஒப்படைத்தவராதல் வேண்டும்' என்ற டாக்டர் அண்ட்டரின் கருத்து ஈண்டுக் கருதத் தக்கதாகும்.[1]

'சிந்துவெளியில் கிடைத்துள்ள சில எழுத்துக் குறிகள் மழை, மூன்(று) கண், மூன்(று) மீன்கண், பேரான்(ள்), எண்ணாள், நாய், வேல், நண்டூர், வேலூர், குரங்கர், மீனவர் முதலிய சொற்களைக் குறிக்கின்றன.... ......பேராள், எண்ணாள், மூன் (று) கண் என்பன சிவனைக் குறிக்கின்றன'.

'சிந்துவெளி எழுத்துக்களைக் கொண்ட மொழி பழைய திராவிடமாகும். அத்திராவிடத்தின் பெரும் பாலான சொற்கள் தமிழிலேயே காணப்படுகின்றன. ஆயினும் சில சொற்கள் கன்னடம், துளுவம் முதலிய பிற திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றன. பிராகுவிமொழியில் உள்ள திராவிடச் சொற்களும் சிந்து, பாரசீக மொழிகளால் தம் உண்மையான ஒலிப்பு முறையை இழந்துள்ளன. எனவே, சிந்துவெளி திரா விட மொழி, இன்று பேசப்படுகின்ற திராவிட மொழி களைப் போன்றதன்று; இவற்றின் மூலமாகிய பழந் திராவிடமொழி எனக்கூறல் பொருந்தும். அது பழைய கன்னடத்தையும் சங்கத் தமிழையும் ஒருவாறு ஒத்த தாகும்'[2] என்பது சிந்துவெளி மக்கள் பேசிய மொழி ஆராய்ச்சியில், தன் வாழ்நாள் முழுவதையும் கழித்த வரலாற்று வல்லுநரான திருத்தந்தை ஈராசுப் பெருந் தகையின் முடிவாகும்.

---

[1] New Review - 1936 - P - 93 "The Riddle of Mohenjo-Daro" Article by Dr. Hunter

[2] Rev. H. Heras : Studies in Proto-Indo-Mediterranean Culture - P - 270 - 79.

சிந்துவெளி எழுத்துக்களிலிருந்து தோன்றியதே அசோகன் காலத்திய பிராமி எழுத்துக்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பிராமி எழுத்து பிற்காலத்தில் அடைந்த மாறுதல்களினால்; உருவில் வேறுபாடுடையன வாகக் காணப்படுகின்றன. வட இந்தியாவில் வழங்கிய பிராமி எழுத்துக்கள், சிந்துவெளி எழுத்துக்களினின்று பெரிதும் மாறுபட்டுள்ளன. தென்னாட்டில் வளர்ச்சி யடைந்த பிராமி எழுத்துக்கள் பேரளவில் சிந்துவெளி எழுத்துக்களின் அமைப்பினை ஒட்டியே அமைந் துள்ளன. ஆகவே, தென்னாட்டுப் பிராமி எழுத்துக்களைத் திராவிடர்கள் சிந்துவெளியில் இருந்து நேராகக் கொண்டு வந்து வழங்கி இருக்கலாம் என்று ஆராய்ச்சி யாளர் கருதுகின்றனர். இவ்விருவகை பிராமி எழுத்துக் களிலும் வடமொழி எழுத்துக்களுக்கு இல்லாத சில தனிப்பண்புகள் இருப்பதைக் கண்ட அறிஞர் ஒருவர், 'இவற்றை நாம் கவனித்தால் பிராமி லிபி முதலில் வட மொழிக்காக ஏற்படவில்லை என்றும், உயிரெழுத்துக் களுள் அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் அதிகச் சிறப்பை அளிப்பதும், மெய்யெழுத்துக்களுள் வர்க்க எழுத்துக் களைக் கொள்ளாததுமான ஒரு பாஷைக்கென அமைக் கப்பட்டுப் பின்னால், வடமொழிக்கு உபயோகப்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன என்றும் எண்ண வேண்டியிருக்கிறது. இந்தியாவில் உள்ள மொழிகளில் இவ்விதம் உள்ளது தமிழ் ஒன்றுதான். அங்ஙனமாயின் தமிழுக்கென அமைந்த லிபியாக இருத்தல் கூடுமா? இஃது ஆராய்தற்குரியது' 1 என்று அறிவித்துள்ளார்.

---

1 தி. நா. சுப்பிரமணியம்: பண்டைத் தமிழ் எழுத் துக்கள், பக்—103.

சிந்துவெளி எழுத்துக்களைப்பற்றிய ஆராய்ச்சியின் பயனாக நாம் உய்த்துணரக் கூடியது முடிந்த முடிபன்று. வருங்காலத்தில் சிந்துவெளி எழுத்துக்களைப்பற்றி அறிய புத்தொளி கிடைக்குமானால், அவ்வெழுத்துக் களைப்பற்றித் தெளிவான ஒருமுடிவிற்கு வர இயலும். அந்த நாள் வரும்வரை சிந்துவெளி எழுத்துக்கள், பழந் திராவிட மொழியின் எழுத்துக் குறிகளாக இருந்திருக்க வேண்டும் என்ற பெரும்பாலான அறிஞர்களுடைய கருத்தினை ஏற்றுக் கொள்ளுதல் சிறப்புடைத்தாகும்.

* *

6. சிந்துவெளி மக்கள்

எலும்புக் கூடுகள் :

சிந்துவெளியில் வாழ்ந்த மக்களின் எலும்புக் கூடுகள் சில கிடைத்துள்ளன. அவற்றை ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள், அவை, ஓரினத்தைச் சேர்ந்த மக்களின் எலும்புக் கூடுகள் அல்ல என்ற முடிவிற்கு வந்துள்ளனர். ஆத்திரேலியரின் மூதாதையர், நடு நிலக் கடற்பகுதியினர், மங்கோலியர், அல்பைனர் ஆகிய நான்கு வகைப்பட்ட மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது எலும்புக் கூடுகளை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இதுவரை கிடைத்துள்ள எலும்புக் கூடுகள் மிகச்சிலவாக உள்ளமையால், மொகஞ்சொ-தாரோவில் வாழ்ந்த மக்களைப்பற்றிப் பொதுவகையில் எத்தகைய முடிவிற்கும் வர இயல வில்லை.[1] அரப்பாவில் சில மண்டையோடுகள் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் முற்றிலும் ஆராயாத நிலையில் உள்ளன. சிந்துவெளி மக்கள் வாணிகத்தில் சிறந்து இருந்தமையால் பல இனத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றுகூடி மொகஞ்சொ-தாரோ, அரப்பா ஆகிய நகரங்களில் வாழ்ந்து, ஒப்பற்ற இந்நாகரிகத்தை

---

1 Dr. R. K. Mukerji: Hindu Civilization P—33.

மாட்சிமை உடையதாக்கி இருக்க வேண்டும் என்பது அறிஞர் பலருடைய கருத்தாகும்.

சிந்துவெளி நகரங்களை அழித்தது யார்?

'சிந்துவெளி மக்கள் யார்?' என்பதைப்பற்றி ஆராய்ந்த மார்ட்டிமர் வீலர், 'நிலைபெற்று விளங்கிய சிந்துவெளி நாகரிகத்தின் பேரழிவிற்குக் காரணமாக இருந்தவை எவை? அரசியல் நெருக்கடியால், பொருளியல் போராட்டத்தால் தட்ப வெப்பத் தாக்குதலால் சிந்துவெளி நாகரிகம் நலிவுற்றிருக்கு மானால், முற்றிலும் ஒரே காலத்தில் அழிவுற்றிருக்காது; அதற்கு மாறாக, ஆற்றல் குன்றி உயிர்த்துடிப்பினை இழந்திருக்கும். இன்று நமக்குக் கிடைத்துள்ள சிந்துவெளியின் சின்னங்களால், வெளிப்படையாகப் பெருந்திட்டமிட்டுச் செய்யப்பெற்ற அழிவு வேலை களினாலேயே அதன் இறுதி முடிவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. எதிர்பாராத வகை யில் கிடைத்துள்ள சான்றுகளால், இந்திரனும் அவனுடைய ஆரியர்களுமே இப் பேரழிவிற்குக் காரண மான குற்றவாளிகளாக இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது............... சிந்துவெளி நகரங்கள் இருக்கு வேதத்தில் குறிக்கப்பெறும் நகரங்களாகும்; அவை ஆரியப் படை எடுப்பாளர்களால் கி. மு. பதினைந்தாம் நூற்றாண்டு அளவில் அழிக்கப்பெற்றன என்பது இப்பொழுது பொதுவாக எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது' என்று 'ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாகித்தான்' என்னும் நூலில் குறிப்பிட்

டுள்ளார்.[1] இதனால் சிந்துவெளி மக்கள் ஆரியர்கள் அல்லர் என்பது தெளிவாக விளங்குகிறது.

திராவிட நாகரிகம் :

'சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் வேல், வேலாளன் (வேளாளன்), வேளான் ஊர் என்னும் பொருள் தரும் வகையில் குறிப்புகள் அமைந்து

" What destroyed this firmly settled Civilization? Climatic, economic, political deterioration may have weakened it, but its ultimate extinction is more like to have been completed by deliberate and large-scale destruction. On Circumstantial evidence, *Indra* and his Aryans stand accused. (If we reject this evidence, then we have assumed that, in the short interval, which can at the most, have intervened between the end of Indus Civilization and the first Aryan invasions, an unidentified and formidable Civilization arose in the same region and presented an extensive fortified front to the invaders). The assumption is a wilful and unlikely one. It is now generally accepted that the Indus cities were in fact, those referred to in the Rig Veda and that they were destroyed by the Aryan invaders in or about the 15th Century B C.'

– Five Thousand Years of Pakistan – P—24.
and also CHI–I. C.–P–92.

Sir Mortimer Wheeler.

இருக்கின்றன. இன்னும் நாய், வேலூர் முதலிய சொற்களுக்குரிய குறிப்புக்களையும் அம் முத்திரைகளில் காணுகின்றோம்.'

'இங்குத் தோண்டி எடுக்கப்பட்ட இலச்சினைகளும். லிங்கங்களும், சிலைகளும், சிவனையும் லிங்க வழி பாட்டையும் குறிப்பிடுவனவாகும். இவை முற்றிலும் திராவிட நாகரிகத்திற்குரியன என்பது திண்ணம்.'

'இவற்றைவிடச் சிறப்பானது இங்குக் காணப்படும் மீன் உருவம். பிற்காலத்திய ஆரிய நாகரிகம் மீனை இழிவாகக் கருதிற்று என்பது வேதகால வரலாற்றைச் சிறிதளவு அறிந்தவர்களுக்கும் நன்றாக விளங்கும். ஆனால் திராவிட நாகரிகத்தில் முற்றிலும் நேர்மாறான நிலையைக் காணுகின்றோம். தமிழ் நாட்டில் இப்போது காணப்படும் பல கோயில்களிலும், இந்த மீன் உருவம் மிகப் பலவாகப் பொறிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். பாண்டிய மன்னர் மீனையே தங்கள் இலச்சினையாகக் கொண்டு இருந்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆகவே சிறப்பாகப் பொறிக்கப்பட்ட இந்த மீன் உருவம் சிந்துவெளி நாகரிகத்தையும் திராவிட நாகரிகத்தையும் தொடர்பு படுத்துகிறது என்றால் அது மிகையாகாது' என்று திருத்தந்தை ஈராசுப் பெருந்தகை பல சான்றுகள் தந்து நிறுவியுள்ளார்.[1]

---

1 Rev. H. Heras: Studies in Proto-Indo-Mediterranean Culture....P....210.

'சிந்துவெளி மக்களுடைய மொழி ஆரியர்க்கு முற்பட்டது. அதற்குரிய காரணங்களாவன:—

ஆரியர்க்கு முன் வட இந்தியாவில் சிறந்த நாகரிகத்தோடு வாழ்ந்தவர் திராவிடரேயாவர்.

சிந்துவெளிக்கு அண்மையிலேயே இன்றளவும் திராவிட மொழியின் பண்புகளைப் பிராகுவி மொழியில் காண்கிறோம். ஆதலினால், சிந்துவெளியில் ஆரியர்க்கு முன் பரவி இருந்த மொழி திராவிடமே ஆகலாம்.

திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழிகள் ஆதலின் அவற்றுக்கும் சுமேரியருடைய ஒட்டுநிலை மொழிக்கும் உள்ள தொடர்பை நன்கு ஆராய்ந்து உணரலாம்'[1] என்று சர் ஜான் மார்ஷல், சிந்துவெளி மக்கள் பேசிய மொழி திராவிட மொழியாக இருந்திருக்க வேண்டும் என்பதற்குரிய சான்றுகள் தந்து விளக்கியுள்ளார். இதனால், சிந்துவெளியில் ஆரியர் அல்லாதார் வாழ்ந்தனர் என்பதும், அவர்கள் பேசிய மொழி திராவிடமொழி என்பதும் புலனாகின்றது.

பேராசிரியர் மசூம்தார், 'சிந்துவெளி மக்கள் திராவிடர்களே என்பது பெரும்பான்மையோரால் ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். இந் நாகரிகத்திற்கும், பிற்காலத்தில் திராவிட மொழிகளிலிருந்தும், அம்மொழி பேசும் மக்களிடத்திருந்தும், நாம் அறியக்கூடிய கருத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதில்

---

[1] Sir John Marshall: Mohenjo-Daro and Indus Civilization. Vol. I—P—12.

எத்தகைய ஐயத்திற்கும் இடமில்லை. சிந்துவெளி நாகரிகம் ஆரியர்கள் வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்பு சிறப்புற்றிருந்தது என்பது இதனால் பெறப்படுகின்றது.'

'நாம் தற்காலிகமாகச் சிந்துவெளி நாகரிகம் திராவிடப் பண்பாட்டினைத் தெரிவிக்கின்றது என்பதையும், அந்நாகரிகத்திற்கு உரிய மக்கள் பொதுவாகக் குறிப்பிடப்படும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ளலாம்'[1] என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது.

சிந்துவெளி மக்களைப்பற்றி ஆராய்ந்த அறிஞர்கள், இந்து சமயத்தில் திராவிடப் பண்பாக விளங்கும்

---

1 "The most widely accepted view is that the authors of the Sindhu Valley Civilization were Dravidians. There is no doubt that this Civilization closely resembles what we may derive from a study of later Dravidian Languages and the people speaking them. This view would mean the Sindhu Valley Civilization flourished long before the Aryans came into India.

We may provisionally accept the view that the Sindhu Valley Civilization represents the Dravidian Culture and its authors belonged to the racial type commonly referred as Dravidians."

—*Dr. R. C Majumdar: Ancient India - PP—27—28.*

'சிவசக்தி' வழிபாடு சிந்துவெளியில் சிறப்புற்றிருந்தமையால், அதனை மேற்கொண்டு இருந்தவர்கள் பிற்காலத் திராவிட மக்களின் மூதாதையரே என்று அறிவுறுத்தியுள்ளனர்; சிந்துவெளி நாகரிகத்தினை அழித்தவர் ஆரியர்கள் என்ற உண்மையைத் தக்க ஆதாரங்களுடன் அறுதியிட்டு உறுதிப்படுத்தியுள்ளனர். அன்றைய சிந்துவெளி நாகரிகத்தோடு இன்றைய திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் நாகரிகப் பண்பாட்டினை ஒப்பிட்டுப் பார்த்த அறிஞர்கள் இரண்டிற்குமுள்ள நெருங்கிய தொடர்பினைக் கண்டு வியப்புற்றதோடு சிந்துவெளி மக்கள் திராவிடர்களின் மூதாதையர்கள் என்ற முடிவிற்கும் வந்துள்ளனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகத்தைத் திராவிடப் பண்பாட்டில் அரும்பிய நறுமலர் என்று கூறலாம்.

* *

7. சிந்துவெளி நாகரிகத்தின் காலம்

இரும்பைக் காணோம் :

பழம் பெரும் நாகரிகங்களைப்பற்றி ஆராயும் பொழுது அதன் காலத்தை வரையறுத்துக் கூற வேண்டியது மிக இன்றியமையாததாகும். ஆரியர்கள் வருகைக்கு முன்பே இந்தியாவில் சிந்துவெளி நாகரிகம் சிறப்புற்றிருந்தமையால், அதன் தொன்மையைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. இன்றுவரை அகழ்ந்தெடுக் கப்பட்ட சிந்துவெளியின் சின்னங்களில் ஒரு சிறு இரும்புத் துண்டுகூடக் கிடைக்கவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. இதனால், இரும்புக் காலத்திற்கு முன்பு சிந்துவெளி நகரங்கள் சிறப்புற்றிருந்தன என்பது தெளிவாகின்றது. ஆரியர்கள் இந்தியாவினுள் நுழைந்தபொழுது இரும்பினால் செய்யப்பட்ட படைக் கலன்களைக் கொண்டு வந்தனர் என்பதை அறிகிறோம். சிந்துவெளி நாகரிகம் இந்திய மண்ணில் பல்லாயிரம் ஆண்டுகளாக நின்று நிலவிய ஆரியரல்லாத மக்களுடைய நாகரிகம் என்ற உண்மை இதனால் வெளிப்படுகிறது.

சிந்துவெளி மக்கள் கல்லையும், செம்பையும், வெண்கலத்தையும் கொண்டு கருவிகள் செய்து

வந்தமையால். அவர்கள் செம்பு: கற்கால நாகரிக காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். கி. மு. 2000 அளவில்தான் உலகப் பழங்குடி மக்கள் இரும்பினைப் பயன்படுத்தக் கற்றனர் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுக் கூறி வருகின்றனர். இக்காரணங்களால் சிந்துவெளி நாகரிகம், இரும்பினை உலக மக்கள் அறியாத கி. மு. இரண்டாயிரத்திற்கும், காலத்தால் முற்பட்டதாக இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

அயல்நாடுகளில் சிந்துவெளியின் சின்னங்கள் :

சிந்துவெளி நாகரிகத்தின் காலத்தைக் கணிப்பதற்கு அந் நகரில் கண்டெடுக்கப்பட்ட மண் பாண்டங்களும், வேறு பல பொருள்களும் நமக்கு உதவியாக உள்ளன. அயல்நாடுகளில்கிடைத்துள்ள பழம்பொருள்சின்னங்களைக் கொண்டு அந் நாடுகளின் நாகரிக காலத்தை வரையறுத்துள்ளனர். அவற்றோடு, சிந்துவெளியில் கிடைத்துள்ள பொருள்களை ஒப்பிட்டுப் பார்த்து ஒருவாறு இந் நாகரிகத்தின் காலத்தைக் கணக்கிட முடியும். சிந்துவெளியில் கிடைத்த சின்னங்களைப்போன்று மெசொப்பொட்டேமியாவில், தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களால் பல பழம் பொருள் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மெசொப்பொட்டேமியா நாகரிகத்தின் காலத்தை வேறு பல சான்றுகளைக் கொண்டு வரையறுத்துள்ளனர்.

இவ்வாராய்ச்சியில் முதன்மையானதாகவும் அடிப்படையாகவும் இருப்பது டாக்டர் ஃபிராங்ஃபர்ட் கண்டெடுத்த முத்திரையாகும். அவர், சிகாகோ கீழ்த்திசை நாடுகளின் ஆராய்ச்சிக்கழகத்தின்(Chicago Oriental Institute)

சார்பில் ஈராக் நாட்டில் தொல் பொருள் ஆராய்ச்சியைத் தொடங்கினர். பாக்தாத் நகருக்கு அருகில் 'தெல் ஆமர்' என்னும் இடத்தில் அகழ்ந்தெடுத்தபோது கி. மு. 2500 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்து, மண்மேடிட்ட நகர் ஒன்றைக் கண்டார். அவ்விடத்தில் சிந்துவெளி நாகரிகத்துக் குரிய முத்திரை ஒன்றைக் கண்டெடுத்தார். இதுபோன்றே சிந்து வெளியில் கிடைத்த மணிகள், மண்பாண்டங்கள், முத்திரைகள் முதலியன எகிப்து, கிரீத் (Grete) முதலிய நாடுகளின் நாகரிகங்கள் அழிவுபட்ட இடங்களில் கண் டெடுக்கப்பட்டன. இவை யாவும் சிந்துவெளியின் காலத் தைக் கணக்கிடப் பேருதவியாக உள்ளன.

மொகஞ்சொ-தாரோவின் ஏழடுக்குகள் :

மொகஞ்சொ-தாரோவில் காணப்படும் ஏழடுக்குகளும் தோன்றி மறைய 500 ஆண்டுக்காலம் பிடித்திருக்கும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. ஒவ்வோர் அடுக்கும் இரண்டு தலைமுறைகளாகிலும் அழியாது இருந்திருக்கலாம் என்று நம்புகின்றனர். இக்கணக்கின்படி மொகஞ்சொ-தாரோவின் நாகரிகம் பழங்கால, இடைக்கால, பிற்கால நாகரிகம் என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள் ளன. சிந்துவெளி நாகரிகம் மொகஞ்சொ - தாரோவின் ஏழாவது அடுக்கில் (மேலிருந்து கீழ்) முதிர்ச்சியுற்ற நிலையில் காணப்படுவதனால், அந் நாகரிகம் தோன்றி வளர்ந்து முதிர்ச்சியுறப் பல நூற்றாண்டுகள் கழிந்திருக்க வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தெல் ஆமர் என்னும் இடத்தில் சிந்துவெளி முத்திரை ஒன்று கிடைத்துள்ளதை முன்பு கண்டோம். அந்தப் பழம் பொருள் சின்னத்தின் காலம் கி. மு. 2500-க்கு முற்பட்டது என்பதை வேறு பல சான்றுகளைக்கொண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர் நிறுவியுள்ளனர்.

இதனை அளவு கோலாகக்கொண்டு பார்த்த சர் ஜான் மார்ஷல், சிந்துவெளி நாகரிகம் முழுமலர்ச்சியுற்றது கி. மு. 3250-க்கும் கி. மு. 2750-க்கும் இடைப்பட்ட காலமாதல் வேண்டும் என்பதை மொகஞ்சொ-தாரோவின் ஏழடுக்குகளைக்கொண்டு விளக்கியுள்ளார்.

நாகரிகத்தின் தோற்றம் கி. மு. 3400-க்கு முற்பட்டது

டாக்டர் ஃபேபரி (Fabri) என்ற அறிஞர் மெசொப்பொட்டேமியா, கிரீத், பாரசீகம், ஈராக் முதலிய இடங்களில் நிகழ்த்திய தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பெற்ற பழம்பொருள் சின்னங்களைச் சிந்துவெளிச் சின்னங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, சிந்துவெளி நாகரிகம் சிறப்புற்றிருந்த காலம் கி. மு. 4000 முதல் கி. மு. 2000 வரை என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். மொகஞ்சொ-தாரோவின் காலத்தைக் கி. மு. 2800-க்கும் 2500-க்கும் இடைப்பட்டதெனக் கருதுகிறார். மொகஞ்சொ-தாரோவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஏழு அடுக்குகளுக்குக் கீழ், நீரினால் சூழப்பெற்று மேற்கொண்டு அகழ்ந்து எடுக்க முடியாத வண்ணமுள்ள அடுக்குகள் யாவும் குறைந்தது கி. மு. 3400-க்கு முற்பட்டதாகலாம் என்று கணக்கிட்டுள்ளார். மேலும் சிந்துவெளி நாகரிகத்தின் தோற்றம் கி. மு. 3400-க்கும் மிக முற்பட்டதாக (குறைந்தது ஆயிரம் ஆண்டுகளாகிலும்) இருக்க வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளார்.

அறிஞர் மக்கேயின் கருத்து :

டாக்டர் மக்கே என்னும் அறிஞர் சிந்துவெளியின் காலத்தை இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் 1938ஆம் ஆண்டு அறிக்கையிலும், சிந்து

வெளி நாகரிகம் என்ற நூலிலும் நன்கு விளக்கி யள்ளார். பாக்தாத் நகரில் ஃபிராங்ஃபர்ட் அகழ்ந் தெடுத்த நகரங்களோடு, மொகஞ்சொ-தாரோவின் மேல் அடுக்குகள் ஒத்துள்ளாமையால் அவை கி. மு. 2500-ஆம் ஆண்டைச் சார்ந்தவாகலாம்; இந்த அடிப் படையில் மொகஞ்சொ-தாரோவின் காலம் கி. மு. 3000-க்கும் 2500-க்கும் இடைப்பட்டதாகலாம் என்பது அவருடைய கருத்து.

இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம்:

1940-ஆம் ஆண்டு இந்தியத் தொல்பொருள் ஆராய்ச் சிக் கழகம் வெளியிட்ட வரலாற்றுக் குறிப்பினுல், அரப்பாவின் சின்னங்கள் கி. மு. நாலாயிரத்திற்கும் மூவாயிரத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் சிறப்புடன் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. மிகப் பழங்காலத்தியதெனக் கருதப்படும் சிறு முத்திரைகள் அரப்பாவில் கண்டெடுக்கப்பட்டனவாம். அவற்றின் காலம் கி. மு. நாலாயிரத்தின் இடைப் பகுதியாக இருக்க வேண்டும் என்று மேற்கண்ட கழகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [1]

மூவகைக் கருத்துக்கள்:

பிக்கட் (Piggott) என்னும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர், அரப்பாவின் நாகரிகம் கி. மு. நாலாயிரத்திற்கும் மூவாயிரத்திற்கும் இடைப்பட்டது என்பர். [2]

---

1 The Memoris of the Archaeological Survey of India—Issued in 1940—P—112.

2 Pre-Historic India—P—142.

சர் மார்ட்டிமர் வீலர் கி. மு. இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கும் கி. மு. ஆயிரத்து ஐந்நூற்றுக்கும் இடைப்பட்டது என்பர். அவ்வாறு அவர் மிகப் பிற்காலத்தினைக் கூறுவதற்குக் காரணம் சிந்துவெளி நாகரிகம் ஆரியர்களால் அழிக்கப்பட்டதேயாகும்; ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தது கி. மு. 1500 அளவிலேயாகும். ஆகவே, அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் சிந்துவெளி நாகரிகம் சிறப்புற்றிருக்கலாம் என்பது அவருடைய நம்பிக்கை. 1

பேராசிரியர் ராதா குமுத முக்கர்ஜி சிந்துவெளியின் காலத்தை ஆராய்ந்துள்ளார். 'சிந்துவெளி நாகரிகத்தின் மொகஞ்சொ–தாரோ கூறுகள். அந்நாகரித்தின் தொடக்க காலத்தவல்ல; மொகஞ்சொ–தாரோ காலத்தைக் காட்டிலும் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிந்துவெளி நாகரிகம் வேரூன்றி வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். எனவே, சிந்துவெளி நாகரிகம் கி. மு. 3500 முதல் கி. மு. 2000 முடிய சிறந்த நிலையில் இருநதிருக்க வேண்டும்' 2 என்பது டாக்டர் முக்கர்ஜியின் முடிவாகும்.

ஈராசுப் பெருந்தகையின் கோள்நிலை ஆராய்ச்சி:

திருத்தந்தை ஈராசுப் பெருந்தகை சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகளில் உள்ள எழுத்துக்களை ஆராய்ந்துள்ளார். அவ்வெழுத்துக்கள், திராவிட மொழிகளின் தாயாக இருந்த பழந் திராவிட மொழிக்கெனை அமைக்கப்பட்டனவாகும் என்ற முடிவிற்கு வந்துள்ளார்.

---

1 CHI—IC. P. 87—*Sir Mortimer Wheeler*.

2 Hindu Civilization, PP. 29-33—*Dr. R. K. Mukerji* .

ஒரு முத்திரையில் காணப்படும் கோள்நிலைக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு கி. மு. 5762, அம் முத்திரை குறிப்பிடும் காலமாகலாம் என்று குறிப்பிட்டுள்ளார். சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலிருந்து மேற்காசிய நாடுகளுக்குச் சென்று பரவியதாகக் கருதுகிறார். "கடல் கொண்ட குமரிக் கண்டமே உலக நாகரிகத்தின் தொட்டில்; அந்நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணையாக விளங்கியது சிந்துவெளி" [1] என்பது அவருடைய முடிவான கருத்து; அவருடைய கோள்நிலை ஆராய்ச்சியின் பயனாகச் சிந்து வெளி நாகரிகத்தின் காலம் கி. மு. 5000-க்கும் முற்பட்டதெனத் தோன்றுகிறது.

சிந்துவெளி நாகரிகத்தின் காலத்தைப்பற்றி அறிஞர்கள் பலர் கொண்டுள்ள பலவகையான கருத்துக்களால் சிந்துவெளி நாகரிகம் மிகத் தொன்மை வாய்ந்தது என்பது அறியப்படுகிறது. மேலும் நெடுங்காலம் அந் நாகரிகம் நின்று நிலவியது என்பதும் புலனாகின்றது.

நாம் சிந்துவெளியின் காலத்தைக் கி.மு. ஐயாயிரத்திற்கும் கி. மு. இரண்டாயிரத்திற்கும் இடைப்பட்டதாகக் கொள்ளுவது பொருத்தம் உடையதாகும்.

* *

---

1 Studies in Proto-Indo-Mediterranean Culture, PP.275-77 — *Rev. H. Heras.*

8 சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பியல்புகள்

நாகரிகத்தின் பரப்பு:

மொகஞ்சொ-தாரோ, அரப்பா ஆகிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பழம் பொருள் சின்னங்கள் சிந்து, பஞ்சாப் மாநிலங்களில், ஒரே தன்மையுடைய நாகரிகம் பன்னெடுங்காலம் ஆழ வேரூன்றித் தழைத்திருந்ததை அறிவிக்கின்றன. இந்நாகரிகத்தின் சின்னங்கள் சிந்து வெளியில் மிகப் பலவாகக் கிடைத்துள்ளன. ஆயினும் அண்மையில்செய்யப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியின் பயனாக, அகமதாபாத் மாவட்டம் வரையிலும் சிந்துவெளி நாகரிகத்தோடு தொடர்புடைய சின்னங்கள் பல அகழ்ந் தெடுக்கப் பட்டுள்ளன. இதனால், சிந்துவெளி நாகரிகம் குறிப்பிட்ட ஓர் இடத்தையோ, வட்டாரத்தையோ சேர்ந் தது அன்று என்பது தெளிவாக விளங்குகின்றது. கிழக்கில் கங்கை ஆற்றுவெளி வரையிலும், தெற்கில் திருநெல்வேலி மாவட்டம் வரையிலும் இந் நாகரிகம பரவி இருந்ததாகச் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் பல பகுதிகளில் திகழ்ந்த நாகரிகங் களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை புலனாகின்றது.

தோற்றமும் தொடர்பும் :

செம்பு, கற்கால நாகரிகம் ஏறக்குறைய ஒரே காலத்தில் மேற்கு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் ஆற்று வெளிகளின் பல இடங்களில் தோன்றி வளர்ந்தன. ஒரு பெரும் நாகரிக இயக்கம் அக்காலத்தில் ஊற்றெடுத்திருக்க வேண்டும். அந்த ஊற்றின் சுனைகளாக நைல்நதி பாய்ந்தோடும் எகிப்திலும், யூப்ரேட்ஸ், டைகிரிஸ் பாயும் மெசொப்பொட்டேமியாவிலும், மேற்குப் பாரசீகம், ஏலம் முதலிய நாடுகளிலும் நாகரிகங்கள் சிறப்புற்று விளங்கின. எனவே, சிந்துவெளியில் சீரும் சிறப்புமிக்க நாகரிகம் நின்று நிலவியதில் வியப்பில்லை.

இந் நாகரிகங்களுக்கு இடையே பல தனிப் பண்புகளும், சில பொதுப்பண்புகளும் உள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது. எகிப்தின் அடையாள எழுத்துக்களுக்கும், கிரீத்தின் எழுத்துக்களுக்கும் பல வேற்றுமைகள் உள்ளன; அதைப்போன்று கிரீத் எழுத்துக்களுக்கும் சுமேரிய எழுத்துக்களுக்கும் சில வேற்றுமைகள் உள்ளன. இவ்வாறு எழுத்துக்கள் வேறுபட்டாலும், பொருள்களையும், கருத்துக்களையும், ஒலிகளையும் ஓவியங்களின் மூலம் குறிப்பிடும் வழக்கம் மேற்கண்ட நாகரிக நாடுகளில் எல்லாம் இருந்து வந்துள்ளன. நெசவுத் தொழில் அன்றைய உலகில் பொதுத்தொழிலாக இருந்து வந்தது. எல்லா நாட்டு மக்களும் நெய்யக் கற்றிருந்தனர். சிந்துவெளி மக்கள் பருத்தியினைக்கொண்டு நெசவுந் தொழில் செய்தனர். நைல்வெளி மக்கள் சணலைக் கொண்டு ஆடைகள் நெய்தனர். பொருள்களில்தாம் வேற்றுமை காணப்

பட்டதே ஒழிய தொழில்முறை ஒன்ருகத்தான் இருந்தது. மண்பாண்டங்களைச் செய்து மெருகிடுவது எல்லா நாகரிக நாட்டிற்கும் உரிய பொதுக் கலை. ஒவ்வொரு நாட்டிலும் செய்யப்பட்ட மண்பாண்டங்கள் அந்நாட்டு மக்களுடைய மனநிலைக்கு ஏற்ப உருவ அமைப்பிலும் மெருகிடும் முறையிலும் வேறுபட்டுள்ளன. இச் சிறு வேற்றுமைகளை ஒதுக்கிவிடுவோமானல், இவற்றிடையே பொதுமைப் பண்பு மிளிர்வதைக் காணலாம். இதைப்போன்றே சுமேரிய நாகரிகத்திற்கும், சிந்துவெளி நாகரிகத்திற்கும் இடையே பெரும் ஒற்றுமை இருப்பதைக் கண்டு மகிழலாம். 'ஆகவே சிந்துவெளி நாகரிகம், அயல்நாட்டு நாகரிகமாக இருந்திருக்க வேண்டும்; அதனை மெசொப்பொட்டேமியாவின் குடியேற்றம் என்றே கருதலாம்; நாகரிகத்தைப்பற்றிய கருத்து யூப்ரேட்ஸ், டைகிரிஸ் ஆற்று வெளியில் இருந்துதான் சிந்துவெளிக்கு வந்திருக்க வேண்டும். மேலும் சிந்துவெளி மக்களுக்கு நாகரிகத்தின் நோக்கத்தை அறிவித்ததும் ஆர்வத்தை ஊட்டியதும் அயல்நாட்டில் இருந்து வந்த அப் புதிய கருத்தேயாகும்' என்று சில மேனாட்டாசிரியர்கள்[1] கூறிவருகின்றனர்.

---

1 "It is to be supposed that the Indus Civilization, too exotic to be regarded merely as a Mesopotamian colony ....the idea of civilization came to Indus from the Euphrates, and the Tigiris, and gave the Harappaws their initial direction or at least informed their purpose," —CHI. IC—PP—93-94.

Sir Mortimer Wheeler.

அவர்கள் இவ்விரு நாகரிகங்களுக்கு இடையே காணப்படும் சில ஒற்றுமைகளைப் பெரிதாக்கிக் காட்டுகின்றனரே ஒழிய, இவ்விரண்டிற்கும் இடையேயுள்ள பல வேற்றுமைகளைக் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகின்றனர். சிந்துவெளி நாகரிகம், மிகப் பழங்காலத்திலேயே இந்திய மண்ணில் தோன்றி வளர்ந்ததற்குரிய சான்றுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. அது அயல் நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டு இந்திய மண்ணில் நடப்பட்ட நாகரிகம் அன்று; இந்திய மண்ணில் இயற்கையாக முளைத்தெழுந்த நாகரிகமேயாகும். சிந்துவெளி நாகரிகத்திற்கும் சுமேரிய நாகரிகத்திற்கும் பல துறைகளில் வேற்றுமைகள் உள்ளன.

சிந்துவெளி மக்களிடமிருந்தே கூந்தலை அழகாக ஒப்பனை செய்துகொள்ளும் கலையைச் சுமேரியாவின் பெண்கள் கற்றிருக்க வேண்டும். இன்றுவரை இந்தியப் பெண்கள் சிந்துவெளி மகளிர் கூந்தலுக்குச் செய்த ஒப்பனை முறையைப் பெரிதும் பின்பற்றி வருகின்றனர். ஆனல், மேற்காசிய நாட்டு மக்கள் இன்று அவ்வாறு கூந்தலை முடிக்கின்றனரா என்பது ஆராய்ச்சிக்குரியது.

சிந்துவெளி நாகரிகத்தை 'முதன்மையான மாக்கல் நாகரிகம்' எனலாம்; இங்கு மாக்கற்கள் பெரும் அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மெசொப்பொட்டேமியாவில் மாக்கல்லினல் செய்யப்பட்ட மணிகளைக் காண்பது மிக அரிதாக இருக்கிறது. ஆனல் அரப்பாவில் மாக்கல் மணிகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. எகிப்தில் மெருகிடப்பட்ட மிகச்சிறிய மாக்கல் மணிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி மணிகளுக்கும் அவற்றிற்கும் எத்தகைய ஒப்பு

மையும் இல்லை. மாக்கல்லினைச் செதுக்கிச் சிற்பங்கள் செய்வதிலும், மெருகிடுவதிலும் அரப்பாவில் தொழில் நுட்பக் கலை நிகரற்றது. இம்முறையை மெசொப்பொட்டேமியா, எகிப்து, கிரீத் ஆகிய நாடுகளில் காண்பது அரிது.

எகிப்திய நாகரிகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் நேரடியாகத் தொடர்பு இருந்ததாகத் தெரியவில்லை. இவ்விரு நாகரிகங்களுக்கிடையே தொடர்பு இருந்திருக்குமானால், சுமேரியர்களின் மூலமாகவே அத்தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும். சிந்துவெளி மக்கள் சுமேரியர்களுடன் பெரும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமையால், அவர்களிடம் இருந்து சில பழக்கவழக்கங்களைக் கற்றிருக்கலாம். இரு நாகரிகங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமைப் பண்புகள் இந்த வாணிகத் தொடர்பால்தான் ஏற்பட்டிருக்க வேண்டும்.

சிறப்பியல்புகள் :

சிந்துவெளி நாகரிகம் பல துறைகளில், மற்ற நாட்டு நாகரிகங்களைக் காட்டிலும் சீரும் சிறப்பும் பெற்றுத்திகழ்கிறது. இன்றுவரை உலகில் இருபதுக்கு மேற்பட்ட நாகரிகங்கள் அரும்பி, மலர்ந்து, மணம் பரப்பின; பிறகு வாடி, வதங்கி, உலர்ந்து, உதிர்ந்து விட்டன. அவற்றுள் ஈடும் இணையுமற்று விளங்குவது சிந்துவெளி நாகரிகம். மேற்காசிய—ஆப்பிரிக்க நாடுகளில் காணமுடியாத பல சிறப்பியல்புகள் சிந்துவெளி நாகரிகத்தில் சிறப்புற்று விளங்குகின்றன.

செங்கல் கட்டடங்கள் :

உலகில் முதன் முதலில் உரோமர்கள்தாம் செங்கற்களால் மாடமாளிகைகளும் வீடுகளும் கட்டினர் என்று

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் வரலாற்று ஆசிரியர்கள் கருதி வந்தனர். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இந்தியாவில் செங்கற்களால் கட்டப்பட்ட மாளிகைகள் இருந்தன என்பதைச் சிந்துவெளி நாகரிகம் உலகிற்கு உணர்த்துகிறது.

கலைப் பண்பு:

'சிந்துவெளியின் கலைப் பண்புக்கு ஈடாக, அதனோடு ஒத்த அல்லது அதனை அடுத்துப் பழமையுடையதாக எந்த நாட்டின் கலையையும் கூற இயலாது. களி மண்ணால் செய்யப்பட்ட செம்மறியாடு, நாய் முதலியனவும், முத்திரைகளில் செதுக்கப்பட்டுள்ள குறுங்கொம்புடைய நெடுந்திமில் எருதுகளும் மறைந்த நாகரிகத்தின் ஒப்பற்ற கலைச் செல்வங்களாகும். அவற்றின் உருவ அமைதியும் வடிவழகும் என்றும், எந் நாட்டுக்கும் பெருமை தருவன. கலையுலகில் கிரேக்கரின் கலைப்பண்புகள் தவிர, வேறு எவையும் அரப்பாவில் கிடைத்துள்ள இரண்டு மனித உருவங்களுக்குச் சரி நிகராகப் போட்டியிட்டு நிற்க மாட்டா' என்று சர் ஜான் மார்ஷல் சிந்துவெளியின் கலைத்திறனைப் பாராட்டியுள்ளமை இங்குக் கருதத் தக்கது.

நல்வாழ்விற்குரிய நகரங்கள் :

சிந்துவெளி நகரங்களின் நகர அமைப்பையோ, நகராட்சித்திட்டத்தையோ, உடல் நல வசதிகளையோ, மேலை நாடுகளிலும், பழம்பெரும் நாகரிக நாடுகளான பாபிலோனியா, எகிப்து, கிரீசு, உரோமர்புரி, சீன் முதலியவற்றிலும் காணமுடியவில்லை; இன்றை உலகில், வெனிஸ், வியன்ன முதலிய வாணிக நகரங்களைத் தவிர, மற்றைய நகரங்களில் இத்தகைய நல் வாழ்விற்குரிய நல் அமைப்புக்

களைக் காண இயலாது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இதனால், சிந்துவெளி நகரங்கள் நல வாழ்விற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்றிருந்தமை புலனாகின்றது. இக் காரணத்தால் சிந்துவெளி நகரங்களை 'நல வாழ்வு நகரங்கள்' (Welfare Cities) என்று கூறலாம்.

பருத்தி நூல் ஆடை :

மேலை நாடுகள் பண்டைக் காலத்தில் பருத்தி நூல் ஆடைகளை அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. அந்நாடுகள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்புதான், இந்தியாவிலிருந்து பஞ்சினை அறிந்தன. அதனால்தான், பாபிலோனியர் பஞ்சைச் 'சிந்து' என்றும், கிரேக்கர் 'சின்டன்' என்றும் பெயரிட்டு வழங்கினர். சிந்துவெளி மக்கள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சினை நூற்று, ஆடைகள் நெய்யக் கற்றிருந்தனர் என்பது வியத்தற்குரிய செய்தியாகும்.

பழம்பெரும் சமயம் :

தற்கால இந்து சமயத்தின் கொள்கைகளுக்கும், கோட்பாட்டிற்கும், மெய்யறிவிற்கும் உரியகருமூலத்தைத் தன்னகத்தே கொண்டு திகழ்வது சிந்துவெளி நாகரிகம். எந்த நாட்டிலும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிப் பல நெருக்கடிகளுக்கிடையே வளர்ச்சியுற்று நிலவும் சமயத்தினைக் காண்பது அரிது.

தனிப்பெருஞ் சிறப்பு :

'மொகஞ்சொ - தாரோவில் குடிமக்களுக்காகக் கட்டப்பெற்ற பொதுக் குளத்திற்கும், அகன்ற பெரும்

வீடுகளுக்கும் ஒப்பாகப் பண்டை எகிப்திய, மெசொப்பொட்டேமியா நாகரிக நாடுகளிலும், மற்ற மேற்காசிய நாடுகளிலும் காண முடியாது. அந்நாடுகளில் மக்களினத்தின் பொருளும் நேரமும், அறிவும் ஆற்றலும் பேரளவில் தெய்வங்களுக்குக் கோயில் கட்டுவதிலும், மன்னர்களுக்கு மாபெரும் மாளிகைகளும் கல்லறைகளும் கட்டுவதிலுமே செலவழிக்கப் பட்டிருப்பதைக் காண்கிறோம். அதே நேரத்தில், பெரும்பான்மையான மக்கள் சிறிய மண் குடிசையில் பல இன்னல்களுக்கிடையே மன நிறைவு பெற்று வாழ வேண்டிய நிலையில் இருந்தனர் என்று வரலாறு கூறுகிறது. ஆனால் சிந்துவெளியின் நிலை இதற்கு முற்றிலும் நேர் மாறானது. அதனுடைய மிகச் சிறந்த கட்டடங்கள் யாவும் நகரக் குடிமக்களின் நல்வாழ்வினையும் வசதியையும் குறிக்கோளாகக்கொண்டு கட்டப் பெற்றனவாகும்'1 என்று நமது மதிப்பிற்குரிய சவகர்லால் நேரு அவர்கள், சிந்துவெளி நாகரிகத்தின் தனிப் பெரும் சிறப்பினைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

பல துறையிலும் சீரும் சிறப்புமுற்று விளங்கிய நம் முன்னோரின் 'நயத்தக்க நனி நாகரிகத்தை' உலகம் கண்டு வியக்குமாறு செய்தது சிந்துவெளி தந்த ஒளியேயாகும். அவ்வொளி வீசிய வழியே சென்று நடுநிலை பிறழாத நன்னெறியில் நின்று ஆராய்ந்து, இப் பழம்பெரும் நாகரிகத்தினை உலகம் அறியுமாறு செய்த ஆராய்ச்சியாளர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியது நமது கடமையாகும்.

* *

1 Discovery of India—P—59, Jawaharlal Nehru.

மேற்கோள் நூல்கள்

நூல்கள் :

1. தி. நா. சுப்பிரமணியன் .... பண்டைத் தமிழ் எழுத்துக்கள்.
2. Dr. V. Gordon Childe—
   (1) What Happened in History?
   (2) New Light on the Most Ancient East.
3. Rhys Davids ....Buddhist India.
4. Rev. H. Heras ....Studies in Proto-Indo-Mediterranean Culture.
5. Jawaharlal Nehru ....Discovery of India.
6. Dr. Mackay ....The Indus Valley Civilization.
7. Dr. R. C. Majumdar ...Ancient India.
8. Sir John Marshall ....Mohenjo-Daro and Indus Civilization.
9. Dr. R. K. Mukerji ....Hindu Civilization
10. Dr. S. Piggott ....Pre-Historic India.
11 Dr. H. G. Wells ....A Short History of the World.
12. Sir Mortimer Wheeler ....
    (1) Five Thousand Years of Pakistan.
    (2) Cambridge History of India-The Indus Civilization.
13. Dr. Monier William ....The Original Inhabitants of India.

இதழ்கள் :

1. *Illustrated Weekly—Dated 14–9–58*
   Article : Harappa Culture Mound at Lothal.
   By Mr. Main Kurve
2 *The New Review —April, 1936*
3. *Tamil Cultrue Vol. VII, No.*
4. *The Memoirs of the Archaeological Survey of India* } *Issued in 1940, P—112.*

எங்கள் வெளியீடுகள்!

டாக்டர் சி. இலக்குவனார்

எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

அவர்களின் நூல்கள்

1. திருக்குறள் (எளிய பொழிப்புரை)
   (2 ஆம் பதிப்பு) விலை ரூ. 2—50
2. தொல்காப்பிய ஆராய்ச்சி விலை ரூ. 5—00
3. பழந்தமிழ் (2 ஆம் பதிப்பு) விலை ரூ. 5—00
4. இலக்கியம் கூறும் தமிழர் -
   வாழ்வியல் (சங்ககாலம்) விலை ரூ. 2—50

'கவியரசு' முடியரசனார்

அவர்களின் நூல்கள்

5. பூங்கொடி (2 ஆம் பதிப்பு) விலை ரூ. 5—00
6. வீரகாவியம் விலை ரூ. 5—00
7. வாழ்வு நெறி விலை ரூ. 1—50
   (அண்ணல் சுப்பிரமணியனாரின் கருத்துரை)
   .... தொகுப்பாசிரியர் ....
   டாக்டர். வி. கே. இராமச்சந்திரனார், M.D.,T.D.D.
8. திருக்குறள் மூலம்
   (4 ஆம் பதிப்பு) விலை ரூ. 0—50
9. அண்ணல் சுப்பிரமணியனார்
   மணிமலர் விலை ரூ. 3—00
10. சிந்துவெளி தரும் ஒளி
    (2 ஆம் பதிப்பு) விலை ரூ. 2—50
    க. த. திருநாவுக்கரசு,
    எம்.ஏ., (தமிழ்) எம்.ஏ., (வரலாறு) எம்.லிட்.